
ஒக்டோபர் 1995

www.tamilarangam.net

# எரிமலை




முல்லைத்தீவு கடற்பரப்பில் தாக்கி அழிக்கப்பட்ட
டோரா படகுகளும் தரையிறங்கு கப்பலும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




## அக்கறைப் பூக்கள்

**அன்புடன் ஆசிரியருக்கு,**

தங்கள் எரிமலையை தொடர்ந்து வாசித்து வருகிறேன். எல்லாப் படைப்புக்களுமே தரமானவை; சிறந்தவை; கண்ணீர் வரச் செய்யும், கல்லையும் கரைய வைக்கும் உண்மை நிகழ்வுகளல்லவா! எரிமலையின் ஆரம்பகாலத்தைத் திரும்பிப் பார்க்கும் போது... இன்று எவ்வளவோ பெரிய முன்னேற்றம். வெற்றி! இதற்குக் காரணம் வாசகர்களா? அல்லது உங்களது தளராத உழைப்பா?

உங்களது உழைப்பும், விடாமுயற்சியும், உறுதியும் தான்!

களத்தில் விடுதலைப்புலிகளோ இன்று உலகையே வியக்க வைக்கும் இராணுவ மாக கெரில்லா இயக்கமாக திகழ்ந்து வெற்றி வலம் வரும் போது அதற்கு வெளிநாடுகளில் உற்ற துணையாக இருக்கும் "எரிமலை"யின் பங்களிப்பு அதிசயிக்கத்தக்கது தானே!

தங்கள் பணி மேலும் தொடர என் இனிய வாழ்த்துக்கள்! நன்றி.

அன்புடன்
எஸ். சுதா
சுவிஸ்.

**அன்புடன் ஆசிரியருக்கு!**

எரிமலையைத் தொடர்ந்து படித்து வரும் வாசகர்களில் நானும் ஒருவன் என்பதில் பெரு மகிழச்சி அடைகிறேன். ஒவ்வொரு இதழும் படிப்படியாக நல்ல முகப்பு அட்டைகளைக் கொண்டு வெளி வந்தாலும் என்னை மிகவும் கவர்ந்தது. ஆவணி மாத இதழாகும். இருந்தாலும் மாதங்களை அப்பிடியே ஆங்கிலத்தில் போடாமல் தமிழ் பெயர்களிலேயே போட்டால் நன்றாக இருக்குமென்பது என் ஆசை.

ஆவணி மாத இதழில் தாய்மண் நிகழ்வுகளைக் காணக்கூடியதாக இருந்தது. நாம் தூரதேசத்தில் வாழந்தாலும் எரிமலையைப் படிக்கும் போது நாமும் தாய் மண்ணில் நிற்பது போன்ற உணர்வு தான் ஏற்படுகின்றது.

மேன்மேலும் எரிமலை நன்கு வளர வேண்டும். அதுமட்டுமல்ல வெளிநாட்டில் வாழ்பவர்கள அவரவர் உள்ளமும் செயலும் எண்ணமும் எரிமலையாக உருவெடுத்து மலரப்போகும் தமிழ் ஈழத்துக்கு அவர்களின் பணியை முன்னெடுத்து செல்லும் என்பதில் ஐயமில்லை.

தாய்மண் பற்றாளன்.
க. சு. உதயபாரதிலிங்கம்.
சுவிஸ்.

தடம் கண்டு, இடங்கண்டு, நல்ல இனம் கண்டு எரிமலை என்னைத்தேடி வந்தது! வசந்தகாற்று சுவாசித்தால் இதயம் குளிரும்! கோடையின் வெப்பம், குவைத்தில் தீப்பிழம்பாய் சுடும். இந்த வேளையில் கொட்டும் அருவியாய், குளிர்நீராய், எனக்கு தாகம் போக்கும் எரிமலையை பாராட்டுவதுடன் எனது பங்களிப்பையும் காணிக்கையாக்கினேன்.

அன்று - நீ
பனித்துளி
இன்று - நீ
எரிமலை
நாளை - நீ
தேன்துளி.

காலவோட்டத்தின், விஞ்ஞான மாற்றத்தின், எதிர்காலத்தின் நிகழ்வுகளே நான் கூறியது.

இவ்வண்ணம்
குவைத்குயில்
A. ஆரோக்கியநாதன்

**அன்பு மிக்க எரிமலை ஆசிரியர் அவர்கட்கு!**

நாங்கள் தாங்கள் அனுப்பும் எரிமலை புத்தகத்தை ஆவலுடன் படித்துக் கொண்டு இருந்தோம்.

அது இன்று வரும் நாளை வரும் என்று காத்துக் கொண்டு இருந்தோம். ஆனால் சுமார் இரண்டு மாதம் மூன்று மாதமாக வரவில்லை. என்ன காரணம் தெரியப்படுத்துங்கள்.

நாங்கள் எரிமலையின் மூலம் பல செய்திகளையும் பல உங்கள் இயக்கத்தின் நுணுக்கங்களையும் அறிந்து கொள்ளுகிறோம். நாங்கள் அறிந்து கொண்டதை மற்றவர்களுக்கும் தெரியப்படுத்துகிறோம். ஒரு சிலருக்கு புத்தகத்தை கொடுக்கிறோம். அதன் மூலம் உங்கள் இயக்கத்தின் நோக்கம் பலர் புரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. உங்கள் எரிமலையின் மூலம் தற்கொடையாளர்கள், கடற்புலிகள் குறித்தும் அவர்களது வீரதீர செயல்கள் குறித்தும் அறிந்து கொள்ளுகிறோம். அந்த வாய்ப்பு இரண்டு மூன்று மாதமாகத் தடைபட்டுப் போனது. ஆதலால் மிக வருந்துகிறோம். மற்றவை தங்கள் மடல் கண்டு. தங்கள் எரிமலை எங்களுக்கு கிடைக்க வேண்டும்.

இங்ஙனம்
வீ. தங்கவேலு.
பெங்களூர் மாவட்டம் சிறுபான்மை நல குழு.

**அன்புள்ள எரிமலை ஆசிரியர் அவர்கட்கு,**

புதுவை ரமேஸின் நன்றி கலந்த கடிதம். தாங்கள் அனுப்பிய ஜூலை இதழ் கிடைக்கப் பெற்றேன். இதற்கு முன்பாக வெளிவந்த மூன்று இதழ்கள் வந்து சேரவில்லை. அதை தாங்கள் எனக்கு தயவு கூர்ந்து அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் தலைவர் பிரபாகரன் அவர்களது புகைப் படங்கள் அனுப்பி வைக்கவும். "வெலி ஓயாவில்" நடந்த சிங்கள ராணுவத்தின் எதிர்த்தாக்குதலில் கொல்லப்பட்ட எனது அருமை தம்பிகளுக்கு எனது சோகம் கலந்த வீர வணக்கங்கள். மேற்கொண்டு இந்த சூழ்நிலை மேலும் ஏற்படாமல் நம் தோழர்கள் மனம் தளராமல் களத்தில் நின்று ஈழம் ஒன்றே குறிக்கோளாக இருக்கும் படி இந்த சாதாரண தமிழனின் அன்பான வேண்டுகோள். தங்களால் முடியுமானால் தலைவர் குரல் பதிந்த ஒலிப்பேழை எனக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**வெல்க புலிகள்! வாழ்க அவர்களது புகழ்!!**

மிகுந்த தமிழ் உணர்வுமிக்க
மு. ரமேஸ்
தமிழ்நாடு

### எரிமலை ஒரு பார்வை

யூன்மாத இதழ் - *1995.*

ஈழதேசத்தில இரத்தம் தோய்ந்த வரலாறுகளை எழுதிய எதிரியின் இரும்புப் பறவைகள் ஆயிரம் துகள்களாக வீழ்த்தப் பட்ட போது எங்கள் பூமி சிரித்தது. புலிகளின் போர் ஆற்றல் கண்டு பொங்கும் இன்ப வெள்ளத்தில் திளைத்தது.

அப்புன்னகைப் பூக்களையே தன்முகமாகக் கொண்டு வெளிவந்த யூன்மாத எரிமலை இதழ் என் இதயத்தில் இன்னொருபடி உயர்ந்து நிற்கின்றது.

அக்கறைப்பூக்கள்: அந்நியதேசங்களில் புலம் பெயர்ந்து வாழும் தமிழீழ நெஞ்சங்களின் தாயக நினைவுகளை தரிசிப்பதற்கு இது ஒரு களமாக அமைகிறது.

வாழ்க்கையின், எமது தேசிய வாழ்வின் சகல பரிமாணங்களிலும் வியாபித்து நிற்கும் ஒரு வரலாற்று இயக்கத்திலிருந்து கலைஞர்களும் அறிஞர்களும் அந்நியப்பட்டு நிற்க முடியாது.

அரசியல் வேறு இலக்கியம் வேறு என்று கருதி நழுவிக் கொள்பவர்களுக்கு தலைவரின் இக் கூற்று மிகவும் பயனுள்ள தாகும். பொன்னிற மாலையைக் கொன்ற போர்விமானங்களை வீழ்த்திய புலிகளின் போர்த்திறன் கண்டு இந்தப் பூமியே பிரமிப்பில் ஆழ்கிறது.

"தமிழன் வரலாறு பொய்ப்பதில்லை; காரணம் அவன் வரலாற்றைத் திரிப்பதில்லை; பொறிக்கிறான்" என்ற வரிகளுக்கு இக்கட்டுரை சான்று பகர்கின்றது. "மண்ணுள் சிதறிய மானுடவாழ்வு" புகைப்படம் கோடை வெய்யிலிலும் இரத்தம் உறைகிறது.

நெஞ்சை விட்டகலாத, நெஞ்சைவிட்டு மட்டுமல்ல தமிழீழ கலை இலக்கிய வரலாற்றிலும் இக்கருத்தரங்கு நிச்சயம் தனக்கென முத்திரை பதிக்கும்.

காரணம் கூறிவிடு - பொன்னிலா
மங்கை நளாயினியுடன்
வாமனும் லக்ஸ்மனும்
கற்பிட்டிக் கடலினிலே
கலந்து மறைந்ததையா
எதை எண்ணிப் பொங்குகின்றாய்?
நில் அலையே
நீட்டுயர்ந்து ஆர்ப்பரிப்பதன்
காரணம் நீ கூறிவிடு!

(தொடர்ச்சி 20-ம் பக்கம்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# போரில் வெற்றிபெற அனைத்துத் துறைகளிலும் தாக்குதலை முன்னெடுக்க வேண்டும்

சந்திரிகா அம்மையார் பதவிக்கு வரமுன்னரும், சமாதானப் பேச்சு வார்த்தை நடந்த காலத்திலும், போர்நிறுத்தம், சமாதானம், மனித உரிமை என்று பேசி வந்தார். சமாதானத் தேவதையாக பவனி வந்தார். பத்திரிகைச் சுதந்திரத்தைக் கொண்டு வரப்போவதாகக் கூறினார். ஆறுகள், வாவிகளில் சிதைக்கப்பட்ட உடல்களை ஓடவைத்தவர்களை நீதியின் முன் நிறுத்தப் போவதாகக் கூறினார். ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கப்போவதாக கூறினார். தமிழ் மக்களின் கஸ்டங்களை நீக்கி அவர்கள் மனங்களை வெல்லப்போவதாகத் தெரிவித்தார். போரை நிறுத்தி இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப் போவதாகப் பிரகடனம் செய்தார். இவை ஒன்றுமே நடைபெறவில்லை. உள்ளூர் பத்திர்கைகளுக்கு செய்தித்தணிக்கை முழுமையாக அமுல்படுத்தப்பட்டுள்ளது. ஆறுகள், வாவிகள், வயல்வெளிகளில் தமிழர்களின் சித்திரவதை செய்யப்பட்ட சடலங்கள் காணப்படுவது தொடர்கிறது. ஜனாதி பதியின் அறிக்கைகள் குறைக்கப்படவில்லை. தமிழ் மக்கள் மீது பொருளாதார தடை மேலும் இறுக்கப்பட்டுள்ளது. உணவு, மருந்து இன்மையால், மக்களின் கஷ்டங்கள் பல்மடங்காய் அதிகரித்துள்ளன. பொதுமக்கள் குடியிருப்புக்கள் மீதான, எறிகணை, குண்டு வீச்சுக்களால் பெண்கள், குழந்தைகள், வயது போனவர்கள் மட்டுமல்ல, பாடசாலை மாணவர்களும் கொல்லப்படும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. கோவில்கள், வீடுகள், மட்டுமல்ல பள்ளிக்கூடங்களும் தாக்கப்படும் கோரம் நிகழ்த்தப்படுகிறது. குடாநாட்டைக் கைப்பற்றும் போர் நடவடிக்கை என்ற ரீதியில் ஒரு இனப்படுகொலை சந்திரிகாவால் நடத்தப்பட்டு வருகின்றது. இவ் வருட முடிவுக்குள் விடுதலைப் புலிகளை நசுக்குவோம் என்று சூளுரைத்துள்ள அரசாங்கம், இவ் வருட முடிவுக்குள் தமிழ் மக்களையும், அவர்களின் சொத்துக்களையும் அழித்தொழித்து விடும்போல் தெரிகிறது. இவற்றை நோக்கும்போது உண்மை ஒன்று தெளிவாகிறது. அதாவது சமாதானப் பேச்சுக் காலத்தில் மறைமுகமாக இருந்த இராணுவத் தீர்வுத் திட்டமானது, பேச்சுவார்த்தை முறிவடைந்து, சண்டை தொடங்கியவுடன் வெளியரங்கமான ஓர் விடயமாக நடைமுறைப்படுத்தப்படுவதுதான். ஆகவே, விடுதலைப் புலிகள் ஏப்ரல் 19-ம் திகதி திருகோணமலையில் 2 பீரங்கிப் படகுகளைத் தாக்கியதன் பொருள் என்ன? சமாதான முகமூடி கிழிக்கப்பட்டு, இராணுவக் கோர முகம் வெளிப்படுத்தப்பட்டதே அதன் அர்த்தமாகும். அரசாங்கத்தின் இராணுவத் தீர்வுத் திட்டம் என்ற பேயுருவம் உலகுக்கும் பகிரங்கப்படுத்தப்பட்டது மாத்திர மல்ல, பேரினவாதத்தின் பேருருவமும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. சந்திரிகா அரசாங்கம், சில தீர்வுத் திட்ட யோசனைகளை முன்வைத்தது. அந்த யோசனை களை மலினப்படுத்துவதற்குரிய பல தடுப்புக்களை வைத்துக் கொண்டே முழுமையான ஒரு திட்டமாகப் பிரகடனப்படுத்தினார் சந்திரிகா. தமிழ் மக்களின் அடிப்படை அபிலாஷைகளை ஏற்காத, ஒருசில சலுகைகளுக்கே, பெரும் எதிர்ப்புக் கிளம்பியது. சிங்களப் பேரினவாதம் உருவெடுத்து ஆடியது. 67% சிங்கள மக்கள், இந்த யோசனைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். சிங்கள இனவாதத்தின் உண்மையான கோரத் தோற்றத்தை, தமிழ் மக்கள் தொடர்ந்து ஏமாற்றப்பட்ட அண்மைக்கால வரலாற்றை சரியாக அறிந்து கொள்ளாத சர்வதேச சமூகம் நன்கு அறிந்துகொண்டது. சந்திரிகா அம்மையாரும், தீர்வுத் திட்ட யோசனைகள், தடுப்புக்களைக் கடக்க முன்னரே அவற்றில் மாற்றங் களைச் செய்ய முற்பட்டார். இதன் மூலம் தானும் குறைவில்லாத சிங்களப் பேரினவாதி என்பதை உலகுக்கு நிரூபித்துக் காட்டினார்.

சிங்களப் போர் அரக்கன் எமது வாசல் கதவைத் தட்டுகின்றான். அவனை வென்று எமது மண்ணை விட்டுப் புறமுதுகு காட்டி ஓடச் செய்ய வேண்டும். அதற்கு நாம் தாக்குதல் நடவடிக்கைகளை முடுக்கிவிட வேண்டும். தாயகத்தில் இராணுவத்திற்கு எதிரான தாக்குதல் நடவடிக்கை முழு மூச்சாக முடுக்கி விடப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் உள்ள நாம் அந்த நடவடிக்கைக்கு முழுமையாக நிதி, மற்றும் சகலவிதமான ஒத்துழைப்புக்களையும் செய்தல் வேண்டும். அது மாத்திரமல்ல, சிறீலங்கா அரசாங்கம் தொடர்பான சமாதான மாயை இன்னும் உலக மக்களினதும், உலக நாடுகளினதும் மனங்களில் இருந்து அகலவில்லை. இம் மாயையை அகற்றுவதற்கு, சிறீலங்காவின் பிரச்சாரத்திற்கு எதிரான பிரச்சாரத் தாக்குதல் ஒன்றையும் (Propaganda offensive) வெளி நாட்டில் வாழும் தமிழ் மக்கள் செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.


# எரிமலை

கலை பண்பாடு

அரசியல் சமூக ஏடு

★

பதின்நான்காம் ஆண்டு

ஒக்டோபர் 1995

★

ஆக்கங்கள்

அபிப்பிராயங்கள்

மற்றும் தொடர்புகட்கு

★

**எரிமலை**

தாய்மண் வெளியீடு

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு

C/O T.C.C-France,

341, Rue des Pyrénées,

75020 Paris.

Tel: 43 58 11 42


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## புலிகளின் குரல்

# மேலும் ஒரு மனப்புரட்சி அரங்கேறி வருகிறது!

இதுவும் ஒரு புரட்சி என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை. தமிழீழ தேசிய பாதுகாப்பு நிதிக்கான பணத்தை மனமுவந்து, பெருந்தொகையில் - மக்கள் வழங்க முன்வந்துள்ள நிகழ்ச்சி, உண்மையில் தமிழரின் மன அரங்கில் நிகழ்ந்துள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு புரட்சிதான். தமிழ்த் தேசியத்தின் வளர்ச்சி கொடுத்துள்ள தேசாபிமான உணர்வும், சிங்கள அரசின் கொடூர ஆட்சியால் எழுந்துள்ள இன்றைய யதார்த்தமும் ஒன்றிணைந்து, இந்த மனப்புரட்சியை ஏற்படுத்தி உள்ளன.

இதேவேளை தலைவர் பிரபாகரனின் தலைமையில் மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையையும் அவரது தலைமைக்கு மக்கள் கொடுத்துள்ள பேராதரவையும், மக்களிடம் ஏற்பட்டுள்ள இந்த எழுச்சி துல்லியமாகக் காட்டுகின்றது.

போராளிகள், மாவீரர் குடும்பங்கள், ஏழைகள், பணவசதி படைத்தோர் என்ற பேதமில்லாமலும் மத நிறுவனங்கள், சனசமூக நிலையங்கள் என்ற விதிவிலக்குகள் இல்லாமலும், தமிழீழ தேசிய பாதுகாப்பு நிதிக்கு மக்கள் வழங்கும் பேராதரவு காரணமாக, புலிகள் இயக்கமே, ஒட்டு மொத்தமாக, புளகாங்கிதம் அடைந்து போய் உள்ளது.

ஆயுதப் போரை நடாத்தும் ஒரு விடுதலை இயக்கத்தின் முதுகெலும்பு அதன் இராணுவ பலம் என்றால், அதன் குருதிச் சுற்றோட்டம் நிதி வளம் ஆகும்.

ஆட்தொகையிலும், ஆயுத பலத்திலும் முன்பிருந்ததைவிடக் கணிசமான வளர்ச்சியைப் பெற்றபடி, மூன்றாம் ஈழப்போரை புலிகள் நடாத்திக்கொண்டிருக்கின்றார்கள். போரிலும் முன்னணியில் இருக்கின்றார்கள். இந்த நிலையில், புலிகள் இயக்கத்தின் இராணுவ வளர்ச்சியைச் சிதைக்கும் இலக்குடன் சந்திரிகா - ரத்வத்த அரசு மரபு வழிப் போர்முறையில் உள்ள ஒரு போர் உபாயத்தை ஈவிரக்கமின்றிப் பயன்படுத்த முயல்கின்றது.

அதாவது, படைக்கல சக்தியை அதிகம் பயன்படுத்திச் சமர்களை வெல்ல முயல்வதே அந்தப் போர் உபாயம் ஆகும். தனது பக்கத்தில் உயிரிழப்புக்களைக் குறைக்கும் நோக்குடனும், தமிழர் தரப்பில் பெருமளவு உயிரிழப்புக்களை ஏற்படுத்தும் ஆசையுடனும், படைக்கல சக்தியை அபரிதமான அளவில் பயன்படுத்தச் சிங்களப் படைகள் முயல்கின்றன. முப்படைகளினதும் ஆயுத பலத்தை உபயோகித்து எறிகணைகள், பீரங்கிக்குண்டுகள், விமானக் குண்டுகள் மற்றும் அனைத்து வகை வெடி பொருட்களையும் ஒரு குறித்த பகுதியை நோக்கி ஒருங்கு திரட்டிப் பயன்படுத்தி, புலிகளுக்கும், மக்களுக்கும் பாரிய உயிரழிவுகளை உண்டு பண்ணி, அதன் மூலம் சமர்களை வெல்ல அரசுப் படைகள் முயல்கின்றன. “ஒப்பரேசன் முன்னோக்கிப் பாய்தலில்” தொடங்கி இன்றுவரை நடைபெறும் சிறு சிறு இராணுவ நடவடிக்கைகளிலும் இந்த அபரிதமான படைக்கல சக்தி பயன்பாட்டை நாம் கவனிக்கலாம்.

சிங்களப்படைகள் மேற்கொண்டு வரும் இந்த வகைப் போர்முறை, செலவு கூடிய ஒன்றாகும். ஆயினும், அரசு என்ற வகையில், அந்தச் செலவுகளை ஈடுகட்டக்கூடிய வசதி சிறீலங்காவுக்கு உண்டு.

இதேவேளை, “முள்ளை முள்ளால் எடுப்பது போல” இப்போது சிங்களப் படைகள் பயன்படுத்தும் போர் உபாயத்தையே எமதியக்கம் பயன்படுத்த வேண்டிய கட்டாயத்திற்குள் தள்ளப்பட்டுள்ளது. ஆனால் அந்தப் பணக்காரத்தனமான போர் உபாயத்தை தத்தெடுக்கும் வலுவை எமது மக்கள்தான் புலிகள் இயக்கத்திற்கு வழங்க வேண்டும்.

பலத்த நம்பிக்கையை ஊட்டக்கூடிய வகையில், பெரும்பாலான மக்கள் அதை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். தமது உழைப்புக்களில் இருந்து அல்ல, தத்தம் சேமிப்புக்களில் இருந்து போராட்ட நிதிக்குப் பணத்தை கொடுத்துவரும் தேசபிமானச் செய்திகளை, அன்றாடம் நாம் அறிந்தபடியே உள்ளோம்.

நிதித்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழேந்தி அவர்கள் கூறியது போல, உத்தேசத் தொகையான 100 கோடி ரூபாவை மக்கள் வழங்கி, தமது வரலாற்றுக் கடமையை நிறைவேற்றுவார்களானால், புலிகள் இயக்கமும் ஒரு வரலாற்று வெற்றியை மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கும்.”

சிறு சிறு இராணுவ நடவடிக்கைகள் என்ற பெயரில் குடாநாடு மீதான பாரிய படையெடுப்பு ஒன்றிற்கான இராணுவ ஒத்திகைகளில் சிங்களப் படைகள் ஈடுபடுகின்றன.

அந்தப் பாரிய படையெடுப்பின் தொடக்க நாள் எதுவென சந்திரிகா - ரத்வத்த அரசு தீர்மானிக்கலாம், ஆனால், எவ்வளவு காலம் அது தொடர்ந்து நடைபெறப் போகின்றது, யாருக்குச் சார்பாக அது முடிவடையப் போகின்றது என்ற விடயங்களை, தமிழரின் படைபலம்தான் தீர்மானிக்கப் போகின்றது.

சிங்களப் படைகள் மேற்கொள்ள இருக்கும் படையெடுப்பை முறியடித்து, வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கை புலிகள் இயக்கத்திற்கு உண்டு. அத்தகையதொரு வரலாற்று வெற்றிக்கான முன்னேற்பாடுகளில், தலைவர் பிரபாகரன் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

இந்த நெருக்கடி மிகுந்த நிலைமையில் மக்களிற்கும் ஒரு வரலாற்றுக் கடமை இருக்கின்றது. அதாவது, புலிகள் இயக்கத்தின் போர்த் தேவைகளை, அது ஆட்களை வழங்குவதோ அல்லது நிதியை வழங்குவதோ, ஈடுசெய்யத் தயாராக இருப்பது தான்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

# கடலுள் பாய்ந்த AN-32 விமானம்

செப்டம்பர் மாதம் 13-ம் திகதி காலை 7 மணி. கொழும்புக்கு வடக்கே இரத்மலானை விமானத்தளத்திலிருந்து AN-32 இராணுவப் போக்குவரத்து விமானம் புறப்பட்டது. இரண்டரை மாதங்களுக்கு முன்புதான், ரஸ்யத் தயாரிப்பான இவ்வகை விமானங்கள் மூன்று உக்ரேனிடமிருந்து வாங்கப்பட்டன. ஒவ்வொரு விமானமும் 45 லட்சம் டொலர் (2250 இலட்சம்) ரூபா பெறுமதியுடையவை. இவை, தரையிலிருந்து வானை நோக்கி ஏவப்படும் ஏவுகணைகளை நடுவழியில் கண்டு பிடித்து விடும் கருவிகளையும், ஏவுகணைகளைத் திசைமாற்றி விடுகின்ற சூடான ஒளிச்சிதறல்களை வெளிவிடுகின்ற கருவிகளையும் கொண்டவை. இவ்வகை விமானங்கள் உலகம் பூராவிலும், குறிப்பாக இந்தியாவில் ஏவுகணைகளை எதிர்த்து வென்று சாதனை படைத்தவை.

அன்று காலை இரத்மலானையிலிருந்து யாழ்ப்பாணத்திலுள்ள பலாலிக்குப் புறப்பட்ட AN-32 விமானம் 75 பேர்களை உள்ளடக்கியிருந்தது. இவ் விமானம் 'சார்ளி றோமியோ 861' (Charlie Romeo 861) என்ற இலக்கத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்தது. 68 இராணுவத்தினரும், 2 பொலிஸாரும், 5 விமானிகளும் அங்கிருந்தனர். ரஞ்சன் பாக்கியநாதன் என்பவரே தலைமை விமானியாக இருந்தார். இவரது தாயார் சிங்களவர். தகப்பன் தமிழர். சிங்கள மனைவியும் இரண்டு பிள்ளைகளும் உள்ளனர். மிகவும் அனுபவம் வாய்ந்த விமானியாகவும், 8000 மணித்தியால பறப்பு நேரங்களைக் கொண்டவராகவும் இருந்ததோடு, AN-32 விமானத்திலும் 200 மணித்தியாலங்கள் பறந்துள்ளார். சிறீலங்கா அரசாங்கத்தின் அதி விசுவாசியாக இருந்ததாக அவரது இதுவரையான பதிவேடு கூறுகிறது. இவ்வருடம் ஏப்ரலில் இரண்டு 'அவ்ரோ' விமானங்கள் பலாலியில் சுட்டுவீழ்த்தப்பட்ட பிறகு முதன்முதலாக, பலாலி விமானத் தளத்திற்கு 'அவ்ரோ' விமானம் ஒன்றை எடுத்துச்சென்று திரும்பிய பெருமை இவருக்கிருக்கிறது. சிறீலங்காவின் இராணுவ நடவடிக்கைகளில் இவரது விமானங்கள் ஆற்றிய சேவை குறித்து, விமானப்படையின் உயர் விருதான 'மாஸ்ரர் கிறீன்' (Master Green) வழங்கப்பட்டது. எனவே, அரசியல் தலைவர்களையும் ஏற்றிச்செல்லும் அனுமதி இவருக்கு வழங்கப்பட்டதோடு, புதிதாக இறக்கப்பட்ட 'அன்ரனோவ்-32' விமானம் ஒன்றின் தலைமை விமான ஓட்டியாகவும் (Squadron leader) நியமிக்கப்பட்டார். மேலும் மூன்று உப விமான ஓட்டிகள், ஒரு திசைகாட்டுனன் (Navigator) என்ற ரீதியில் விமான ஓட்டிகள் குழு (Crew) ஐந்து பேராக இருந்தது.

**- மதி -**

5.6 தொன் நிறைவான பொருட்களைக் காவக்கூடிய இவ் விமானம் இராணுவத் தளபாடங்களையும், இராணுவப் பாவனைப் பொருட்களையும் எடுத்துச் சென்றது. பலாலியில் கடமை புரிகின்ற பொலிஸ் அதிகாரிகளுக்கான சிகரட் பொதிகளும் அங்கிருந்தன. அவ்விமானத்தில் சென்ற இரண்டு பொலிஸ்காரர்களில் ஒருவர் தவராஜா என்ற தமிழ் சப் இன்ஸ்பெக்டராக இருந்தார்.

15 நிமிட நேரங்களில் இரத்மலானையிலிருந்து புறப்பட்ட விமானம், 8000 அடி உயரத்தில், கொழும்புக்கு வடக்கே, நீர்கொழும்புக்கு நேராகக் கடலில், 23 மைல் தொலைவில் பறந்துகொண்டிருந்தது. தலைமை விமான ஓட்டி பாக்கியநாதன், அப்பகுதியில் திரண்டிருந்த கருமேகக் கூட்டம் பற்றித் தெரிவித்தபோது, இரத்மலானை விமானநிலையத்திலிருந்து கட்டுப்பாட்டாளர், 145 பாகையில் வலது பக்கம் விமானத்தைத் திருப்புமாறு கூறியுள்ளார். ஆயினும் என்ன காரணத்தினாலோ, பாக்கியநாதன் இடதுபக்கம் திருப்பியுள்ளார். அப்படி முழுமையாகத் திருப்புவ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தற்கு முன்னர், விமானம் 'ராடர்' திரையிலிருந்து இல்லாது போய் விட்டதைக் கண்டுள்ளார். விமானம் காணாமல் போனது 5 செக்கன்களில் நடந்து முடிந்துவிட்டது. 8000 அடி உயரத்தில் பறந்த விமானம் தரையைத் தட்ட அரை நிமிடமாவது பிடிக்கும். எனவே, ஏதோ திடீர் அசம்பாவிதம் நடந்துவிட்டதை உணர்ந்துகொண்ட கட்டுப்பாட்டாளர் விமானப்படை தலைமையகத்துக்கு உடனே அறிவித்துள்ளார். அப்பகுதிக்கு விரைந்த ஹெலிகொப்டர்களும், ஜயசாகர கப்பலும், ஏனைய 3 கடற்படைப் படகுகளும், அப்பகுதிக் கடலில், எண்ணைப் படலங்கள் மிதந்துகொண்டிருப்பதைக் கண்டு, விமானம் கடலினுள் வீழ்ந்ததை உறுதிப்படுத்தியுள்ளனர். விமானத்திலிருந்து வெளியே வீசப்பட்ட, ஆயுதப்படையினருக்குச் சொந்தமான பல பொருட்களையும் கடற்படையினரும், அவர்களது நீரடி நீச்சல் குழுவினரும் கண்டெடுத்தனர். அதுமாத்திரமல்ல, திசைகாட்டுனனது (Navigator) சிதறுண்ட உடல் மாத்திரம் கடலில் மிதந்தபோது எடுக்கப்பட்டது.

சிறீலங்கா விமானப்படை தலைமையகம், உடனடியாக விசாரணைக் குழுவொன்றை நியமித்தது. விமானத்திலிருந்து கண்டெடுக்கப்பட்ட பொருட்களும், சடலமும் ஆராயப்பட்டன. இரத்மலானை விமானத் தளம் மூடப்பட்டு, அங்கு வேலை செய்தோர் விசாரிக்கப்பட்டனர். விமானத்தில் பழுது, காலநிலை பாதிப்பு, சதி வேலை ஆகிய ஊகங்கள் முன்வைக்கப்பட்டன. புதிதாக வாங்கப்பட்ட விமானத்தில் ஓரிரு சிறு குறைபாடுகள் காணப்பட்ட போதும், ஏராளமான மாற்று முறைகளைக் கொண்ட (backup system) இவ் விமானம், இயந்திரக் கோளாறினால் விழும் சாத்தியமில்லை என்று கூறப்பட்டது. காலநிலை பாதிப்பு என்று கூறும்போது, இரத்மலானையிலிருந்து, டுபாய் நோக்கிப் புறப்பட்ட UL 563 என்ற எயர் லங்கா பயணிகள் விமானம் எவ்வித சிக்கலுமின்றிச் சென்றது சுட்டிக் காட்டப்பட்டது. எனவே, சதிவேலை என்ற கருதுகோளை முதன்மையாக வைத்தே, விசாரணைக் குழு ஆய்வு செய்ததாகத் தெரிகின்றது. இந்த அடிப்படையில், முதலில் தமிழர்கள் மீதே சந்தேகப்பார்வை திரும்பியது. ரஞ்சன் பாக்கியநாதன், நவாலிக்



தலைமை விமானியான ரஞ்சன் பாக்கியனாதனும் அவது மனைவி பிள்ளைகளும்

குண்டுவீச்சின் போது, தமிழ் மக்கள் 120 பேர் கொல்லப்பட்டதைக் கண்டோ, கேட்டோ மனம்மாறி இதைச் செய்திருக்கலாம் என்ற கோணத்தில் ஒரு விசாரணை முடுக்கிவிடப்பட்டது. கட்டுப்பாட்டாளரின் ஆலோசனை இவரால் மீறப்பட்டதும் சுட்டிக்காட்டப்பட்டது. இப்படி ரஞ்சன் செய்ய விரும்பினால், அரசியல், இராணுவத் தலைவர்களைக் கொண்டு செல்லும் போது செய்திருக்கலாம் என்பது அவரது மனைவியின் வாதம். சப் இன்ஸ்பெக்டர் தவராஜா, பலாலியிலுள்ள பொலிஸ்காரர்களுக்கென கொண்டு சென்ற சிகரட் பொதிகளுக்குள் குண்டு வைக்கப்பட்டிருக்கலாம் என்பது இன்னொரு கோணத்திலான விசாரணைக் குழுவின் ஆராய்வு. எனவே, சிகரெட் பொதிகளை விமானத்தில் ஏற்றியோர், இரத்மலானை விமான நிலையத்தில் விசாரிக்கப்பட்டனர். மேலும் சிகரெட் பொதிகளைக் கடைசியாகச் சோதனை செய்த இரண்டு தமிழ் பொலிஸ்காரர்களும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தகவல் ஒன்று தெரிவிக்கிறது. முன்னர் விமானங்கள் விழுந்தபோது சிங்களவர்கள் எவரும் சதிநாச வேலையில் ஈடுபட்டிருப்பார்கள் என்று சந்தேகம் எழுப்பவில்லை. விசாரணையும் நடத்தவில்லை. சிறீலங்கா அரசாங்கத்துக்கு அதிவிசுவாசமாக நடந்துகொண்ட போதிலும் தமிழர்கள் என்ற ரீதியில் சந்தேக ஊகங்கள் கிளப்பப்படுவதும், விசாரணைகள் நடைபெறுவதும், சிங்கள பேரிவாதத் தன்மையையே காட்டுவதாக 'ஈழநாதம்' பத்திரிகை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




வெடித்துச் சிதறிய விமானத்திலிருந்து கண்டெடுகப்பட்ட பொருட்கள்

தமிழீழத்தில் ஆசிரியர் தலையங்கம் தீட்டியது. விமானத்தில் என்ன நடந்தது என்ற உண்மை நீண்ட காலத்துக்கு வெளியே வரப்போவதில்லை என்றும் அது ஆருடம் தெரிவித்தது. சதிநாசவேலை என்ற கருதுகோளின் விளைவாக, ஏனைய இரண்டு AN-32 விமானங்களும், வடபகுதிக்குப் பறப்பது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. இரத்மலானை விமான நிலையத்திலிருந்தோ, ஏனைய விமானத்தளங்களிலிருந்தோ சிறியரக விமானங்கள் விடுதலை புலிகளினால் கடத்தப்பட்டு, முக்கியம் வாய்ந்த அரசாங்கக் கட்டிடங்கள் தாக்கப்படலாம் என்ற அச்சமும் ஆயுதப்படைத் தலைமையிடம் ஏற்பட்டது. இதன் விளைவாக, சகல தனியார் உல்லா சப்பயண விமானச் சேவைகளும், பயிற்சிப் பறப்புகளும் அரசாங்கத்தால் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இடைநிறுத்தம் நீக்கப்படாவிட்டால், இத் தனியார் சேவையினை தென்னிந்தியாவுக்கோ, மாலை தீவுக்கோ இடம் மாற்றம் செய்ய உள்ளதாக தனியார் விமான நிறுவனங்கள் மிரட்டியுள்ளன.

AN-32 விமானங்கள், வட பகுதியில் அரசாங்கம் நடத்தத் திட்டமிட்டுள்ள பாரிய இராணுவ நடவடிக்கைக்கு அத்தியாவசியமெனக் கருதி, அவசரமாகப் பெரும் விலை கொடுத்து இறக்கப்பட்டன. கடற்படைக் கப்பல்கள் பல தாக்கி அழிக்கப்பட்டதன் பின்னர், ஏவுகணை எதிர்ப்புக் கருவிகளைக் கொண்ட இவ்வகை விமானங்கள், இராணுவத் தளபாடம், துருப்புக்கள் ஆகியவற்றை வடபகுதி இராணுவ நடவடிக்கையின் போது, உடனுக்குடன் அனுப்ப வசதியாக இருக்கும் எனக் கருதப்பட்டது. மேலும் காயம்பட்ட இராணுவத்தினரையும் உடனுக்குடன் கொழும்புக்கும் அனுராதபுரத்திற்கும் அனுப்ப தகுதியானதெனக் கருதப்பட்டது. எனவேதான், கடல்மார்க்கமாகத் தூரச்சென்று, பலாலியை அடையும் மார்க்கத்தையும் விமானப்படை கண்டுபிடித்தது. ஆயினும், கடலுக்குள் அவ் விமானம் சங்கமமானது, ஆயுதப்படைத் தலைமைக்கும், அரசாங்கத்துக்கும் பெரும் குழப்பத்தையும், ஏமாற்றத்தையும் கொடுத்துள்ளது. மேலும், 5 மாதகாலத்துள், 2 அவ்ரோ விமானப் போக்குவரத்து விமானங்கள், 1 புக்காரா குண்டு வீச்சு விமானம், ஒரு அன்ரனோவ்-32 விமானப் போக்குவரத்து விமானம் ஆகியன அழிந்து போனதுமல்லாமல், 10 திறமையும், அனுபவமும் வாய்ந்த விமானிகளின் இழப்பு அரசாங்கத்துக்கு பெரும் நட்டமாய் உள்ளது. அது நடத்தவிருந்த பாரிய இராணுவ நடவடிக்கைக்குப் பெரும் பின்னடைவையும், காலதாமதத்தையும் ஏற்படுத்தி உள்ளது. எனவே, அன்ரனோவ்-32 விமானங்கள் பாதுகாப்பான முழுச் சேவையில் ஈடுபடுத்தப்படும் கால எல்லைவரை குடாநாட்டின் மீதான பாரிய தாக்குதல் தள்ளி வைக்கப்படும் நிர்ப்பந்தமும் ஏற்பட்டுள்ளது. காரணம், குடாநாட்டில், குவிக்கப்பட்டுள்ள நாற்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினருக்கான விநியோகம், அரனோவ்-32 இன் உதவியின்றி நடைபெறுவது அசாத்தியமே.

கடலின் அடியில், 1000 அடிக்கு அப்பால் விமானம் இருப்பதாகக் கூறப்படுகின்றது. அது முழுமையாக இருக்கின்றதா, சிதறுண்டு துண்டுகளாக இருக்கின்றதா என்பது வேறு விசயம். இதனை நீர்மூழ்கிக் கப்பல்கள் மூலமே வெளியில் எடுக்கலாம் என்று முயற்சி எடுக்கப்பட்டது. இந்தியா, ருஷ்யா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய இந்து சமுத்திரத்தில் நீர்மூழ்கிக் கப்பல்களைக் கொண்ட நாடுகளிடம் உதவி கேட்கப்பட்டது. அவ்விமானத்தை வெளியில் எடுப்பதற்கான செலவுக்கு ஈடாக, மூழ்குண்ட விமானத்தின் பெறுமதி இராது என சுட்டிக் காட்டப்பட்டு இவ்வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டதாக அறியப்படுகின்றது. எனவே, வெளிநாடுகள் சிறீலங்கா அரசாங்கத்துக்குக் கொடுக்கும் ஒவ்வொரு பொருளுக்கும் சிறீலங்கா அரசாங்கம் ஏதோ ஒரு வழியில் விலையைச் செலுத்திக் கொண்டிருக்கிறது அல்லது செலுத்தும் என்பது தெளிவாகின்றது. உக்ரேனிலிருந்து வந்த விமான நிறுவனமும் கையை விரித்துவிட்டதாகக் கூறப்படுகின்றது. எனவே, சிறீலங்காவின், நீரடி நீச்சல்காரர்கள், தங்கள் உள்ளூர் உத்திகளைக் கையாண்டு விமானத்தை மீட்க முற்படுகின்றனர். 100 அடிக்குக் கீழே நீருக்குள் மூழ்குவதற்கே கருவிகளோ தொழில் நுட்பமோ இல்லாத நிலையில் சிறீலங்கா தேசம் உள்ளது. சிலவேளை, விடுதலைப் புலிகளின் உதவியைக் கேட்டால், அவ்விமானத்தை எடுத்துத் தர அவர்கள் முன்வரலாம்.

தான் செல்ல வழியில்லை; மூஞ்சூறு விளக்குமாற்றையும் காவிச் சென்றதாம். அதுபோலத்தான், சிங்கள தேசம் தான் செல்ல வழிதடுமாறிக் கொண்டு, தமிழ் தேசத்தை அடக்கவும் முற்படுகின்றது.

இரு தேசங்களும் இணைந்து செயற்பட்டால், நீருள் மூழ்கிய விமானத்தை மட்டுமல்ல, இந்த அழகிய இலங்கைத் தீவையும் மீட்டு 'சொர்க்க பூமி' என்ற அதன் பெயரை நிலைநாட்டலாம். ★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



www.tamilarangam.net

# கொஞ்சம் கொஞ்சமாய் அவிழ்ந்த கனவு

ஹேமா (16-05-95)

நேற்றும்
பின்னிரவில் வந்த கனவொன்றில்
ஊருக்குப் போய் வந்தேன்.

தூக்கத்தில்
'நரி வெருட்டிய' சிறு குழந்தையாய்
சிரித்தபடியே கண்ட கனவு
பாதியில் முறிந்தபோது
அழுதிற்று என் மனது.

கலைந்த கனவை வலிந்து மீட்டிட
துண்டு துண்டாய் மீண்ட கனவில்
அழகான
என் வீடு தெரிந்தது.

என் அன்னை
பாத்திரம் கழுவி ஊற்றிய தண்ணீரை
பருகி வளர்ந்திட்ட தென்னை தெரிந்தது.
அருகே
செழித்து வளர்ந்திட்ட சீமைக்கிழுவை மரம்
சிலவேளை
சின்னதாய் கொஞ்ச பூப்பூக்கும்.
நானும் என் தங்கையும்
வீடு கட்டி குடிபுகுந்து
சமைத்து உண்ணும்
கோடிப்புறம் தெரிந்தது.

முற்றத்திற்கு முகம் காட்டி நிற்கும்
தலைவாசல்
பண்டிகை நாட்களில்
என் அன்னை குந்தி இருந்து
தன் கையால்
செம்மண் பூசி அழகு ஏற்றும்
திண்ணை தெரிந்தது.
வெய்யில் நாட்களில்
காற்றுப்பட
அத் திண்ணைமீது உறங்கி விழிப்பது
சொர்க்கம்.

காலை நேரத்தில்
சிரித்து நிற்கும் செவ்வரத்தையும்
வாசல் நெடுக
போராளிகளாய் அணிவகுத்து நிற்கின்ற
மணிவாழையும்
தெரிந்தன.

கொஞ்சம் கொஞ்சமாய் அவிழ்ந்த கனவில்
என்னை மட்டும் காணவில்லை.
தாய்நிலம் மிதிக்கும்
சுகத்தினை இன்று நான்
கனவிலும் இழந்தேனோ?

இன்னும்
பனிக்குள் புதைந்திட்ட கால்களை இழுத்து
கரை சேர்த்திட துணிவின்றி
தொடரும் போரினை
பொய்யாய் நொந்தபடி
அடுத்த கனவுக்காய்
காத்திருக்கிறது மனது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# சாதனை படைத்த கடற்சமர்


www.tamilarangam.net

உலகிலேயே கடற்படைப் பிரிவொன்றை வைத்துப் போராடிய கெரில்லா இயக்கமென்றால் அது விடுதலைப் புலிகள் இயக்கம்தான். கப்பல் ஓட்டிய தமிழனாக மட்டும் இல்லாமல் கப்பல் சமர்களைப் புரியும் தமிழனாகவும் ஈழத் தமிழர்கள் விளங்குகிறார்கள். நவீன ஆயுதக் கருவிகளையும், நவீன கடற்போர் உத்திகளையும் கையாண்டு சண்டையிட்டு வரும் கடற்புலிகள், தங்கள் தாக்குதல் நடவடிக்கைகளில் தற்கொலைத் தாக்குதல்களையும் தேவை கருதிப் புகுத்தியுள்ளனர். இத்தகைய தற்கொலைத் தாக்குதல்களை, இன்று உலகில் பொருளாதாரப் பெருவல்லரசாக விளங்கும் ஜப்பானின் போர் வீரர்கள் 2-ம் உலக யுத்தத்தின் போது செய்து உலகை வியப்பில் ஆழ்த்தினர். உயிராயுதம் என்பது சாதாரண விடயமல்ல. ஆழ்ந்த விடுதலைப் பற்றுணர்வின் அடிப்படையில் எழுகின்ற உயிரீகமே அது. தாய், தாய் மண், தாய்மொழி ஆகியவற்றில் கொண்ட ஆறாத காதலே இத்தகைய தன்னலமறுப்புக்கும் உயிர்த் தியாகத்துக்கும் காலாய் அமைகிறது.

காங்கேசன்துறைக் கடற்பரப்பில் செப்டம்பர் மாதம் 20-ம் திகதி நடைபெற்ற கடற்சமர் பல்வேறு காரணங்களால் முக்கியத்துவம் பெறுகிறது. இச்சண்டை மாலை 5 மணிக்கு ஆரம்பமாகி இரவு 10 மணிவரை இடம் பெற்றது. கடற்புலிகளின் மூன்று அணியினரும் மூன்று பிரிவாகச் சென்று தாக்குதல் நடத்தினர். கடற் கரும்புலி அணி, சாள்ஸ் கடல் தாக்குதல் படையணி, நளாயினி கடல் தாக்குதல் படையணி ஆகியவை இணைந்து இச் சமரில் பங்கு கொண்டன. கடற்புலிகளின் 'வோட்டர் ஜெட்' அதிவேகப் பீரங்கிப் படகுகள் (இவை பூநகரிச் சமரில் சிறீலங்காப் படையிடமிருந்து கைப்பற்றப்பட்டவை), ஏனைய வேகப் படகுகளில், காங்கேசன்துறை துறைமுகத்துள் நுழைந்து தாக்குதலை மேற்கொண்டனர். இச்சண்டையில் கடற்புலிகள், சிறீலங்கா கடற்படையிடமிருந்து கைப்பற்றப்பட்ட 20-மி.மீ. ஒலிகன் பீரங்கிகளைப் பயன்படுத்தியும் சண்டையிட்டனர். சிறீலங்கா கடற்படையின் அதிவேக பீரங்கிப் படகுகளும், பீரங்கிக் கப்பல் ஒன்றும் எதிர்த்தாக்குதலை மேற்கொண்டன. இரு பகுதியினருக்கும் இடையில், கடும் துப்பாக்கி, பீரங்கி மோதல்கள் இடம்பெற்றன. சண்டை தொடங்கிய அரை மணி நேரத்தில், வெடி மருந்து நிரப்பப்பட்ட கடற் கரும்புலிப் படகு கடற்படையின் 'டோரா'ப் படகுடன் மோதியது. 'டோரா' பீரங்கிப் படகு வெடித்துச் சிதறியது. படகிலிருந்த கடற்படையினர் அனைவரும் கொல்லப்பட்டனர். தீப்பற்றிய 'டோரா'ப் படகு மெல்ல மெல்ல மூழ்கத் தொடங்கி, கடற்புலிகளின் கண்முன்னாலேயே துறைமுகக் கடலுக்குள் மறைந்து விட்டது.

இதேவேளை, இராணுவ ஆயுத தளபாடங்களை ஏற்றி இறக்கும் 'லங்கா முடித்த' இராணுவ போக்குவரத்துக் கப்பல், காங்கேசன்துறைத் துறைமுகத்தின் ஒரு பகுதியில் பொருட்களை அவசரமாக இறக்கி விட்டு, யாழ். குடாநாட்டிலுள்ள இன்னொரு கடற்படைத் துறைமுகமான காரைநகருக்குச் சென்று கொண்டிருந்தது. இதனைப் பின் தொடர்ந்து துரத்தி வந்த கடற்புலிப் படகுகள், இதன் மீதும் தாக்குதலை மேற்கொண்டன. மாதகல் கடற்பரப்பில் வைத்து இதன் மீதும் இன்னொரு கரும்புலித் தாக்குதல் நடாத்தப்பட்டது. இக் கப்பலும், மீண்டும் சேவையில் ஈடுபடுத்த முடியாதவாறான பாரிய சேதத்துக்கு உள்ளாகியது. 1989-ம் ஆண்டு சிறீலங்கா கப்பல் கூட்டுத்தாபனத்தால் கொள்வனவு செய்யப்பட்ட இக்கப்பல், நவீன பாரந்தூக்கிகளைக் கொண்டது. இதன் மூலம், அதிபார இராணுவத் தளபாடங்களையும் ஏற்றி இறக்கும் வலிமை கொண்டது இக் கப்பல். கடற்புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத 'டோரா'ப் படகுகள் துறைமுகத்தின் உள்பகுதிக்குப் பின்வாங்கிச் சென்றன. பீரங்கிக் கப்பலும் ஆழ்கடல் நோக்கிப் பின்வாங்கி ஓடித் தப்பிக் கொண்டது.

பெருமை வாய்ந்த இக் கடற் சமரில், பருத்துறையைச் சேர்ந்த மேஜர் அந்தமான் (அன்பு இராமசாமி. இவர் கடற்புலிகளின் முல்லை மாவட்ட அரசியல் பொறுப்பாளராக இருந்தார்), பளையைச் சேர்ந்த மேஜர் (கீர்த்தி வல்லிபுரம்), மண்டைதீவைச் சேர்ந்த கப்டன் சிவா (மோகனதாஸ்), சுளிபுரத்தைச் சேர்ந்த கப்டன் செவ்வானம் (கிருஷ்ணபிள்ளை சுமதி) ஆகியோர் வீரச்சாவடைந்தனர். பெண் கடற் கரும்புலியான கப்டன் செவ்வானம் "புலிப்பாய்ச்சல்" நடவடிக்கையின் போது காங்கேசன்துறைத் துறைமுகத்தில் 'எடித்தாரா' என்ற கட்டளைக் கப்பல் மூழ்கடிக்கப்பட்ட தாக்குதலின் போது இறந்துபோய் விட்டதாக அறிவிக்கப்பட்டார். ஆயினும், அவர் எதிரியிடமிருந்து தப்பி, நீண்ட தூரம் நீந்தி பின்னர் கடற்புலிகளின் தளம் வந்து சேர்ந்தார். தமிழீழக் கடலில், பல்லாயிரம் உயிர் விதைகளாய்ச் சங்கமமாகிய இம்மாவீரர்களின் பெயர்களை கடல் அன்னை மட்டுமல்ல தமிழீழமே உச்சரித்தவண்ணம் உள்ளது. 30 நாட்களுக்குள் 4 டோராப் படகுகள் கடலுள் மூழ்கடிக்கப்பட்டு, இராணுவப் போக்குவரத்துக் கப்பல் ஒன்று செயலிழக்கச் செய்யப்பட்டு, இராணுவ நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட பயணிகள் கப்பலொன்று கைப்பற்றப்பட்டதென்பது உலக சாதனையாகும். இக் காலத்துள் மூன்று கரும்புலித் தாக்குதல்கள் நடைபெற்றதும் கடற்போர் வரலாற்றிலே இன்னொரு சாதனைப் படைப்பாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எதிர்காலச் சிற்பிகள்

தமிழீழ பூமியில் உக்கிரமான போர் நடந்து கொண்டிருக்கின்றது. அதிநவீன ஆயுதங்களை சிறீலங்கா அரசு பாவித்து தமிழர்களைக் கொலை செய்கின்றது.

அதனை எதிர்த்து தமிழீழ வீர மறவர்கள் மன உறுதியைப் பிரதான ஆயுதமாகப் பாவித்து மண்ணை மீட்கும் போரில் ஈடுபட்டுள்ளார்கள். உயிராயுதங்களைப் பாவிக்கும் ஞானிகளுக்கு முன்னே சிங்கள ஏகாதிபத்தியம் ஆட்டம் கண்டுள்ளது.

இந்த நிலையில்கூட போரின் அனர்தங்களினால் சொந்தங்களை இழந்த சின்னஞ் சிறுசுகளை ஒன்றிணைத்து ஒழுங்கான கல்வி புகட்டும் மாபெரும் கைங்கரியம் ஒன்று தமிழீழத்தில் நடந்து கொண்டிருக்கின்றது.

'செஞ்சோலை', 'காந்தரூபன் அறிவுச்சோலை' அமைப்புக்களில் எமது எதிர்கால வாரிசுகள் கட்டுக்கோப்பான முறையில் வளர்க்கப்படுகின்றார்கள்.

அண்மையில் தமிழீழம் சென்றிருந்த ஐ. நா. அதிகாரிகள் இந்த அமைப்புக்களின் வளர்ச்சி கண்டு ஆச்சரியம் தெரிவித்தனர். போரின் அனர்த்தங்களுக்கு மத்தியில் இப்படியும் ஒரு அரும்பணியா என்று அவர்கள் வியப்புடன் வினவியுள்ளனர். எங்கள் செல்வக் குழந்தைகளை அவர்கள் தட்டிக் கொடுத்தனர்.

ஐ. நா. மனிதாபிமான விவகாரங்களுக்குப் பொறுப்பான ஆலோசகர் திரு. ரோலன்ட் ஹட்சன், கல்வி அபிவிருத்தி நிறுவன பிரிட்டா ஹொட்ஸ்பேக் ஆகியோரே தமிழீழம் சென்றிருந்த மேற்படி அதிகாரிகளாவர். செஞ்சோலை, காந்தரூபன் அறிவுச்சோலை சிறுவர்கள் இவர்களின் மனதை ஆழமாகத் தொட்டுவிட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழீழத்தில் கல்வியும், மனிதாபிமானமும் சங்கமிக்கும் ஓரிடத்தில் அவர்களின் மனம் இளகியதில் வியப்பேதுமில்லை. தமிழர்களின் இந்தத் தார்மீகத்தை அவர்கள் உலகுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

தமிழர்கள் பயங்கரவாதிகள் என்றும், மனநோயாளர்கள் என்றும் சிறீலங்கா அரசினால் செய்யப்படும் பிரச்சாரங்கள் உண்மைக்கு மாறானவை என்பதை அவர்கள் மாத்திரம் அறிந்தால் போதாது. தமிழீழத்தில் மனிதநேயமிக்க, மனவலிமை படைத்த விடுதலை வீரர்களைச் சந்தித்ததாக அவர்கள் சகலருக்கும் பகிரங்கப்படுத்த வேண்டும். 'செஞ்சோலை', 'காந்தரூபன் அறிவுச்சோலை' சிறார்களின் கள்ளங்கபடமற்ற சிரிப்பிலும் பல அர்த்தங்கள் உண்டு. அதை அவர்களும் புரிந்து கொண்டுள்ளார்கள்.

"எனது தேசத்தின் எதிர்காலச் சிற்பிகளாக ஒரு புதிய இளம் பரம்பரை தோற்றம் கொள்ள வேண்டும். ஆற்றல் மிக்கவர்களாக, அறிவுஜீவிகளாக, தேசப்பற்றாளர்களாக, போர்க் கலையில் வல்லுனர்களாக ஒரு புதிய, புரட்சிகரமான பரம்பரை தோன்றவேண்டும். இந்தப் பரம்பரையே எமது தேசத்தின் நிர்மாணிகளாக, நிர்வாகிகளாக, ஆட்சியாளர்களாக உருப்பெற வேண்டும்." என தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் தமது உள்ளக்கிடக்கைகளை வெளியிட்டார்.

"இந்தக் குழந்தைகள் யாருமற்றவர்களல்ல. தமிழன்னையின் புதல்வர்கள். வரலாற்றுப் பெருமைமிக்க சுதந்திரப்போராட்ட சூழலில் இந்த இளம் விதைகளைப் பயிரிடுகின்றோம். இவை வேர்விட்டு வளர்ந்து விழுதுகள் பரப்பி விருட்சங்களாக மாறி, ஒரு காலம் தமிழீழத் தேசத்தின் சிந்தனைச் சோலையாக சிறப்புற வேண்டுமென்பதே எனது ஆவல்."

'செஞ்சோலை', 'காந்தரூபன் அறிவுச்சோலை' சிறார்கள் எந்தளவு எதிர்பார்ப்புடன் வளர்க்கப்படுகின்றார்கள் என்பதை தமிழீழத் தேசியத் தலைவரின் இந்த உரைகள் விளக்குகின்றன.

1991-ம் ஆண்டு ஜீலை மாதம் தொடங்கிய 'செஞ்சோலை' மகளிர் பாடசாலை 1991-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 22-ம் திகதி வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. 23 மாணவர்களுடன் ஆரம்பமான செஞ்சோலை இன்று வளர்ச்சியடைந்து இருநூறுக்கும் அதிகமானவர்களைக் கொண்டதாக செயற்படுகின்றது.





மூன்று வயதிற்கும் பதினைந்து வயதிற்கும் உட்பட்ட பெண்களுக்கு இங்கு கல்வி வழங்கப்படுகிறது. கல்வியின் நோக்கம் பரீட்சைக்கு மாணவர்களைத் தயாரிப்பதல்ல; வாழ்க்கைக்குத் தேவையான பூரண ஆளுமை உள்ளவர்களை உருவாக்குவது தான் எமது நோக்கம் என்கிறார் 'செஞ்சோலை' அமைப்பின் பொறுப்பாளர் ஜனனி.

பல்வேறு சூழலில் இருந்து வந்தவர்கள் இங்கு கல்வி பயில்கிறார்கள். பாலர் வகுப்பிலிருந்து ஆண்டு ஆறு மட்டும் வகுப்புக்கள் இயங்குகின்றன. பிள்ளைகளின் உடல் வயதிற்கும் உள வயதிற்கும் ஏற்றாற் போல் வகுப்புக்களில் மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளார்கள். ஓர் உண்மைமிக்க, நீதிமிக்க கல்வி அமைப்புப் பற்றிக் கனவு கண்டு கொண்டிருப்பவர்களுக்கு செஞ்சோலை மகளிர் பாடசாலை ஒரு கொடையாக அமைந்துள்ளது. செஞ்சோலை மாணவர் தொகை அதிகரித்தவண்ணமிருக்கிறது. இதனால் பாடசாலையை விருத்தி செய்யவேண்டியுள்ளது. பாடசாலைக்கென புதிய கட்டிடங்கள் தேவையாகவுள்ளது. வன்னிப் பகுதியில் புதிய பாடசாலையொன்று கட்டப்பட்டுக்கொண்டிருக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் அரியாலையில் செஞ்சோலை மகளிர் பாடசாலைக்காக புதிய கட்டிடம் ஒன்றை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இக் கட்டிடம் செஞ்சோலையினால் திட்டமிடப்பட்ட அம்சங்களை உள்ளடக்கியதாக கட்டப்படவுள்ளது.

இப்பாடசாலை 22 லட்சத்து 70 ஆயிரம் ரூபா செலவில் கட்டமதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் தொகையை புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் வழங்கி எமது சமுதாய வளர்ச்சியில் பங்குகொள்ள வேண்டும். தங்கள் பகுதி செஞ்சோலை பொறுப்பாளர்களை அணுகி உங்களால் இயன்ற தொகையை இக் கட்டிட நிதிக்காக வழங்க வேண்டும்.

நன்கொடையாளர்கள் நிதி இலகுவாக வழங்க வசதி செய்யும் பொருட்டு ஒவ்வொரு அம்சங்களுக்கும் தனித்தனியாக செலவு மதிப்பிடப்பட்டுள்ளது.

கூட்ட மண்டபம் அமைக்கவும், நிர்வாக அலுவலகம் அமைக்கவும் தலா ஒன்றரை இலட்சம் ரூபா செலவாகும். ஒரு வகுப்பறை அமைக்க ஒன்றரை இலட்சம் ரூபா வீதம் ஏழரை இலட்சம் ரூபாவில் 5 வகுப்பறைகள் கட்டப்படவுள்ளன. கைப்பணியகமும், நூலகமும் அமைக்கத் தலா ஒன்றரை இலட்சம் ரூபா வீதம் மூன்று இலட்சம் ரூபா செலவாகும். மாதிரி பாலர் பாடசாலை அமைக்க ஒரு இலட்சத்து எண்பதினாயிரம் ரூபாவும், மூலவள நிலையம் அமைக்க இரண்டு இலட்சத்து பத்தாயிரம் ரூபாவும், ஆய்வு கூடம் அமைக்க ஒன்றரை இலட்சம் ரூபாவும், மனையியற்கூடம் அமைக்க ஒரு இலட்சத்து எழுபத்தையாயிரம் ரூபாவும், விளையாட்டு மைதானம் அமைக்க இரண்டு லட்சத்து ஐயாயிரம் ரூபாவும் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

எமது தேசியத் தலைவரின் கனவை நனவாக்கும் செஞ்சோலை அமைப்புடன் நாமும் இணைந்து கொள்வோம். கட்டிடம் அமைய எமது ஆதரவுக் கரங்களை செஞ்சோலை சிறார்களுடன் இணைத்துக் கொள்வோம்.

**வீ. ஆர். வரதராஜா**

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கற்பூர வாசத்தைக் கழுதை அறியாதே!

வானத்துத் தேவதை பூமிக்கு வருகின்றாள்.
வரம் கேட்கக் காத்திருப்பவர்களே
வரிசையாக வாருங்கள்.
"வெண்தாமரைத்" தட்டேந்திய 'வெடியரசி'
வீதிக்கு வருகின்றாள்.
எல்லோரும் எழுந்து நில்லுங்கள்.
'நாவாலி நரபலி'யின் நாயகி உலாவருகின்றாள்.
பிக்குகளே 'பிரித்'தோதுங்கள்.
தலதாமாளிகையின் தங்கக் கலசமே!
'சந்திரிகா'வுக்கு வாழ்த்துக் கூறுக.
அலரிமாளிகை அலங்கார ரூபிணி
'கொரகொல்லைச் சமாதி'யைக்
கும்பிடவருகின்றாள்.
எடுபிடிகளெல்லோரும் எழுந்து புறப்படுக.
நாடாண்ட பண்டார நாயக்கா திருமகளே!
ஈடாடிக் கொண்டிருக்கும் ரத்வத்த மருமகளே!
செந்தமிழர் குடியழிக்கத் தேரெடுத்த சீமாட்டி!
தேசமெல்லாம் தீமூட்டும் சிங்களவர் பெருமாட்டி!
தாய் வாழ்வு வாழ்க! தமிழ் வாழ்வு வீழ்க!
"கட்டியக்காரக் கதிர்காமரே" வருக!
இதை எட்டு முறை சொல்லுக.
என்னது?
உன்னால் முடியாதா?
கதிர்காமா எதிர்வாதமா புரிகின்றாய்?
என்ன; உனக்குத் தமிழே தெரியாதா?
மன்னிக்க;
ஆத்திரத்தில் அவசரப்பட்டு விட்டேன்.
உன்னைப் போலொருவன்
உலகத்தில் கிடையாது.
அடிமைக்கு நீயே அசல்.
தமிழே தெரியாத தமிழனே!
காக்கை வன்னியன் கடைசித் தம்பியே!
ஆங்கிலத்தில் சொல்லு அதுபோதும்.
அடுத்து "ஆராத்தியெடுக்கும் அழகி" யார்!?
பத்மாவா?
பலே; பொருத்தமான பொடிச்சி.
"பல்லக்குக்காவி செல்லச்சாமி"யே!
பக்கத்தில் வருக.
நல்ல பலசாலிகள் நாலுபேர் வேண்டும்.
கனதூரம் 'காவ வேண்டும்'
இடையிடையே 'காலும் பிடிக்க வேண்டும்.'
எச்சில் துப்பும்போது
'இருகையில் ஏந்தவேண்டும்.'
எவரெவரென்று பேர்சொல்லு பார்க்கலாம்?
"உடுப்பிட்டிச் சிங்கம் சிவா"
"திருமலைச் செயல்வீரன் சம்பந்தன்"
"அத்தியடிக் குத்தியன் டக்ளஸ் தேவானந்தா"
மற்றது யார்?
"மாணிக்க தாசன்"
அச்சா; அருமையான தெரிவு.
இவர்களுக்கு
எலும்புகூட எறியவேண்டியதில்லை.
பழைய செருப்புக்கே
பல்லிளிக்கக் கூடியவர்.
நிலபாவாடை விரிப்பவன் யார்?
"நீலன் திருச்செல்வம்"
சபாஷ்.
அள்ளக் குறையாத அறிவுத் திலகத்துக்கு
வெள்ளைத் துணிவிரிக்கும் வேலையா?
வெகு பொருத்தம்.
ஆயிரம் கண்ணுடைய ஆத்தாளுக்கு
சாமரம் வீசுவது யார்?
"அஷ்ரப்"பை அழைத்து வாருங்கள்.
சவரி பற்றி வீசட்டும். காற்று வரட்டும்.




**- வியாசன்**


பெற்ற தாயைக் கூட நிறுத்து விற்கும்
எட்டப்பர் கூட்டமே!
தமிழனின் மானத்தையும், வீரத்தையும்
எங்கே அடகு வைத்தீர்கள்?
கசாப்புக்கடை வாசற் காகங்களாகக்
கழிவுகள் தூக்கவா காத்திருக்கின்றீர்?
உங்களையும் ஒருத்தி பெற்றாளே
என்ன பாவம் செய்தாளோ!
எத்தனை வதைக்கிடையில் எம்நாடு.
நீங்கள் பத்திரிகையில் பார்த்தது பாதி
பாழிருட்டில் போனது மீதி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நெடிய பனையாய் நிமிர்ந்துள்ள தேசத்துக்கு...
கொடிய விஷமேற்றக் குதிப்பவர்களே
தமிழன் எதிரியால் அழிந்ததை விட
துரோகியால் எரிந்ததே அதிகம்.
இந்த வரலாறு இன்றுவரை நீண்டு
உங்களிடம் வந்து முடிகிறது.
உதிரம் சொரிந்து வளர்த்த உரிமைப் பயிரை
கருக விடச் சொல்லும் கறுப்புச் சட்டைகளே!
நாளை காலமெழுதும் தீர்ப்பின்
வாயில் விழுந்து போவீர்கள்.
நாங்கள் காற்றிடமிருந்து காப்பாற்றி
போற்றி வணங்கும் 'புனித நெருப்பை'
ஊதியணைக்கும் உரிமையை
உங்களுக்குத் தந்தது யார்?
கானல் நீரில் கை நனைக்கத் துடிப்பவரே!
கனவிற் கண்ட தெருவில்
பயணம் புறப்பட்டு
இன்று காடுமாறி விட்டீர்கள்.
இனி வீடுவர மாட்டீர்கள்.
விடுதலைப் போராட்ட மென்பது
வாய் கிழியும் வார்த்தைகளாலான
வானவில்லல்ல.
புள்ளடி போடும் கள்ள வியாபாரமல்ல.
அது உயிர் கொடுத்து வாங்கும் உரிமம்.
சத்தியத்துக்கான யுத்தம்தான்
உரிமைக்கான திசைகாட்டும்.
வழி தவறாத 'நேர்கோடே' வழிகாட்டும்.
உயிர்ப்பூவே விடுதலைக்கு உரியமலர்
'பிள்ளைகளின்' பொன்னுடலம் வீழும்
ஒவ்வொரு கணமும்
பூமிப்பந்தே புல்லரித்துக் கொள்ளும்.
காற்றின் கண்களும் கலங்கும்
மேகங்கள் கூட மௌனமாகும்.

www.tamilarangam.net

நெஞ்சக் கூட்டுக்குள் நெருஞ்சி குத்தும்.
உங்களுக்கு இவையொன்றும் உறைக்காது.
வேரிழந்து போன மரங்களுக்கு
நீரினைப் பற்றி எப்படித் தெரியும்?
உங்களை எவர்தான் கணக்கிலெடுத்தார்?
சுவர் வெடித்தும்,
கூரை சிதலமாகியும் விட்ட
பழைய வீட்டுக்கு எவர்தான் வர்ணம் பூசுவர்?
என்றாலும்...
பத்திரிகைகள் படிக்கும் போதுதான்
பற்றிக் கொண்டு வருகிறது.
விடுதலைக்கு அதிக விலை கொடுத்து விட்டும்
விஸ்வரூபமாக நிற்கும் எங்கள் தலைவிதியை
தூரத்திலுள்ள
நீங்களெப்படித் தீர்மானிக்க முடியும்?
கற்பூர வாசத்தைக் கழுதை அறியாதே!
தந்ததைத் தின்றுவிட்டு சரிந்துச் படுக்காமல்
உங்களுக்கேனிந்த "ஊர்த்துளவாரம்?"
இரும்படிக்கும் இடத்திலே
இலையானுக்கு என்ன அலுவல்?
சுதந்திரத்துக்குப் போராடும் மக்களுக்கு
சோற்றுப் பிண்டங்கள்
சுற்றறிக்கை விடுவதேன்?
மனுஷனாகப் பிறந்ததுகளுக்கு
வெட்கம், ரோசம் வேண்டும்.
அதையெப்படி உங்களிடம் எதிர்பார்ப்பது?
மனிதர்களுக்குத்தானே அது!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



# "கண்காட்சி"

பற்பல நாட்டு
பலவகை விமானங்கள்
காட்சிக்கு நின்றன.
"விமானக் கண்காட்சி"

சொற்ப பணத்தில்
சுதியான பிளேனுகள்
பார்த்த பாக்கியம்...
அத்தனை பிளேனும் நவீன பிறப்பு.

ஒவ்வொரு நாடும்
தங்கள் திறமையை
யுத்த விமானத் தயாரிப்பாய் தந்தன.

மேனி சிலிர்க்க
மெய்யாய் சிலவகை
சாகசம் புரிந்தன.
உச்சிப் பறந்து
ஒரு நொடிப் பொழுதில்
கறணமடித்துக் கவிழ்ந்து வந்து...
இமைப்பதற்குள்ளே இயல்பாய் ஒன்று
இறங்கிநின்றது.



இன்னொருவகையோ...
தனித்துச் சென்று தகவல் எடுத்து
உளவுப்படையாய் உலவிவந்தது

அடுத்தொரு வகையின் இரைச்சலைச்
செவிகள்
கேட்டனவன்றி
கண்கள் அவற்றைப் பார்த்தனவன்று.

சுடுகுழல் தாங்கிய யுத்தவிமானம்
வர்ணம் தீட்டி அழகாய் நின்றது.

ஏவுகணைகள் கொடிய நச்சுக் குண்டுகள்
சுமந்த
புதுரக விமானமோ...
ஏதும் அறியா பாவியாய் நின்றது.

பெருந்தொகைக் குண்டினை காவிச் செல்லும்
நவீன வசதிகள் கொண்ட விமானமும்
செருக்களம் நோக்கியே
ஆள்அணி ஆயுதம் காவிச் செல்லும்
கனரகப் பறவையும் காட்சிக்கு நின்றன.

அழிவுகள் செய்வதே பணியெனக் கொண்ட
அச்சம்தருஉருக் கொண்ட விமானமோ
அரவமின்றி அமைதியாய் நின்றது.

பலமொழிக் காரரும்
தங்கள் நாட்டு விமானங்கள் பற்றி
எடுத்துவிட்டனர்.
பெருமிதம் பொங்கும் விழிகளை உயர்த்தி
தமது நாட்டின் வளர்ச்சியைச் செப்பினர்.

நல்ல "கண்காட்சி"

பக்கத்தில் நின்று
பலவகைப் பருந்தினை
தொட்டுப் பார்த்த பரவசம் பெரிது.

இந்த வாரம் இது முடிந்ததும்
அடுத்த வாரம் உலக அமைதி உச்சி
மாநாடு.
இத்தனை நாடும் கலந்து கொள்ளும்.
விசேட சேர்ப்பாய்
மனித உயிர்கள் உரிமைகள் பற்றியும்
இரண்டுநாள் கதைப்பினம்.
"எல்லோரும் வாங்கோ; யாவும் இலவசம்."

- ஜெயா -
(11-09-95)



ஒர்லிகன் துப்பாக்கி பொருத்தப்பட்ட இஸ்ரேலியத் தயாரிப்பான ‘சுப்பர் டோரா படகு’

www.tamilarangam.net

# ஜரிஸ் மோனா

‘ஜரிஸ் மோனா’ என்ற பயணிகள் கப்பலை, சிறீலங்காவின் கப்பல்துறை அமைச்சு, வாடகைக்குப் பிடித்து, திருகோணமலைக்கும் யாழ். குடாநாட்டில், இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள காரைதீவுக்கும் இடையில் கப்பல் போக்குவரத்தை நடத்தி வந்தது. அரச ஆக்கிரமிப்பிலுள்ள தீவுப்பகுதி மக்கள் திருகோணமலைக்கும், பின்னர் கொழும்புக்கும் செல்ல இக் கப்பல் போக்குவரத்தைப் பயன்படுத்திக் கொண்டனர். இராணுவத்திற்குத் துணையாகச் செயற்படும் ஈ.பி.டி.பி. அடிவருடிக் குழுவினர் இத்தீவுப் பகுதிகளில் நடமாட அனுமதிக்கப்பட்டனர். இக்குழுவிடமிருந்தே போக்குவரத்துக்கான பயணச் சீட்டுக்களை பொதுமக்கள் பெற்றுக் கொண்டனர். ஈ. பி. டி. பி.க்கு கூலி கொடுத்துப் பராமரிப்பதற்கான செலவினை அரசாங்கம், இதனூடாக வழங்கி வந்திருக்கவேண்டும். ஈ.பி.டி.பி.யும் எஜமானிக்கு விசுவாசமாக நடந்து இக்கப்பல் போக்குவரத்தில் நீண்டகாலமாக ஈடுபட்டு வந்தது.

ஒகஸ்ட் மாதம் 29-ம் திகதி, ‘ஜரிஸ் மோனா’ கப்பல் விடுதலைப் புலிகளுடன் நேரடியாகத் தொடர்புபட்டு உலகப் பிரசித்தி அடைய நேர்ந்தது. அந்நாள் அதிகாலை 2.30 மணிக்கு திருகோணமலையிலிருந்து வடக்கு நோக்கிச் சென்ற அக்கப்பல், முல்லைத்தீவுக் கடலில் வைத்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இச் சம்பவம் குறித்து அக்கப்பல் பயணி ஒருவர் கூறுவதையே கேட்போம்:

“அதிகாலை 2.30 மணி அளவில் கப்பலில் நான் தூங்கிக் கொண்டிருந்தேன். அப்போது ‘திடும், திடும்’ என்று சத்தங்கள் கேட்டு விழித்தேன். அப்போது பல பெண் போராளிகள் கப்பலுக்குள் நுழைந்து கொண்டு, ‘பயப்படாதீர்கள், நாங்கள் கடற்புலிகளின் மகளிர் அணியினர். தற்போது கப்பல் எங்கள் கட்டுப்பாட்டில் உள்ளது.’ என்று கூறினார்கள். பின்னர், எங்கள் அனைவரையும் தங்கள் படகுகளில் ஏறுமாறு கூறினார்கள். நாம் எங்களுடைய பொருள் பண்டங்களைத் தூக்கினோம். ‘அவற்றை விட்டுவிட்டுச் செல்லுங்கள், நாங்கள் கொண்டு வந்து தருவோம்’ என்று கூறினர். பின்னர் பயணிகள் அனைவரும் படகுகளில் ஏற்றப்பட்டு முல்லைத் தீவுக் கரைக்குக் கொண்டுவரப்பட்டோம். அப்போது காலை 5 மணி. பின்னர் எமது சகல பொருட்களும், பவுத்திரமாக எம்மிடம் கொண்டுவந்து தரப்பட்டது.”

கடற்புலிகள் மகளிர் படையணியின் விசேட தளபதி கல்யாணி, 15 மைல் தொலைவில் சென்றுகொண்டிருந்த ‘ஜரிஸ் மோனா’ கப்பலை தாங்களே கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து கரையை நோக்கிச் செலுத்தி வந்ததாகத் தெரிவித்தார். சிறீலங்கா கடற்படையின் ‘டோரா’ப் பீரங்கிப் படகுகளை கடல் போர் ஒன்றுக்கு அழைப்பதற்காகவே, ‘ஜரிஸ் மோனா’ தம்வசம் கொண்டு வரப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார். ‘ஜரிஸ் மோனா’ கைப்பற்றப்பட்ட சம்பவத்தை நினைத்துப் பார்க்கும்போது, இஸ்ரேலிய, விசேட கொமாண்டோப் படையினரால், ‘என்ரபே’ விமான நிலையம் கைப்பற்றப்பட்ட சம்பவமே மனதுக்குள் படமாக ஓடுகிறது.

இஸ்ரேலிய விமானப் பயணிகள், உகண்டாவில் ‘என்ரபே’ விமானத் தளத்தில் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்தபோது, அவர்களை மீட்பதற்காக இத் தாக்குதல் இடம் பெற்றது. இஸ்ரேலிய கொமாண்டோக்கள், பணயக் கைதிகள் வைக்கப்பட்டிருந்த விமான கூடத்திற்குள் அதிரடியாக நுழைந்தபோது, “பயப்படாதீர்கள், நாங்கள் இஸ்ரேலிய கொமாண்டோக்கள். அப்படியே அசையாது இருங்கள்.” என்ற வார்த்தைகளையே கீப்ரு மொழியில் பலமாகக் கூறினார்கள்.

கல்யாணியும் அவரது பெண் போராளிகளும் எதிர்பார்த்தது போலவே, இஸ்ரேலியத் தயாரிப்பான ‘சுப்பர் டோரா’ப் படகு ‘ஜரிஸ் மோனா’வை நோக்கி வந்தது. ‘டோரா’ என்பது கீப்ரு மொழியில் ஆண்குழவி என்று அர்த்தமாகும். ஆண்குழவி ஆட்களைக் கொட்டுவது போல், எதிரிப் படகுகளைத் தாக்கி அழிக்கும் என்பதே கருத்தாகும். சாதாரண ‘டோரா’ப் படகுகளை விட ‘சுப்பர் டோரா’க்கள், அதிகப்படியான பீரங்கிகளைக் கொண்டதாகவும், கடற்போரில் சிறப்பான நகர் திறனையும் கொண்டது. ஆயினும், பெண் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகிய ‘சுப்பர் டோரா’ப் படகு, சிதறுண்டு, நெருப்புச் சுவாலையுடன் நீருள் மூழ்கியது. கப்பல் பயணி ஒருவர், கரையில் இருந்தவாறு, டோராப் படகு தீப் பற்றி எரிவதைப் பார்த்ததாகத் தெரிவித்துள்ளார்.

பின்னர், போன கப்பலைக் காணவில்லை என்று திருமலைக் கடற்படைத் தளத்தில் கடற்படை உயர் அதிகாரிகள் குழம்பத் தொடங்கினர். எனவே, கட்டளைக் கப்பலான ‘ஜயசேகரா’வும், இன்னொரு ‘டோரா’ப் படகும் அன்று மாலை புறப்பட்டு வந்தன. கட்டளைக் கப்பல் பாதுகாப்புக்காகத் தூரத்திலேயே நின்றுகொண்டது. இக் கட்டளைக் கப்பல் கற்பிட்டிக் கடலில் மூழ்கடிக்கப்பட்ட ‘சாகரவர்த்தனா’ போன்று, ராடார் (Radar), ஸோனார்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(Sonar) ஆகிய கண்காணிப்புக் கருவிகளையும், கட்டளை மையத்தையும் கொண்ட சிறீலங்காப் படையிடம் உள்ள மிகப் பெரிய கப்பல். 'ஐரிஸ் மோனா'வை நெருங்கி வந்த 'டோரா'ப் படகு, பெரும் சத்தத்துடன் வெடித்துச் சிதறியது. அதுவும் முல்லைத்தீவுக் கடலின் அடியில் அடைக்கலம் தேடிக் கொண்டது. கட்டளைக் கப்பலில் இருந்த கடற்படை அதிகாரிகளின் கண்முன்னாலேயே 'டோரா'ப் படகு மூழ்கடிக்கப்பட்டது. அக் கப்பலிலிருந்த கடற்படை அதிகாரி ஒருவர், 'ரோடா'ப் படகு தாக்கப்பட்ட போது, விடுதலைப் புலிகளின் படகுகள் எதுவும் அங்கு காணப்படவில்லை எனவும் 'டோரா'வை என்ன தாக்கியது என்று தங்களால் தீர்மானிக்க முடியாதுள்ளதாகவும் தெரிவித்தார். இந் நிகழ்தரவுகளைக் கொண்டு, கடற்படையின் இரண்டு 'டோரா'ப் படகுகளும் எவ்வாறு மூழ்கின என்று இராணுவ ஆய்வாளர்கள் ஊகங்கள் எழுப்பத் தொடங்கினர். தரையிலிருந்து தரையை நோக்கி ஏவப்படும் ஏவுகணைகளால் தாக்கப்பட்டிருக்கலாம் என்பது ஒரு ஊகம். கடற்புலி அணியின் சிறியரக நீர்மூழ்கிக் கப்பல்களினால் 'டோரா'ப் படகுகள் தாக்கப்பட்டிருக்கலாம் என்பது இன்னொரு ஊகம்.

இவ் ஊகங்கள், விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்தினால், உறுதிப்படுத்தப்படும் வரை வெறும் ஊகங்களாகவே தொடர்ந்து இருக்கும். ஆயினும், விடுதலைப் புலிகள், போர் நடவடிக்கைகளில் (Hi tech) உயர் தொழில்நுட்ப உத்திகளைக் கையாண்டு வருகின்றனர் என்பது மறுக்க முடியாத உண்மை. பெரிய அளவிலான கடற் சண்டையோ, விடுதலைப் புலிகள் தரப்பில் எவ்வித உயிர் இழப்போ ஏற்படாமையே இத்தகைய அனுமானங்களுக்கு வழிவகுத்துள்ளது.


இவ் மூழ்கடிப்பின்போது, கடற்புலிகளின் பல படகுகள் மூழ்கடிக்கப்பட்டு, பல கடற்புலிகள் கொல்லப்பட்டதாக, இராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்க, சர்வதேச செய்தி நிறுவனங்களுக்குக் கூறிய பிரச்சாரச் செய்திகளில், உண்மை இல்லை என்று, சம்பவத்தை நேரடியாகப் பார்த்த கடற்படை அதிகாரி தெரிவித்தார். மேலும், ஆகாயப்படை விமானங்கள், முல்லைத் தீவுக் கடற்கரையில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் ஏவுகணை மேடைகளைத் தாக்கி அழித்ததாக, விமான ஓட்டிகள் கூறியதையும் மறுத்த அவ் அதிகாரி, "அவை விமான ஓட்டிகளால் மட்டும் சொல்லப்பட்டு உறுதிப்படுத்தப்படாதவை" என்று கூறினார். விடுதலைப் புலிகள், ஏவுகணைகளைப் பாவிப்பதை உண்மையென்று எடுத்துக் கொண்டாலும், ஏவுகணை மேடைகளில் வைத்து ஏவப்படும் பெரிய ஏவுகணைகளை வைத்திருப்பர் என்று கருத முடியாது. அநேகமாக தோள்களில் வைத்து ஏவப்படும், ரஷ்ய SAM ஏவுகணையாகவோ அல்லது அமெரிக்க Stinger ஏவுகணையாகவோதான் இருக்கும். இரண்டு 'டோரா'ப் படகுகள் மூழ்கடிக்கப்பட்ட பிறகு 'ஐரிஸ் மோனா'வின் நிலையை ஆராய்வதற்காக, அதற்குக் கிட்ட நெருங்க வேறு கடற்படைப் படகுகள் துணியவில்லை. ஆகாயப்படை விமானங்களும், 'ஐரிஸ் மோனா'வின் மீதோ அதனை அண்டிய பகுதிகளிலோ பறந்து, அதன் நிலையைக் கண்காணிக்க முயலவில்லை. தமிழ்ப் பயணிகள் அனைவரும் தரையிறக்கப்பட்டனர். பயணிகள் அனைவரும் முல்லைத்தீவிலிருந்து கிளாலி நீர்ப்பரப்பினூடாக யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டு 'ஜோன் பொஸ்கோ' பாடசாலையில் தங்கவிடப்பட்டனர். பயணிகளின் பூரண பாதுகாப்பிற்கு உத்தரவாதம் தருவதாக விடுதலைப் புலிகள் அறிவித்தனர். பயணிகள் அனைவரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். வதிவிடப் பிரதிநிதியினால் பார்வையிடப்பட்டு, அவர்கள் பற்றிய விபரங்கள் பெறப்பட்டு அவரவர் தங்கள் தங்கள் இடங்களுக்குச் செல்வதற்கான ஒழுங்குகளை செஞ்சிலுவைச் சங்கம் செய்து வந்தது. இதற்கிடையில், கப்பல் பயணிகள், யாழ். நகரைச் சுற்றிப் பார்த்து, அங்கு நடைபெற்று வருகின்ற சமூக, பொருளாதார, அரசியல், படைத்துறை மாற்றங்களைக் கண்டு பிரமித்து நின்றனர். அரசாங்கக் கட்டுப்பாட்டில் இருந்தும், போதிய உணவு, மருந்து விநியோகங்கள் இன்றிச் சீரழிய விடப்பட்டுள்ள தீவுப் பகுதிகளின் கேவல நிலையுடன், பொருளாதாரத் தடையை எதிர்த்து நிமிர்ந்து நிற்கின்ற யாழ். குடாநாட்டு நிலையை ஒப்பிட்டு நோக்கி நம்பிக்கை வாய்க்கப் பெற்றனர்.


தாக்கியழிக்கப்பட்ட டோராவை விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் கட்டியிழுத்துச் செல்கிறார்கள்

கப்பல் அதிகாரிகளும், மாலுமிகளுமான 8 பேரில் நால்வர் சிறீலங்கா கடற்படையிலிருந்து, 'ஐரிஸ் மோனா' கப்பலில் கடமை புரிய அனுப்பப்பட்டவர்கள். கப்பல் கப்டன், பிரதான அதிகாரி, பிரதான பொறியியலாளர், அறைப் பொறுப்பாளர் ஆகியோர் கடற்படையில் அதிகாரியாகச் செயல்பட்டவர்கள். சிறீலங்கா கடற்படை பிடித்து வைத்துள்ள இரண்டு பெண் கடற்புலிகளை விடுதலை செய்தால் தாங்கள் தடுத்து வைத்துள்ள 8 கப்பல் மாலுமிகளையும், இரண்டு ஈ.பி.டி.பி உறுப்பினர்களையும் விடுவிப்பதாக விடுதலைப் புலிகள் அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளனர். இச் செய்திகள் பரிவர்த்தனைக்கான பேச்சுவார்த்தைகளை, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் நடுவில் நின்று நடத்தி வருகின்றது. அரசாங்கமோ, கைது செய்யப்பட்ட இரண்டு பெண் கடற்புலிகளும், விடுதலைப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

புலிகளிடம் திரும்புவதற்கு மறுப்ப தாகப் பிரச்சாரம் செய்து வருகின் றது. இவ்வாறு வாக்குமூலம் செய்த தாக, அரச 'ரூபவாஹினி' கூட்டுத் தாபன தொலைக்காட்சியிலும் காட் டியது. கொலை மிரட்டல், சித்திர வதை போன்ற அழுத்தங்களின் பேரில், பெண் கடற் புலிகள் இருவ ரும், ஆயுதப்படையினரால் இவ்வாறு சொல்ல வைக்கப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்தனர். கொழும்பில், சித்திரவதை செய்யப் பட்ட தமிழர்களின் உடல்கள் வாவி கள், குளங்கள், வீதிகளில் கிடக்கும் சம்பவங்கள், அது தொடர்பான அரச விசாரணையின் பின்னரும் தொடர்வதை, நாம் கருத்தில் கொண்டால், காயமுற்றுப் பிடிபட்ட இவ்விரண்டு போராளிகளும் ஆயு



தப்படையினரின் கைகளில் எத்த கைய நரக வேதனையை அனுப வித்திருப்பர் என்பதை உணர்ந்து கொள்ள முடியும். உலக வரலாற் றிலும், சமகால அரசியல் நிகழ்வு களிலும், இத்தகைய சம்பவங்களுக் குக் குறைவில்லை. அண்மையில், இந்தோனேசிய இராணுவம், கிழக்கு தீமோர் கெரில்லாத் தலைவரான குஸ்மாஓ சானானாவை (Gusmao Xanana) அவரது மறைவிடத்தில் கைதுசெய்தது. கிழக்கு தீமோருக் கான சுதந்திரப் போராட்டத்தைக் கைவிட்டு, மாநில சுயாட்சி ஏற் பாட்டைக் கிழக்கு திமோர் மக்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று சானானா அறிக்கை விட்டதாக பத்திரிகை, வானொலி, தொலைக் காட்சி என்ற சகல செய்தி ஊட கங்கள் மூலமும் இந்தோனேசிய அரசாங்கம் அறிவித்தது. பின்னர், சிறையிலிருந்து, இரகசியமாகக் கடத் திக் கொண்டுவரப்பட்ட சானானா வின் அறிக்கை, அதனை முற்றாக மறுத்ததோடு, கிழக்கு திமோர் மக்கள், தங்கள் நாட்டின் பூரண சுதந்திரத்திற்காகத் தொடர்ந்து போராட வேண்டும் என்ற எழுச்சி கரமான உருக்கமான வேண்டு கோளையும் விடுத்திருந்தது. குஸ்மாஓ சானானா தொடர்ந்து சிறைப் பறவையாக இருந்து வருகிறார்.

'ஐரிஸ் மோனா'க் கப்பல் தொடர்ந்து, முல்லைத்தீவுக் கடலில் அலையுற்று நின்று, பின்னர் வட மராட்சிக் கடலுக்கு கடற்புலிகளால் நகர்த்தப்பட்டது. அக் கப்பலில் வெடிமருந்து பொருத்தப்பட்டுள் ளதோ என்று பயந்து கடற்படைக் கப்பல்கள் அதனை நெருங்க அஞ்சின. திருகோணமலையிலிருந்து புறப்பட்டு, தூர இருந்தவாறு 'ஐரிஸ் மோனா'வை நோட்டம் இடும் செயல்பாட்டை கடற்படைக் கப் பல்கள் செய்து வந்தன. இதனை அவதானித்த கடற்புலிகள், அத்த கைய டோராப் படகு மீது தாக்கு தல் நடத்த முடிவு செய்தனர். செப் டெம்பர் மாதம், 3-ம் திகதி ஞாயிற் றுக்கிழமை இரவு 9.30 மணிக்கு மூன்றாவது டோராப்படகு தாக்கப் பட்டு மூழ்கடிக்கப்பட்டது. ஒரு வாரத்துள் 3 டோராப்படகுகள் மூழ்கடிப்பட்டதானது, சிறீலங்கா அரசாங்கத்திற்கு பாரிய இழப்பாக வும், விடுதலைப் புலிகளுக்குப் பெரும் சாதனையாகவும் அமைந் தது. வெடிமருந்து ஏற்றப்பட்ட கடற் புலிப் படகு டோராவுடன் மோதி அதனைச் சிதறடிக்கச் செய்தது. கடற்கரும்புலிகள், காரைநகரைச் சேர்ந்த மேஜர் நகுலன் கந்தையா கிருஷ்ணதாஸும், மட்டக்களப் பைச் சேர்ந்த மேஜர் கண்ணாளன் விநாயகன் இளையதம்பியும் தாய கக் கடலுள் உயிர்விதைகளாய்ச் சங்கமமாயினர். கடற்படை அதிகா ரியும் 10 கடற்படையினரும் இத் தாக்குதலில் கொல்லப்பட்டனர். கரும்புலி மேஜர் நகுலன் கந்தையா கிருஷ்ணதாஸ், 'உயிர்ப்பூ' எனும் வீடியோ திரைப்படத்தில் கதாநாய கனாக நடித்தவர் என்பது குறிப் பிடத்தக்கது. அப்படத்தில் தமிழ் மீனவர்களைக் கொன்றொழித்துக் கொடூரம் புரியும் கடற்படைப் பட கொன்றை, கரும்புலித்தாக்குதலில், மூழ்கடித்து தானும் இறக்கும் பாத் திரத்தைச் சிறப்பாகச் செய்தவர். திருமலைத் துறைமுகத்துக்கு அண் மையில், டோராப்படகுகள் நடமாடி 'ஐரிஸ் மோனா'வை தூரத்திலிருந்து காண்காணிப்பதை அறிந்து, விரை வாகத் திட்டமிட்டு, வெற்றிகரமா கத் தாக்குதல் நடத்தியமைக்கு கடற் புலித் தளபதி சூசையின் மதிநுட்ப மும் காரணமாய் இருந்திருக்க வேண்டும். இத் தாக்குதல், திரும லைக்கு வடக்கே சிறிது தொலை விலுள்ள, புல்மோட்டையிலிருந்து புறப்பட்ட கரும்புலிகளின் படகி னாலேயே நடத்தப்பட்டுள்ளது.

மூன்று டோராக்கள் மீதான தாக்குதலின்போது, மூன்று அதிகா ரிகள் உட்பட 30-க்கு மேற்பட்ட கடற்படையில் கொல்லப்பட்டனர். அப்படகுகளில் இருந்து, 20-மி.மீ பீரங்கிகள் - 4, 50 கலிபர் துப்பாக்கி கள் - 4, இலகு இயந்திரத் துப்பாக்கி கள் - 2, தானியங்கித் துப்பாக்கிகள்-10, ராடார் கருவி, மிக நுட்பமான ரேடியோக் கருவி என்பன கைப்பற் றப்பட்டன.

'ஐரிஸ் மோனா'வின் கதை இன் னும் முடியவில்லை. பயணிகளை ஏற்றிச் செல்வதான காரணத்தைக் கூறிக்கொண்டு, சிறீலங்கா அரசாங் கம் தொடர்ந்தும், வடபகுதியில், விடுதலைப் புலிகளின் முற்றுகைக் குள் சிக்கியுள்ள இராணுவத்திற்கு உணவு, தளபாட விநியோகங்க ளைச் செய்யும் புதிய தந்திரங்க ளைச் செய்து கொண்டே இருக்கும். இத்தகைய அரசாங்கத்தின் தந்திர உத்திகளைக் கண்டுபிடித்து, அதனை வெற்றிகரமான தாக்குதல் மூலம் வெளிஉலகுக்கு அம்பலப்படுத்தும் விடுதலைப் புலிகளின் செயல்பாடு தொடர்ந்து கொண்டே இருக்கும்.

**வளவன்**

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கோகிலா மகேந்திரன்

## நேர்முகம் கருணாகரன்

கோகிலா மகேந்திரன் என்று எங்கும் எல்லோராலும் அறியப்பட்ட இவர் தெல்லிப்பளை சைவப்பிரகாச வித்தியாசாலையின் அதிபராகக் கடமையாற்றி வருபவர். தொடர்பறுந்து போகாமல், இடையில் எழுத்துலகிலிருந்து மறைந்து போகாமல் தொடர்ந்து எழுதிவரும் ஈழத்துப் பெண் படைப்பாளி என்ற பெயர் இவருக்குண்டு. வெறும் எழுத்துடன் திருப்தி கொள்ளாதுதான் நினைக்கும் கருத்தை வென்றெடுப்பதற்காக பல சமூக அமைப்புக்களுடன் தன்னை இணைத்துக்கொண்டு பணியாற்றி வருபவர். தமிழரின் பண்பாடு என்று சொல்லி மூடத்தனத்துக்குள் தன்னைப் புதைக்காமலும், பெண்களின் சுதந்திரம் என்று சொல்லி ஐரோப்பிய நாடுகளில் இருந்து வரும் கட்டற்ற சுதந்திரத்தை ஏற்றுப் பறக்காமலும் எம் மண்ணுக்கேற்ற தளத்தில் நின்று பெண்களின் விடுதலைக்காகச் சிந்திப்பவர். எமது தேசிய இன விடுதலைப்போராட்டத்தை உள்ளத் தெளிவுடனும், உணர்வுடனும் ஏற்றுக்கொண்டவர்களில் இவரும் ஒருவர். 'அறிமுக விழா', 'முரண்பாடுகளின் அறுவடை', 'மனித சொரூபங்கள்', 'பிரசவங்கள்' ஆகிய சிறுகதைத் தொகுதிகளும், 'துயிலும் ஒரு நாள் காலையும்', 'தூவானம் கவனம்' ஆகிய நாவல்களும் இதுவரை வெளிவந்த இவரது நூல்களாகும். புதிய நாடகத் தேடல்களில் இவருக்கு மிகுந்த ஈடுபாடுண்டு.



☑ உங்களின் குடும்பச் சூழல், மற்றும் இலக்கிய ஈடுபாட்டின் பின்னணி பற்றிக் கூறுங்கள்?

எனது கிராமம் விழிசிட்டி. தெல்லிப்பளையின் மேற்குப்பகுதியில் அமைந்த வாழையும் கமுகும் வெற்றிலையும் நிறைந்த அழகிய சிறு கிராமம். மழைக்கால அருணோதயம் போன்ற வாழ்வு. கிராமத்தவர் அநேகம் பேர் சைவ உணவுக்காரர். மென்மையான கலை உள்ளம் படைத்தவர்கள். தேவாரங்களைப் பண்ணோடு இசைப்பதில் புகழ் பெற்றவர்கள். நான் சிறுமியாக இருக்கும் போது வாழ்ந்த பண்டிதர் சி. கதிரிப்பிள்ளை, பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை போன்றோர் ஏனையோரின் மரபு இலக்கிய ஈடுபாட்டுக்கு வழிகாட்டிகள். எனது தந்தையார் பண்டிதர் கதிரிப்பிள்ளையின் மாணவர். அதிபர். பாரம்பரிய இலக்கியங்களில், புராணங்களில் அறிவு மிகுந்தவர். சத்தியவான் சாவித்திரி இசை நாடகத்தில் சாவித்திரியாக நடித்தவர்.

நாள்தோறும் அவருடன் காலையில் குளிக்கும்போது எனக்குத் 'திருக்குறள்' பாடம் நடக்கும். துலா மிதித்து இறைக்கும் போது அவரும் சிறிய தந்தையரும் பாடும் தேவாரங்களும் இசைப் பாடல்களும் காதில் விழும். இயல்பாக வந்த இந்தப் பின்னணிக்கு 'மகாஜனா'க் கல்லூரி உரம் போட்டு வளர்த்தது.

செ. கதிரேசபிள்ளையரிடம் தமிழ் படித்தபோது அதன் வளர்ச்சி சிறப்பாய் அமைந்தது. அவரது நாடகங்களில் நடித்து அகில இலங்கை ரீதியாக முதற் பரிசுகளைப் பெற்ற போது கலை ஈடுபாட்டின் மகிழ்வு பிடிபட்டது. உலக சௌந்தர்யங்கள் யாவும் எங்களுக்குள் நிறைந்துவிட்ட திருப்தி! ஆண்டு எட்டில் நான் படித்தபோது எனது தமிழ் விடைத்தாளை திருத்திய ஒரு ஆசிரியை, "இந்தப் பிள்ளை ஒரு எழுத்துப் பிழை கூட விடவில்லை. கட்டுரையும் மிகச் சிறப்பாக உள்ளது. நூறு புள்ளி போடலாமா?" என்று கவிஞரிடம் கேட்டபோது, "அவளுக்கு நீங்கள் நூறு புள்ளி போடாவிட்டால் நான் ஏன் என்று கேட்டிருப்பேன்" என்று அவர் சொன்னாராம். நல்ல சூழல் வாய்த்தது நான் பெற்ற அதிர்ஷ்டம்.

**☑ பல பெண்கள் கலை, இலக்கிய முயற்சிகளிலும், பெண்ணியச் செயற்பாட்டிலும் ஆரம்பத்தில் முனைப்புடன் ஈடுபடுவார்கள். ஆனால் திருமணத்தின் பின்னர் இவர்களின் செயற்பாடுகள் அநேகமாக இல்லாமல் போவதைக் காணக் கூடியதாக உள்ளது. இந்தப் பின்வாங்கலின் காரணம் என்ன?**

இதன் விடை கேள்விக்கு உள்ளேயே உண்டே! திருமணத்தின் பின்னர் ஒரு மாற்றம் ஏற்படுகின்றது என்றால் அதற்குக் காரணம் திருமணமாகத்தானே இருக்கமுடியும்? வேலைத்தலத்திலிருந்து கணவன் களைத்து வருவதை எதிர்பார்த்து கையில் மணம் மிகுந்த கோப்பியும், தலையில் பூவுமாகக் காத்திருக்கும் பெண்ணைத்தான் இலட்சியக் கதாநாயகியாக ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் காட்டினார்கள். கணவனைத் திருப்திப்படுத்துவதும், அவன் சொற்படி நடப்பதும், அவனது வெற்றிக்கே உறுதுணையாக இருப்பதுமே ஒரு பெண்ணின் கடமை என்று பெண்ணும் நம்புகிறாள். அதனால்தான் சொந்தத் திறமைகளையும், ஆளுமைகளையும் 'தியாகம்' என்ற குழியில் போட்டு மூடி விடுகிறாள். பல நூற்றாண்டு காலமாக எமது இலக்கியங்களும், பாரம்பரியப் பாதைகளும் அழுத்தி வந்த விடயம் இது. இலகுவில் மாறி விடாது. கட்டிளமைப் பருவத்தில் இருக்கின்ற முனைப்பான செயற்பாடுகளும் சிந்தனையும் அந்தக் காலம் முடியக் கூர் மழுங்கிப் போவதும் ஒரு காரணமாக இருக்கலாம். இந்தக் கருவை மையப்படுத்தி "இருட்டுக்குள் சுருட்டி" என்றொரு நாடகத்தை நாங்கள் அண்மையில் தயாரித்தோம். ஆனால் என்னைப் பொறுத்த வரையில், திருமணம் எனது ஆளுமை வளர்ச்சிக்கு மிக வசதியாய் அமைந்தது.

**☑ இன்று பெண்களின் ஆற்றல், ஆளுமை, வாழ்க்கை முறை என்பன நமது மண்ணில் நிறைய வளர்ச்சி கண்டிருக்கிறது. எனினும் சராசரியான மரபு வழியான பணிதல் நிலையும் இன்னொரு பக்கத்தில் ஒரு**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

**பேணுமையாக இன்னும் உண்டு. இந்தப் பிரச்சினையில் உங்கள் அவதானிப்பு என்ன?**

தேவை வரும்போது நடத்தை மாற்றம் வருவது இயல்பு. இன்று எனது இனத்தைப் பாதுகாக்க வேண்டிய தேவை கொண்டுவந்த பல மாற்றங்களில் பெண்களின் மனப் பாங்கு மாற்றமும் ஒன்று. ஆனால் எல்லாரும் மாறிவிடவில்லை. கண்ணகியும் நளாயினியும் இன்றும் எமது இலட்சியப் பெண்களாக எடுத்துப் பேசப்படுகிறார்கள். தமது சொந்தக் காலில் நின்று, தாமே தீர்மானம் எடுத்து, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளை நிகழ்த்திக் காட்டும் பெண்கள் பற்றிக் காவியங்கள் எழுதப்படவேண்டும். அவை பற்றி சமுதாயத்தில் எடுத்துப் பேசப்படவேண்டும். மாற்றம் தொடரும். எனக்கு நிறைய நம்பிக்கை உண்டு. ஆனால் ஒரு இரவிற்குள் எல்லாவற்றையும் மாற்றிவிட முடியாது.

☑ **ஈழத்தில் கலை இலக்கியத் துறையில் ஈடுபட்ட பெண் எழுத்தாளர்கள் மிகவும் குறைவு என்றும், இவ்வாறு எழுதப் புறப்பட்டவர்களில் ஒரு சிலர் தவிர ஏனையோர் ஜனரஞ்சகப் படைப்புக்களையே தந்து சென்றுள்ளனர் என்றும் கூறப்படுகிறது. இது எந்த அளவுக்கு நியாயமானது?**

இந்தப் பிரச்சினை இங்கு மட்டுமல்ல; தமிழகத்திலும் பேசப்படுவதுண்டு. "பெண் எழுத்தாளரிடம் அறிவுபூர்வமான சிந்தனைகளையோ, தர்க்கரீதியான கருத்து ஆராய்வுகளையோ எதிர்பார்ப்பதில்லை என்று நமது நாட்டின் புகழ்பெற்ற இலக்கிய விமர்சக மேதைகள் சிலர் தீர்த்திருக்கிறார்கள்" என்றும் ராஜம் கிருஷ்ணன் சொல்கிறார். ஈழத்தில் இலக்கியத் துறையில் ஈடுபட்ட பெண்கள் மிகக் குறைவு என்பது உண்மைதான். ஒரு இலக்கியக் கூட்டத்திற்கு எத்தனை பெண்கள் வருகிறார்கள்? சங்கீதம், நடனம் போன்ற கலைகளில் ஓரளவு ஈடுபடுகிறார்கள். ஆனால், நாடகக் கலையில் ஈடுபட்டவர்கள் மிகக் குறைவு. ஆண் ஆதிக்க சமுதாயக் கட்டமைப்பு இன்னும் பேணப்படுவது தான் எல்லாவற்றிற்கும் காரணம். ஒரு சமுதாயத்தில் நூற்றுக்கணக்கான பெண் எழுத்தாளர்கள் தோன்றும் போது தான் ஒருசிலர் மிகத் தரமாக எழுதும் நிகழ்தகவு ஏற்படும். ஆயிரக்கணக்கான ஆண் கவிஞர்கள் தோன்றிய பிறகுதான் இங்கு 'மகாகவி' போன்ற ஒரு தரமான கவிஞனையோ அல்லது புதுவை இரத்தினதுரை போன்ற ஒரு விடுதலைக் கவிஞனையோ நாங்கள் தரிசித்தோம். எடுத்த எடுப்பில் மிகத் தரமான பெண் எழுத்தாளர் தோன்றமுடியாது. அதற்குப் பல ஆரம்பப் படிகள் தேவை. ஆனால் ஜனரஞ்சகப் படைப்புக்களைப் பெண்கள் மட்டும்தான் எழுதினார்கள் என்று குற்றம் சாட்ட முடியாது. அவ்வாறு விட்டுச் சென்ற ஆண்களும் நிறைய உள்ளனர். அதே சமயத்தில் தமிழ் நாட்டுடன் ஒப்பிடுகையில் ஜனரஞ்சகப் படைப்புக்கள் வரும் வேகம் குறைவு என்பதையும் இங்கு கவனத்தில் கொள்ளவேண்டும்.

☑ **அரசியல் பொருளாதாரக் கட்டமைவில் எமது மண்ணில் பெண்களின் ஆளுமை விருத்தியும் பங்கும் இன்று முன்னேற்றமாக இருக்கிறது. ஆனால் இந்த முன்னேற்றச் செயற்பாடுகள் சார்ந்த இலக்கிய வெளிப்பாடுகள் குறிப்பிடக்கூடிய அளவுக்கு வரவில்லை. என்ன காரணம்?**

அரசியல் பொருளாதாரக் கட்டமைப்பில் எந்தப் பெண்கள் பங்கு கொள்கிறார்களோ அவர்கள் மத்தியில் இருந்து ஆயிரக்கணக்கான எழுத்தாளர்கள் தோன்ற வேண்டும். ஆனால் எமது சமூகம் பொருள் மையச் சமூகம். பணம் ஈட்டுவதிலும் அதைச் சேர்த்து வைப்பதிலும் அதிக நாட்டம் உள்ள இனம். பணத்துக்கு அதிக முக்கியத்துவம் தருகின்ற மனப்பாங்கு கொண்ட சாதி.

ஸ்பிராங்கர் என்ற உளவியலாளர் மனிதர்களை ஆறு பெரிய ஆளுமை வகுப்பினுள் அடக்குவார். அதில் நாங்கள், தமிழர் பலர் பொருளாதார ஆளுமை கொண்டவர்களோ (The economic type) என்று நான் நினைப்பதுண்டு. பொருள் சம்பாதிக்கப் பெண்களை அனுமதிக்கும் சமூகம் அவர்கள் கலை, இலக்கியங்களில் ஈடுபடுவதை விரும்பவில்லை. அவர்கள் Oesthetic type ஆக மாறுவதை அநுமதிப்பதில்லை. அது தேவையில்லாத "ஆட்டம்" என்பது தான் சமூகத்தின் கணிப்பு. ஆகவே இந்த மனப்பாங்கு மாற்றப்படவேண்டும்.

☑ **உங்கள் அண்மைக்கால எழுத்துக்களில் உளவியல் பார்வை அல்லது உளவியல் கருத்துக்கள் விரிவாகக் காணப்படுகின்றன. உளவியல் கருத்துக்களை நேரடியாகக் கூறுகின்ற இடங்களில் விவரணப் பாங்கு மேலோங்கும் சாத்தியம் தெரிகிறது. இதுபற்றி உங்களின் கருத்து என்ன?**

அண்மையில் 'நான்சி பரன்' என்ற அமெரிக்க உளவியல் பேராசிரியை இங்கு வந்திருந்தார். "குட்டி யானை துணிவு பெறுகிறது" என்று ஒரு உளவியல் புனைகதை எழுதி (Psychological fiction) அந்தக் கதையைச் சொல்வதன் மூலம் போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் ஒரு உளச்சிகிச்சையைச் செய்ய விரும்புகிறார். எங்கள் நாட்டில் இவ்வாறு உளவியல் புனைகதை எழுதும் எழுத்தாளர்கள் யாரும் இல்லை. இன்று இது எமக்கு ஒரு கட்டாய தேவை. இத்தகைய கதைகளோடு நாங்கள் பலர் எங்களைப் பொருத்தி இனம் காண்போம். இதன் மூலம் உளச் சமநிலை பேணப்படும். என்னுடைய கதைகளில் விவரணப் பாங்கு மேலோங்குகிறதோ இல்லையோ என்பதை விமர்சகர்களே கூறவேண்டும். ஆனால் எமது சமூகத்துக்குப் பயனுள்ள ஒன்றைச் செய்கிறேன் என்ற திருப்தி எனக்கு இருக்கிறது. எல்லோரும் அரைத்த மாவை அதே போல் திருப்பி அரைப்பதில் என்ன இருக்கிறது.

☑ **அதாவது படைப்பாளி தன் நியாயத்திற்கு உரிய வகையில் தன் மனதுள் திரண்டுள்ள தீவிரமான எண்ணங்களை வெளிப்படுத்துவது**

**கிராமத்தில் அனைவரும் உறவினர் என்பதால் இரவு பகல் பாராமல் திறந்து விரித்தபடியே கிடக்கும் படலைகளும் கதவுகளும்... யார் எப்போது வந்தாலும் சாப்பாடு கொடுத்தே அனுப்புகிற வழக்கம்.... எல்லாம் இழந்து.... ஆத்மாவில் ஒரு பொறி இன்னும் அழியாமல் கனன்றுகொண்டிருக்கிறது!**

www.tamilarangam.net
தமிழ்த்தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**டன் பணி நிறைவடைகிறது என்பது தானே பொருள்?**

படைப்பாளி தன் நியாயத்துக்கு உரிய வகையில் தன் மனதுள் திரண்டுள்ள எண்ணங்களை சமூக மேம்பாட்டுக்கு ஊறுசெய்யாத வகையில் வெளிப்படுத்த வேண்டும். அதன் கலைத்துவச் சிறப்பு அதன் தரத்துக்கு நேர்விகித சமனாகும்.

**☑ இன்று உங்கள் வீட்டையும் கிராமத்தையும் இராணுவம் ஆக்கிர மித்துள்ளது. ஒரு படைப்பிலக்கிய வாதியின் உணர்வு, பிரச்சினை என்பவற்றினூடாக இந்தப் பாதிப்பைக் கூறுங்கள்:**

எங்கள் கவிஞர் ஒருவரின் வார்த்தையில் சொல்வதானால், "எவ்வாறிது ஆறும்? என் சொல்லித் தேறும்?" என்று கூறினால் போதும். எல்லாத் தோற்றங்களும் திடீரென்று ஒரு சமயத்தில் இல்லாதுவிட்ட ஒரு தோற்றம். கிராமத்தின் வடக்கு எல்லையில் அமைதியாய்க் குந்தியிருந்த வீடு! மனத்திரையில் நினைவுப் பம்பரம் படு வேகமாய்ச் சுற்றுகிறது. வீட்டின் தெற்கு எல்லையில் உள்ள மாஞ்சோலை, அங்கே வரும் அழகான குருவிகளை நானும் அப்போது சிறு பாலனாய் இருந்த என் மகனும் பார்த்து அவற்றுக்குப் பின்னே ஓடித்திரியும் நினைவுகள்! வீட்டின் மேற்கு எல்லையில் அமைந்த பொற்காற் தம்பை வைரவர் ஆலயம்! அதன் சூழலில் மிகப் பெரிய அரசுகள்! ஆலமரங்கள்!! வீட்டில் இருந்து ஒரு கால் மைல் தொலைவில் நாங்கள் புல்லுக்கும் விறகுக்கும் போகின்ற "நிறையப் புலம்". மழை காலத்தில் அங்கே நெஞ்சைத் தொட்டு நிற்கும் 'குதிரை வாலிப் புல்லு'. அங்கே பறக்கும் பட்டங்கள். கிழக்கே ஒரு காணி தள்ளி ஒரு வாழைத் தோட்டம்... கிராமத்தில் அனைவரும் உறவினர் என்பதால் இரவு பகல் பாராமல் திறந்து விரித்தபடியே கிடக்கும் படலைகளும் கதவுகளும்... .யார் எப்போது வந்தாலும் சாப்பாடு கொடுத்தே அனுப்புகிற வழக்கம்.... எல்லாம் இழந்து.... ஆத்மாவில் ஒரு பொறி இன்னும் அழியாமல் கனன்று கொண்டிருக்கிறது! இப்போது இருக்கும் இடத்தில், யாராவது விருந்தினர் வந்தால் "அமருங்கள்" என்று சொல்ல முடியாமல் அவர்களை (ஏன் உங்களையுந் தான்!) வெளியே முற்றத்தில் அமர வைக்கவேண்டிய நிலை! 'எழுத்தாளர்' எனக்கு ஒரு மேசை போட முடியாத "இடவசதி!". விழிசிட்டியில் விடுபட்டவை போக, மீதியாக உள்ள பொருட்களிலும் தளபாடங்கள் சில சுதுமலையில், புத்தகங்கள் பல கரவெட்டியில். நாங்கள் இணுவிலில்! இந்த இழப்பின் தாக்கம் மிகப் பெரிது. "குருவி கூவ மறந்ததோ?" நாடகத்தின் மூலமும், "முகாமுக்குப் போகாத அகதிகள்", "மனதையே கழுவி" போன்ற சிறுகதைகள் மூலமும் ஒரு சிறு பகுதி முட்டைத் தீர்த்துள்ளேன். ஆனால் பெரும் பகுதி ஆழ் மனதில் புதைக்கப்பட்டுள்ளது. எப்போது எப்படி வெளிவரும் என்று சொல்லமுடியாது.

**☑ இன்றைய எமது வாழ்வுடன் போராட்டமும், மனித உறவு நிலையில் போராளிகளும் ஒன்றிணைந்த தன்மை உண்டு. இந்த அம்சங்களை உள்ளடக்கும் இலக்கியங்கள் அவற்றிற்குரிய சிறப்பியல்புகளுடன் வெளிவருவதே இனி வரும் பெறுபேறு எனக் கூறப்படுகிறது. இந்தக் கூற்றில் உங்கள் கருத்து என்ன?**

சரிதான். வாழ்வுதான் இலக்கியமாகும். இயல்பாக அது அப்படித்தான் வரும். வரவேண்டும்.

**☑ நமது இன்றைய சிறுகதை, நாவல் இலக்கியத்தின் போக்குப் பற்றிக் கூறுங்கள்:**

வாழ்வும் போராட்டமும் பிரிக்க முடியாமல் இணைந்து போனதால் பெரும்பாலான சிறுகதைகள் அப் போராட்ட வாழ்வைப் பற்றிக்கூறுகின்றன. சில கதைகள் சிறப்பான கலையம்சத்துடன் வருகின்றன. பெரும்பாலானவை போராட்டத்தைப் பற்றி எழுதவேண்டும் என்ற ஆர்வம் மட்டும் கொண்ட கதைகள் ஆகிவிடுகின்றன. அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதில் சிக்கல் கொண்ட, அமைதியற்ற, அந்தரமும் பதற்றமும் நிறைந்த வாழ்வு நாவல் எழுத உகந்த சூழ்நிலை இல்லாததாலோ என்னவோ வெளிவரும் நாவல்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. காகிதத் தட்டுப்பாடும் ஒரு காரணம். ஆழமான மன எழுச்சிகளைத் தருகின்ற துன்பமே எப்போதும் அற்புதமான இலக்கியங்களின் தோற்றத்திற்குக் காரணமாய் இருந்துள்ளன. இரண்டாம் உலகப் போரின் பின் எழுந்த இலக்கியங்கள் இதற்குச் சான்று. இந்த வகையில் இந்த மண்ணிலும் இந்தச் சூழல் மிகச் சிறந்த இலக்கியங்களைத் தோற்றுவிக்கும். அத்தகையதொரு காலம் தானாகக் கனிந்து வரும். என்னைப் பொறுத்த வரையில் இடம்பெயர்ந்த நிலையும், எனது குடும்பத்தின் பொருளாதாரத் தாக்கமும் நாவல் எழுதும் எனது ஆவலைத் தற்காலிகமாக மழுங்கடித்துள்ளன. 1982-ம் ஆண்டு முதல், வருடம் ஒரு நூல் வெளியிடுவது என்ற ஒழுங்கான திட்டத்

## சிறுகதை

★ **சிறுகதையில் கதாநாயகன் என்றொரு பாத்திரம் கிடையாது. அதற்குப் பதிலாக வறுமைத் துயரில் முற்றிலும் ஆழ்ந்த மக்கள் கூட்டமே சிறுகதையின் கதாநாயகர்கள்.**

**- பிராங் ஓ ஹென்றி**

★ **சிறுகதை குதிரைப் பந்தயம் போல் தொடக்கமும் முடிவும் சுவைமிக்கதாய் இருத்தல் வேண்டும்.**

**- செட்ஜிவிக்**

★ **சுவரின் மீது ஒரு துப்பாக்கி மாட்டப்பட்டிருப்பதாக, கதையின் தொடக்கத்தில் நீ வருணிப்பாயேயானால், கதை முடிவதற்குள் அது கட்டாயம் ஒரு முறையாவது வெடித்தாக வேண்டும், அப்படி வெடிக்கவில்லை என்றால், அதனை நீ குறிப்பிட்டிருக்கவே கூடாது.**

**- ஆன்டன் செக்காவ்**

★ **அரை மணியிலிருந்து இரண்டு மணித்தியாலங்களுக்குள் வாசித்து முடிக்கக் கூடியதாய் சிறுகதை இருக்கவேண்டும்.**

**- எட்கார் ஆலன் போ**

★ **ஒரு "செக்"கைப் போல, இராணுவச் சுற்றறிக்கையைப் போல சிறுகதை இருக்க வேண்டும்.**

**- பாவெல்**

★ **கதைகள் கவிதை நிரம்பினவாய், ரச பாவோபேதமாய் இருக்க வேண்டும் என்பது எனது அபிப்பிராயம்.**

**- வ.வெ.சு. ஐயர்**

★ **வேதாந்திகள் கைக்குள் சிக்காத கடவுள் மாதிரிதான் நான் பிறப்பித்துவிட்ட கதைகளும், அவை உங்கள் அளவுகோல்களுக்கு அடைபடாதிருந்தால் நான் பொறுப்பாளியல்ல. நான் பிறப்பித்து விளையாட விட்டுள்ள ஜீவராசிகளும் பொறுப்பாளிகளல்ல.**

**- புதுமைப்பித்தன்.**

★ **ஒரு பாவமோ, ஒரு கோபமோ, ஒரு ஆத்திரமோ, ஒரு செயலோ, ஒரு குணாதி**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தின் கீழ் செயற்பட்டு வந்த நான் 1987-ல் போர்ச் சூழல் மிக இறுக்க மான நிலையோடு எல்லாவற்றை யும் கைவிட வேண்டியதாயிற்று.

**☑ இன்றைய எமது இலக்கிய விமர்சனத்தின் போக்கும் வளர்ச்சியும் பற்றிய உங்களின் அபிப்பிராயம்?**

விடுதலைப் போராட்டம் என்ற வேள்வி நடைபெறும் போது தனிமனித சுதந்திரப் பாதிப்புக்கள் சில இருக்கத்தான் செய்யும். அந்த வகையில் இலட்சியப் பற்றுள்ள, சமுதாயத்தை முன்னோக்கித் தள் ளும் குறியுள்ள இலக்கியங்களில் கலைத்துவப் பண்பும், உத்திச் சிறப் பும், வடிவ அழகும் சற்றுக் குறை வாக இருந்தாலும் மொத்தச் சமு தாய நன்மை கருதி விமர்சகர்கள் அக்குறைப்பாட்டைப் பெரிது படுத் தாது உற்சாகப்படுத்துகிற ஒரு நிலை காணப்படுகிறது. அது சரியான நிலைப்பாடு என்றே நான் கருதுகி றேன்.

**☑ இந்த நிலை படைப்புத்துறை பற்றிய சரியான கணிப்பீட்டை வழங்குமா? விமர்சனத்தின் தன்மை யில் தளர்வோ, சார்போ விரும்பப் படுவதில்லையே?**

ஒரு விடயத்தைத் தெரிந்துகொள் ளாமல் தவறு செய்பவன் திருந்திக் கொள்ள வேண்டும். தெரிந்து மீறு கிறவன் - பிரக்ஞைபூர்வமாக நல்ல நோக்கத்துக்காக மீறுகிறவன் - பாராட்டப்படவேண்டியவன். பிள்ளை வருத்தமாக இருக்கும் போது பத்தியம் கொடுக்கிறோம் என்றால்... நல்ல புரத உணவு சமைக்கத் தெரியாமல் இல்லை. முதலில் நோய் மாறவேண்டும். அது முக்கியம்.

**☑ நீங்கள் நாடகத் துறையிலும் ஈடுபாடு கொண்டவர். சிறுவர் அரங் கில் உங்கள் கவனம் அதிகமாக இருக்கிறது. இன்றைய நமது சூழலை யும் சிறுவருக்கான பிரச்சினைகளை யும் நமது சிறுவர் நாடகங்கள் கருப் பொருளாக்குவது பற்றி என்ன கூறு கிறீர்கள்?**

சிறுவர் நாடகங்களின் கருப் பொருள் அவர்களின் சிந்தனைக்கு எட்டக்கூடியதாகவும் அவர்களிடத் தில் நல்லதோர் மனப்பாங்கைத் தோற்றுவிக்கக் கூடியதாகவும் இருத் தல் மிக அவசியம். சிறுவரின் பிரச் சினைகள் நாடகமாக்கப்படலாம். அரங்கில் சிறுவர்கள் மிக விரும்பும் ஆட்டம், பாட்டு, விளையாட்டு என்பன விரவியிருத்தல் வேண்டும் எனவும், அரங்கு சிறுவர் விரும்பும் விடயங்களைக் கொண்டு கவர்ச்சி யாக்கப்படவேண்டும் என்றும் விட யம் தெரிந்தவர்கள் கூறுகிறார்கள். என்னைப் பொறுத்த வரையில் போர்ச்சூழலில் சிறுவர் பெற்றுள்ள உளப் பாதிப்புக்களை அவர்களின் மன இறுக்கங்களைக் குறைவடையச் செய்யும் ஒரே நோக்கத்திற்காகவே நாடகங்களைச் செய்கிறேன்.

எனது பாடசாலையில் சுமார் நூற்றிஐம்பது பிள்ளைகள் இருக்கி றார்கள். இவர்களுக்கு உணவு, உடை, உறையுள், பாதுகாப்பு, அன்பு என்ற அடிப்படைத் தேவைகளே முழுமையாகப் பூர்த்தியாக்கப் படாத நிலை. இந்தப் பிள்ளைகள் "வீட்டு வேலை" செய்யவில்லை என்று அல்லது பரீட்சையில் அதிக புள்ளி எடுக்கவில்லை என்று நாங் கள் அவர்களைத் தண்டிப்போமா யின் எங்களை விட முட்டாள்கள் வேறு இருக்கமுடியாது. அவர்களது உள்ளத்திற்கு ஒத்தடம் தேவைப்படு கிறது. அவர்களின் உணர்வுகளுக்கு வடிகால் தேவைப்படுகிறது. டி. வி., வானொலி போன்ற பொழுது போக்குகள் எதுவும் அற்ற இறுக்க மான சூழலில் கலை மூலமாவது அவர்களைக் கொஞ்ச நேரம் தளர் வாக இருக்கச் செய்கிறேன். இதுவே இன்று ஒரு கலைஞன் செய்யக் கூடிய மிகப் பெரிய பணி என்பது என் கருத்து.

**☑ நவீன நாடகம் பற்றிய விழிப் புணர்ச்சி எந்த அளவுக்கு நமது பார் வையாளரிடம் சென்றுள்ளது? உங் கள் நாடகங்கள் இதில் எந்தவகை யான பங்காற்றியிருக்கின்றன?**

நவீன நாடகம் பற்றிய விழிப் புணர்வு எமது பார்வையாளரிடம் போதாது என்பது உண்மைதான். அதைப் படிப்படியாக வார்த்தெ டுக்க வேண்டியது நாடக அறிஞர்க ளின் கடமை.

உலக நாடக அரங்கு எங்கோ வெகு தொலைவுக்கு வளர்ந்துவிட் டது. நாங்கள் நிமிர்ந்தாவது பார்க் கத்தான் வேண்டும். என்னைப் பொறுத்த வரையில் கலை, இலக் கியத் துறையில் விமர்சகர்கள் பாராட்டும் படி பெரிதாக எதையும் செய்ய வேண்டும் என்ற எண்ணம் 1987-க்கு முன் இருந்தது உண்மை தான். இன்று என்னைச் சுற்றி நிறைந்துள்ள துன்பம் என்னை வதைக்கிறது. self actualization என் பது எங்கோ எட்டாமல் செல்வது போலிருக்கிறது. எனது நண்பர்கள், உறவினர்கள், மாணவர்களின் துன் பத்தையும் எனது துன்பத்தையும் குறைக்கும் ஒரு ஊடகமாகவே நான் நாடகத்தைப் பயன்படுத்துகிறேன். (நடிகர், பார்வையாளர் இரு பகுதி யினருமே நன்மை பெறுகிறார்கள்) மனதுக்குப் பெரிய அமைதி தரு கின்ற பணி இது!

# என்பது....

***சயமோ ஒடிக் கடைசி வரை நீடித்து ஒன் றாகப் பரவியிருக்கிறது சிறுகதைகளிலே என்று கூறலாம்.***

**- க. நா.சு**

★ **சிறுகதையை அதிக பலம் உள்ளடக்கி வைக்கப் பெற்ற ஒரு கிரனைட்டுக்கு ஒப்பிடலாம். அது வெடிக்கும் போது ஆயிரம் சூரியன்களைக் கண்டது போன்ற ஒரு சத்திய தரிசனம், ஆன்ம திகைப்பு, இழைவு, மீள் கண்டுபிடிப்பு ஏற்பட வேண்டும். அது ஒரு சிக்கலான படைப்பு. அதில் வெற்றி பெறுவதற்கு மிகுந்த திறன் வேண்டும்.**

**- கா. சிவத்தம்பி**

★ **சுவையான ஒரு நிகழ்ச்சி, அல்லது சூழ் நிலை, கவர்ச்சியாக ஒரு காட்சி, நெருக் கிப் பின்னப்பட்ட சிறு நிகழ்ச்சிகள், ஒருவனின் தனிப்பண்பு, ஒரு சிறு அனுபவம், வாழ்க்கையின் ஒரு வெற்றி, அந்த உணர்வால் ஒரு சிக்கல் இவற்றில் ஏதேனும் ஒன்று, அல்லது இவை போன்ற ஏதேனும் ஒன்று நல்ல சிறுகதையின் அடிப்படையாக அமையலாம்.**

**- மு. வரதராசன்**

★ **அழுத்தமான நோக்கம் இல்லாதவை கதைகளே அல்ல. அழுத்தமான நோக்கம் இல்லாது நான் கதை எழுதுவதில்லை.**

**- கு. அழகிரிசாமி**

★ **ஒவ்வொரு சிறுகதையிலும் சமுதாயத்திற்கு தேவையான ஒரு விஷயமாவது இருத்தல் விரும்பத்தக்கதாகும்.**

**- ராஜாஜி**


★ **ஒரு கதாபாத்திரத்தின் இயல்பைக் கூறுவ தாகவோ, ஆழமான மனித உணர்வுக ளில் ஒன்றை வெளிப்படுத்துவதாகவோ, வாழ்க்கையின் ஒரு நிகழ்ச்சியைச் சுவை பட எடுத்துரைப்பதாகவோ, வாழ்க்கை யின் ஒரு சிக்கலை அழகாக அல்லது அழுத்தமாக எடுத்துக்காட்டுவதாகவோ சிறுகதை இருக்கலாம்.**


**- அகிலன்**

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இதயம் கனக்கும் எட்டாவது ஆண்டு





தமிழீழத்திலேயே பெண்கள் உலகில் எங்கும் இல்லாதவாறு போரில் வல்லவர்களாக திகழ்கிறார்கள். கடற்சண்டைக் களங்களில் கூட அவர்கள் முன்னிலையில் நிற்கிறார்கள். ஆண் போராளிகளுக்கு நிகரான வர்களாக களங்களில் அவர்கள் செயற்பட்டு வருகிறார்கள். இது புகழ்ச்சிக் கூற்றல்ல. நிதர்சனமான் உண்மை.

பெண்கள் சமூகம் அனுபவித்து வந்த அடக்குமுறைகளுக்கு எதிராக அவர்கள் போராட வலுவற்றவர்களாக இருந்தார்கள்.

சிங்கள இராணுவ அடக்குமுறைக்கும் சமூக அடக்குமுறைக்கும் முகம் கொடுக்க வேண்டியவர்களாக இருந்தார்கள்.

அப்போது எமது விடுதலை இயக்கம் அவர்களை அணைத்துக் கொண்டது. எமது தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் பெண்களையும் விடுதலைப் போரில் இணைத்துக் கொண்டு விடுதலைப் போரை முன்னெடுத்தார்.

எமது தலைவரின் எண்ணத்தை செயற்படுத்தும் முயற்சியின் முதன்மையானவனாக திலீபன் செயற்பட்டான்.

அக்காலத்தில் முதன் முறையாக இணைந்து கொண்ட பெண்கள் அணியினர் மிகத் திறம்படச் செயற்பட்டு புதிய நம்பிக்கையைப் பிறப்பித்தனர்.

இவ்வாறு விடுதலைப் போரில் இணைந்து கொண்ட பெண்கள் அணியினர். இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தை எதிர்த்து சண்டையிடத் தொடங்கினர்.

சிங்கள இராணுவ அடக்குமுறைகளுக்கு எதிராகவும் சமூக தளங்களில் இருந்து வரும் அடக்குமுறைகளுக்கு எதிராகவும் போராடிக் கொண்டிருந்த தமிழீழப் பெண்கள் இந்திய வல்லாதிக்கத்தை எதிர்த்துப் போரிடுகின்ற மிகப் பெரிய துணிச்சலைப் பெற்றனர். எத்தகையதொரு அடக்குமுறைக்கெதிராகவும் போராடுவோம் என்பதைப் பறைசாற்றி, அனைத்து அடக்குமுறைகளையும் தகர்த்து நிற்போம் என நிமிர்ந்தனர் பெண்கள். தமது சுதந்திர ஆகர்சிப்பை வெளிப்படுத்தி, ஆண்டாண்டு காலமாய் அடங்கிக் கிடந்தது போதும் எனத் துடித்தெழுந்த முதற் பெண்கள் அணியினரில் முதன்மையானவாளாக களத்தில் நின்று வீரமரணம் அடைந்தாள் 2-ம் லெப் மாலதி. 10-10-1987 அன்று மண்ணில் விதையாய் விழுந்த நாளே தமிழீழப் பெண்கள் எழுச்சி தினமாக எமது இயக்கத்தால் பிரகடனப் படுத்தப்பட்டிருக்கிறது. அத்தகைய நாளில் புலம் பெயர்ந்து வாழும் தமிழீழப் பெண்களும் எழுச்சி பூணத் திடசங்கற்பம் கொள்ளுதலும் அந்நாளை எழுச்சியாக நினைவு கூருவதும் அவர்களது கடமையாகும்.

எரிமலையாகக் குமுறும் - எம்
விடுதலைத்தீயை அணைக்க வந்தவரின்
முகத்தில் அறைந்து
சுதந்திரத்தின் கனத்தை
உலகுக்கு உரைத்த உத்தம் வீரர்களே!
வாழ்வின் சுகம் துறந்து
கடலின் மடியில் வலுச் சேர்த்தீர்.
ஓயாது ஏழும் அலையோசையுடன்
சுழன்றடித்து
போராட்டப் பாதைக்கு பலம் தந்தீர்.
தீருவில் வெளியில் - எம்
விடுதலைக் கனலுக்கு வேகம் தந்தீர்.
பகைவன் பாசறைக்குள்
தமிழனின் மானம் காத்த தூயவரே!
நீங்கள் அலையேறிப் போன கடலில்
பகைவன் முதுகெலும்பை உடைத்து
அவன் குரல் வளை நசித்து
காவியம் படைக்கும் உங்கள் குழந்தைகள்
உங்கள் தடம் பற்றிச் செல்கின்றனர்.
தீருவில் வெளியில் நிமிர்ந்து நிற்கும்
உங்கள் கல்லறைக்கு காணிக்கை ஏது?
கண்ணீரா? இல்லை
தமிழீழம்.... தெளிவாகத் தெரிகின்றது.
05-10-1987
தாய் மானம் காத்து தனையர் வீழ்ந்த நாள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஓவியம்:- மகா

# வீட்ட போவம்

இளையவன்

“வா..... அம்மா ... சீல.... உடு.... வீட்ட போவம்”

ஆனந்தன் அந்த இடத்திற்கு வந்து சுமார் பத்து நிமிட இடைவெளிக்குள் நான்கு அல்லது ஐந்து தடவை இந்தச் சொற்களைக் கேட்க நேர்ந்திருந்தது.

இம்முறை சற்றுப் பலமான சிணுங்கலுடன் “வா அம்மா வீட்ட போவம் சீல உடு” எனக் கேட்ட பொழுது ஆனந்தன் பார்வையைத் திருப்பினான். வயது மூன்று அல்லது நான்கு இருக்கக்கூடும், ஒரு சிறுவன், நடுத்தர வயதுப் பெண் ஒருத்தியுடன் சிணுங்கிக் கொண்டிருந்தான். சிறுவனின் குரலுக்கு நேரடிப் பதிலாக எதையும் கூறாமலே “அங்க அண்ணாச்சியவையோட போய் விளையாடுங்கோ” என்றாள், நீண்ட கவுண் ஒன்றை அணிந்திருந்த அப் பெண். தாலிச் சரடு நூலில் தொங்கிக் கொண்டிருக்க - வசதியாக வாழ்ந்திருக்கக் கூடியவள் என்பதைக் காட்டும் வசீகரமான முகத் தோற்றத்தில் வாட்டம் கோடிட்டு இருந்தது. ஒருவித சோகம் அப்பியிருந்தது.

“இல்ல.... நா மாட்டன்.....வா அம்மா.... வீட்ட போவம்” என்ற சிறுவனின் சிணுங்கல் அழுகையா மாறத் தொடங்கியது.

“சரி.... சரி..... அழாதையுங்கோ. அப்பா வந்த பிறகு போவம்” இசைவாகினாள்.

“அப்பா எப்ப வருவார்?” அடுத்த கேள்விக்குத் தாவினான் சிறுவன்.

“பின்நேரம் வந்திடுவார். இப்ப.... இந்தாங்க இதைச் சாப்பிடுங்க” என்றாள் அவள் ரொபியை கையில் வழங்கியபடி.

“எப்ப நாங்கள் வீட்ட போறது” என்றான் சிறுவன் ரொபியைக் கையில் வாங்கியபடி.

“அப்பா வந்தவுடன் அவரிட்டக் கேப்பம் என்ன?”

“எப்ப போறது சொல்லு....” சிணுங்கினான் மீண்டும்.

“அழப்படாது... எல்லே, சொல்லுறன்.”

“எப்ப.... வீட்ட போறது.”

“சரி, நாளைக்குப் போவம்..... இப்ப அழாமல் இந்த ரொபியைச் சாப்பிடுங்கோ.”

“இல்லை..... இண்டைக்குப் போவம்.... இப்ப போவம்.... வா... சீல உடு.... வீட்ட போவம்.”

இந்த உரையாடலுக்கு இதுவரை பொறுமையா செவி கொடுத்த ஆனந்தன், வேப்பமர நிழலில் நின்ற அப்பெண்மணியை அணுகிப் பேச்சுக் கொடுத்தான்.


“அக்கா உங்களுக்கு எந்த ஊர்” இது ஆனந்தன்.

“திருகோணமலையில் சாராதா வீதி. ஏன் தம்பி கேட்கிறீர்” என்றாள் அவள்.

“இல்ல இவ்வளவு நேரமும் பிள்ளை சினந்து பிடிக்கிறதைப் பார்த்துக்கொண்டு நிண்டனான். அதுதான் கேட்டனான்.”

“ஓமோம்.... திடீரெனச் சாமத்தில

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



www.tamilarangam.net

அந்தரப்பட்டு வெளிக்கிட்டு வந்திட்டம், பிள்ளைக்கு தாங்கேலாமக் கிடக்கு..... எப்பவும் வா அம்மா வீட்ட போவம் எண்ட படி தான். நித்திரையில கூட இப்படித்தான் வாய் புலம்புகிறான்" எனக் கூறிய போது அவளுக்கு கிட்டத்தட்ட அழுகையே வந்துவிடும் போலிருந்தது. கண்கள் கலங்கின.

அவளை ஆறுதல்படுத்த வேண்டும் எனக் கருதியதாலோ... என்னவோ ஆனந்தன் தொடர்ந்தும் அவளிடம் பேசினான்.

"எப்ப அக்கா வீட்டை விட்டு வெளிக்கிட்டனியள்?"

அவளது கண்களில் நீர் முட்டித் தேங்கியது. ஆனந்தன் திகைத்து நின்றான்.

★★★

*14-6-90*

நள்ளிரவு நேரம். திருகோணமலை நகரம் அதிர்ந்தது.

எங்கும் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் காதைக் கிழித்தது. "சொய்" என்ற இரைச்சல். உயிரைக் குடிக்கும் ஆவேசத்துடன் சன்னங்கள் பறப்பதை உணர்த்தியது.

பட்... பட்.. படப்... படீர்... படப் பட. என்ற ஒலியலைகள் அனைவரது உறக்கத்தையும் கலைத்தது.

ஆளரவமும், பேச்சுக்குரல்களும், சனங்கள் திக்குக்கு ஒருவராய் ஓடுவதை உணர்த்தியது. திடுக்கிட்டு எழுந்த கோபாலன் மின் விளக்கை ஏற்றினான்.

சரசாவும், கண்களை விழித்து "என்னப்பா.... என்ன ஒரே அல்லோல கல்லோலமாய் கிடக்கு" எனக் கேட்டாள்.

"என்ன நடக்குது... எந்தப் பக்கம் போறாய்?" என்றொரு குரல் தெருவில் பலமாகக் கேட்டது.

"சண்டை தொடங்கியிட்டுது...... ஆமியும்... நேவியும் சுட்டுக்கொண்டு வாறானுவள்." என்று ஆரோ ஓட்டமும் நடையுமாக செல்லும் வேகத்திலேயே பதில் சொல்லிக்கொண்டு போனார்.

"இங்க பாரும்" பக்கத்து வீட்டு சாம்பசிவத்தின் குரல் தெளிவாகக் கேட்டது. சட்டென கதவைத் திறந்து தெருவை எட்டிப் பார்த்த கோபாலன் ஒரு கணம் திடுக்கிட்டுப் போனான்.

அயலவர்ககள், அடுத்த தெருவில் இருப்பவர்கள், மற்றும் அநேகர் கைகளில் எதை, எதையோ காவியபடி ஓடிக்கொண்டிருந்தனர். அசுர கதியில் சனக்கூட்டம் நகர்ந்து கொண்டிருந்தது. வாசற்புறத்தடியில் இருந்தபடியே "சரசா! கெதியா வெளிக்கிடும். சனமெல்லாம் ஓடுது... நாங்களும் போவம்" எனக் குரல் கொடுத்தான் கோபாலன்.

"தம்பி! நீங்கள் இன்னும் வெளிக்கிடல்லையே?"

கோபாலனின் குரல் கேட்ட சாம்பசிவம் கேள்வி எழுப்பினார்.

"இல்லையண்ணா... இப்பதான் கண் முழிச்சது.. எந்தப் பக்கம் போனால் நல்லது... சண்டை எந்தப் பக்கத்தில் நடக்குது?" கோபாலன் கேட்டான்.

"தம்பி! எனக்கு ஒண்டும் சரியா சொல்லத் தெரியேல்ல.... ஆனா சனமெல்லாம் உவர்மலையைக் கடந்து அன்புவழிப்புரப் பக்கமாய்த் தான் ஓடுது. ஓடுற சனத்தோட ஓடுவம். தப்பியொட்டியிருந்தால் பிறகு எதோ எல்லாத்தையும் பாப்பம்." சாம்பசிவம் பரபரத்தார்.

கண்களைக் கசக்கி நித்திரைச் சோம்பலை முறித்துக் கொண்டு சாம்பசிவத்தின் மகன் - ஏழு அல்லது எட்டு வயது இருக்கக் கூடும் - வசந்தன் நடுங்கியபடி அவ்விடம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

வந்து சேரவும், சாம்பசிவத்தின் மனைவி இரண்டு பெரிய சூட்கேசுகள் - ஒரு பெரிய ட்றவலிங் பாக் - மற்றுமொரு பாக் என்பவற்றை வெளியே தள்ளி கதவுகளைப் பூட்டும் சத்தம் கேட்கவும் சரியாக இருந்தது.

"தம்பி, இனி மினக்கெட ஏலாது.. நீங்களும் சுறுக்கா வந்து சேருங்கோ" என்று கூறிவிட்டு சாம்பசிவம் வேகமாக நடந்தார்.

திரும்பி வீட்டைப் பார்த்த கோபாலன், "அண்ணை லையிற்றுகள் எரியுது" என்றான்.

"இனி ஆர் கதவைத் திறந்து லையிற் நூர்க்கிறதில மினக்கெடுகிறது. அது கிடக்கிட்டும். நீர் கெதியா நடவும்" சாம்பசிவம் மனைவிக்கு கூறுவது கோபாலனுக்கு தெளிவாகக் கேட்டது. அதனால் அவனுக்குள் மேலதிகமாக ஒருவித பதற்றம் மேலெழுந்தது.

"இஞ்ச சரசா.... என்ன செய்யுநீர்.. இன்னும் வெளிக்கிடேல்லையே. சனமெல்லாம் போட்டுது." எனக் கூறிக்கொண்டு வீட்டுக்குள் புகுந்தான் கோபாலன்.

"நான் ரெடியப்பா..... பிள்ளையையும் வெளிக்கிடுத்திப் போட்டடன். ஆனா வீட்டுச் சாமான்களைத்தான் எதை எடுக்கிறது... எதை விடுகிறது... எண்டு தெரியேல்ல." சரசா பதிலளித்தாள்.

"இப்ப உதுகளை யோசிக்கிறதல பிரயோசனமில்லை சரசா! முதலில் உயிரைக் காப்பாற்ற வேணும். ஆனபடியா கையில் பொறுக்கக் கூடிய உடுப்புக்களை மட்டும் எடுத்துக் கொண்டு போவம். பிறகு மிச்சத்தைப் பார்ப்பம்" கோபாலன் பரபரத்தான்.

"சண்டை தொடங்கினது உங்களுக்கு தெரியாதே அக்கா" ஏதோ கேட்க வேண்டும் என்பதற்காக ஆனந்தன் கேட்டான்.

"இல்லைத் தம்பி, இரண்டு மூன்று நாளுக்கு முதலே மட்டக்களப்பு பக்கத்தில ஏதோ பிரச்சினை எண்டெல்லாம் கதையள் அடிபட்டது தான். ஆனால் திடீரென இப்படிப் பெரிய சண்டையா வருமெண்டு ஆருக்குத்தெரியும்?" சரசா கூறினாள்.

"அங்கிருந்து எப்படி இங்க யாழ்ப்பாணம் வரைக்கும் வந்து சேந்தியள்?"

"ஓட்டமும் நடையுமாய் நடந்து நிலாவெளிக்கு வந்து சேரவே விடிஞ்சு போச்சு. நிலாவெளியில் பள்ளிக்கூடம், கோயில், மற்றும் மர நிழல்கள், வெட்டவெளிகள் எல்லாம் மறைவிலிருந்து ஓடி வந்த சனங்களால நிறைஞ்சு போய்க் கிடந்தது.

இங்கன இருக்கலாம். கொஞ்ச நாளையில எல்லாம் சரிவந்திடும் தானே. பிறகு திரும்பிப் போகலாம். அப்பிடி எண்டுதான் அப்பவும் சனங்கள் நினைச்சதுகள்."

'மத்தியானச் சாப்பாட்டுக்காவது ஏதாவது அடுக்குப் பார்ப்பம்' எண்டு சொல்லிப்போட்டு போன இவர், கொஞ்ச நேரத்தில 'ஆறாம் கட்டைச் சென்றியையும் ஆமி உடைச்சுப் போட்டுதாம்' என்று அரக்கப்பரக்க வந்து சேர்ந்தார்.

'ஆறாம் கட்டைச் சென்றியையும் ஆமி உடைச்சுப் போட்டுதாம்' என்ற செய்தி பரவத் தொடங்கியதும், சனமெல்லாம் பெட்டி படுக்கையோட மற்றும் மூட்டை முடிச்சுகளோட மீண்டும் வேகமாக நகரத் தொடங்கியிட்டுதுகள்.

**(தொடர்ச்சி 27-ம் பக்கம்)**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

இத்தாலி பலெர்மோவில் தனது இரண்டாவது பிறந்த நாளை குழந்தை தமிழழகி கொண்டாடி னாள்.

கொண்டாட்டம் ஆரம்பிக்கும் வேளை, அதுவரை மூடப்பட்டிருந்த சீலை அகற்றப்பட்டது. அங்கே கண்ட காட்சியை கண்டதும் எனக்கு ஆச் சரியம் தாங்க முடியவில்லை. பச்சை நிறத்தில் தரையும், மரங்க ளும். நடுவிலே ஒரு போத்தல். அப் போத்தலின் உள்ளே சிங்கள இரா ணுவமும், கவசவண்டிகளும் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. அப் போத்தலின் வாய் பாதியாக மூடப் பட்டிருந்தது. போத்தலின் மேலே சீறிப்பாயும் வேங்கையொன்றும் வைக்கப்பட்டு, போத்தலில் “புலிப் பாய்ச்சல்” என்றும் எழுதப்பட்டிருந் தது. தரையில் வரிப்புலி வீரர்கள் விமான எதிர்ப்பு துப்பாக்கியுடன் அணிவகுத்து நின்றனர்.

விடுதலைப் புலிகள் ‘புலிப்பாய் சல்’ எதிர்த்தாக்குதலின் போது, போத்தல் வடிவிலான வியூகத்தால் இராணுவத்தை மடக்கி அழித்தனர் என்பதை உருவகிப்பதாகவே அது அமைந்திருந்தது.

ஒரு உலங்கு வானூர்தியொன்று துப்பாக்கிச் சூட்டினால் புகைந்து கொண்டிருப்பதையும் கண்ணுற் றேன்.

இந்த வியப்பில் இருந்து என் னால் விடுபட முடியாதிருந்தது. புலம்பெயர் மண்ணில் வசதி வாய்ப்புக்களோடு வாழ்ந்து வரும் நாம் அநேகமாக எமது கொண்டாட் டங்கள், வைபவங்களை, எங்கள் ‘அந்தஸ்தை’ வெளிப்படுத்தவே பயன் படுத்துகிறோம். ஆனால் போராட் டத்துக்குப் புதிய வடிவொன்றைக் கொடுத்த இந்த பிறந்தநாள் வைபவம் எனக்குள் ஒரு விதமான சந்தோ ஷத்தை அளித்தது.


இன்று தமிழீழத்தில் தமிழீழத்துக் கான விடுதலைப் போராட்டத்தில் எமது தமிழ் மக்கள் தாங்கொணா துயரத்திற்கு மத்தியிலும் தம்மால் முடிந்ததை செய்கின்றனர்.

புலம்பெயர்ந்த மக்கள் மத்தியிலும் தேசப்பற்றும் விடுதலைப் பற்றுணர் வும் வளர்ந்து வருவதற்கான மன மாற்றங்கள் நிகழ்ந்துவருகிறது.

எங்களுக்கொரு தேசம் வேண்டும் என்ற உண்மையை காலம் அவர்க ளுக்கு உணர்த்தி வருகின்றது.

அத்தோடு அவர்கள் விடுதலைப் போராட்டம் குறித்தும், மாவீரர்க ளின் தியாகம் குறித்தும் ஆழ்ந்த அக்கறை கொள்கிறார்கள். போராட் டம் வெல்லும் என்ற நம்பிக்கை அவர்களுக்குள் பலமாக எழத் தொடங்கிவிட்டது என்பதையே அந்நிகழ்வின் மூலம் நான் விளங்கிக் கொண்டேன். அத்தோடு அவர்கள் இதில் இரட்டிப்புச் சந்தோஷத்தைச் அடைகின்றார்கள். ஒன்று, “புலிப் பாய்ச்சல்” வெற்றியின் சந்தோசம். இரண்டு, தன் மகளின் பிறந்த நாள் சந்தோஷம் எனலாம்.

**- மேத்தா**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

(25-ம் பக்கத் தொடர்ச்சி)

"எங்கையப்பா போறது" இது சரசாவின் கேள்வி.

"எங்கையெண்டு இல்ல போற சனத்தோட போவம், பிறகு பார்ப்பம்" கோபாலனின் பதில்.

இதுக்கிடையில்... டாம் டோம்... என்று பெரிய சத்தங்கள் மிகச் சமீபமாக ஷெல்கள் விழுந்து வெடிப்பதை உணர்த்தியது.

பள்ளிக்கூடத் தரையில நித்திரையா கிடந்த பிள்ளை சத்தங்களோட திடுக்கிட்டெழும்ப - தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டு நடக்கத் தொடங்கினம்.

"அம்மா! எங்க போறம்" என்றான் முதல் கேள்வியாக. இதுக்கு என்ன பதில் சொல்லுறது எண்டு யோசிக்க முன்னமே, அவன் "அம்மா! வீட்ட போவம்" எனச் சிணுங்கத் தொடங்கி விட்டான்.

"ஓமோம், வீட்டதான் போறம். நீங்கள் நித்தாக் கொள்ளுங்கோ" அவள் செல்லமாகக் கெஞ்சினாள். ஆனால் அவனோ தொடர்ந்து சிணுங்கினான். கோபாலன், மகனைத் தனது தோளுக்கு மாற்றிக் கொண்டான். அவனது வேகமான நடைக்கு ஈடு கொடுக்க முடியாமல் அவள் தடுமாறினாள். 'நிலாவெளியிலிருந்து புறப்பட்டு - கும்புறுப்பிட்டிப் பாலத்தை ஆற்றுக்கு குறுக்காக கடந்து - குச்சவெளிக் காட்டுக்குள்ளால போய் கல்லம்பத்தையை தாண்டி -திரியாய்க்கு வந்து சேரவே ஒரு நாள் பொழுது சரி. திரியாயில ஒரு இரவு தங்கினம். அந்தச் சனம் தான் இரவுச் சாப்பாடு தந்ததுகள். எல்லாமாய் இருநூறு குடும்பத்துக்கு மேல வரும், திரியாயில வந்து தங்கின சனம் மட்டும். மலையிலிருந்து வந்த அவ்வளவு சனமும், திரியாயில தங்கிறது எண்டால் ஏலாத காரியம். அதால அடுத்தநாள் பொழுது கிளம்பினதோடவே திரும்பவும் வெளிக்கிட்டம்.'

'எங்களோட வந்த சனத்தில கொஞ்சப் பேர் - எப்பன் வசதியான ஆக்கள் - புடவைக்கட்டுக்குப் போய் அங்கிருந்து கடலால முல்லைத்தீவுக்கு போகப்போறதெண்டு போனவையள். நாங்கள் திரும்பவும் கால் நடையாய் வெளிக்கிட்டு ஜான்ஓயாவைக் கடக்கிறதுக் கிடையில்', "சீ... எண்டு போச்சு" 'இதன்னடா சீரழிஞ்ச சீவியம். இப்படியும் சீவிக்க வேணுமோ?' எண்டெல்லாம் கூட அந்த நேரங்களில் யோசிச்சதுண்டு. எண்டாலும் அப்பப்ப பிள்ளையைத் திரும்பிப் பார்த்தவுடன் "இந்தச் சீவனைத் தவிக்க விடப் படாது. இதுக்காக எண்டாலும் எவ்வளவு கஷ்டப்பட்டு எண்டாலும் சீவனைக் காப்பாத்த வேணும்" எண்ட நினைவு வரும்.

அதுக்கிடையில் "அங்க ஆனை கத்துற சத்தம் மாதிரிக் கிடக்கு" "பண்டி மூசுறது போல கிடக்குது" "பாம்புகள் இந்தச் சருகுகளுக்குள்ள கிடக்கும் கவனம்" எண்டெல்லாம் கூட வந்த ஆக்கள் சொல்லச் சொல்ல நெஞ்சக்கூட்டுக்குள் பயம் பரவும். இதைவிட கல்லிறவு முகாமில இருக்கிற ஆமி காட்டுக்க எங்கயும் நிற்கிறாங்களோ தெரியாது எண்ட பீதிவேற. கொக்கிளாய் பக்கத்தில சிங்களச் சனங்கள் இருக்கினம்... அவையும் ஏதும் செய்வினமோ எண்ட பயம் வேற... இப்படியே பயந்து.... பயந்து.... செம்மலைக்கு வந்து சேரும் வரையும் உயிர் எங்கடை கையுக்க இல்லையெண்டுதான் சொல்ல வேணும். அந்த நாலு நாளும் சாப்பாடு..... என்ரையப்பா....' என்று கூறி பெருமூச்செறிந்தாள் சரசா.

"செம்மலையில் இருந்து இங்கால... என்ன மாதிரியக்கா வந்தனியள்"

"டிரக்டரில புதுக்குடியிருப்பு மட்டும் வந்து இஞ்சால பஸ்ஸில வந்தனாங்கள்."

இவ்வளவு நேரமும் இந்தக் கதையளுக்கு காது குடுத்ததாலோ, என்னவோ அமைதியாக இருந்த சிறுவன் மீண்டும் "அம்மா....வாம்மா வீட்ட போவம்" எனச் சிணுங்கத் தொடங்கினான்.

"தம்பி... இங்க வாங்கோ.. நான் பிள்ளைய வீட்ட கூட்டிப் போறன்." என்று கூறி சிறுவனிடம் நெருங்கிச் சென்றான் ஆனந்தன். ஒருவிதமான விறைத்த பார்வையுடன் நின்றான் அவன்.

"தம்பிக்கு என்ன பேர்?"

"பிரதீபன்" என்றது மழலைக்குரல்.

"உங்கட வீடு எங்க இருக்கு"

"அங்க மலையில இருக்கு"

"உங்கட அப்பா எங்க?" என்ற ஆனந்தனின் கேள்விக்கு சிறுவன் பதில் அளிக்கும் முன்பே, "இதில விதானயாரிட்ட நிவாரணத்திற்கு பதியப் போனவர்" என்றாள் அவள்.

"நானும் இந்த முகாமிலதான் தொண்டராக வேலை செய்யுறன். ஏதும் தேவையெண்டா கேளுங்கோ" எனக் கூறிய ஆனந்தன், பிரதீபனைப் பார்த்து "அப்பாட்டை போவமோ?" எனக் கேட்டான்.

"வீட்ட போவம்..." என்றான் அவன் பதிலாக.

"சரி வீட்ட போவம்.. எங்கட வீட்ட போய் மாமா சேட், கால் சட்டை போட்டு வெளிக்கிட்டுக் கொண்டு வாறன். தம்பியிட வீட்ட போவம் என்ன?"

"சரி! தம்பியிட வீட்ட போவம்.... அங்க என்ன இருக்கு?"

"இல்ல எங்கட வீட்ட போவம்"

"எங்கட வீட்ட போவம்... அச்சா வீடு... எங்கட வீடு"

அதையே அவன் திரும்பவும் சொன்னான்.

மீண்டும், ஒரு நாள் அவன், தன் வீட்டுக்குச் செல்லும் நாள் வரும் என்று மட்டும் ஆனந்தன் உறுதியாக நம்பிக்கை கொண்டிருக்கிறான்.

---

பிறந்தவரும் யாவரும்
இறப்பதுறுதியெனும்
வெற்றியை அறிந்தாரேல் -
மானம்
துறந்தறம் மறந்தும் பின்
உயிர் கொண்டு வாழ்வது
சுகமென்று மதிப்பாரோ.
- பாரதி

---

இத்தாலி, பலர்மோவில் ஜக்-கோலோன் ஜியன்பிறாங்கோ (Giacolone Gianfranco) என்னும் 11 வயது இத்தாலியச் சிறுவன் எமது தமிழீழ தேசத்துக்கான போராட்டத்தினை தீவிரமாக அறிந்து கொண்டதுடன், அப்போராட்டத்தின் மீது அளப்பரிய பற்றுதலையும் கொண்டார். போராட்டத்தின் மீதான மதிப்புணர்வால் தமது உயரையே அர்ப்பணித்த மாவீரர்களின் நினைவாக, மாவீரர் நினைவுச் சின்னத்தை தன் கையாலேயே வரைந்து தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவுக்கு வழங்கியுள்ளார். இவருடைய தாயாரும் இவரைப் போன்றே அன்பளிப்புச் செய்வதற்காக களிமண்ணில் மாவீரர் உருவச் சின்னம் செய்வதில் ஈடுபட்டுள்ளார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விரைந்து வருகிறது 'தகவல் ஆட்சி'

## எதிர்கால ஆட்சிமுறை பற்றிய ஓர் எதிர்வுகூறல்

- வெற்றிநிலவன்

உலகம் விரைவாக மாறிக் கொண்டிருக்கின்றது. இருபத்தோராம் நூற்றாண்டை நாம் அண்மித்துவிட்டோம்.

கைத்தொழிற்புரட்சிக்கு அடுத்ததாகக் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய புரட்சியாக தகவற் புரட்சியே அமைகிறது எனக் கூறப்படுகிறது. எந்த ஒரு புரட்சியும் சமுதாயத்தின் பல இயல்புகளை மாற்றி அமைத்து விடுவது போல இந்தத் தகவற் புரட்சியும் பல மாற்றங்களைக் கொண்டு வரும் என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இவ்வாறான மாற்றங்கள் குறித்து பெரிதாக எவரும் சிந்திக்கத் தொடங்கவில்லை என்ற குற்றச்சாட்டையும் இவர்கள் முன் வைக்கின்றனர். இவர்களின் கருத்துக்கள் உண்மையிலேயே சாத்தியமாகக்கூடியவையா? எதிர்காலத்தை இவர்களின் கருத்துக்கள் உண்மையிலேயே பிரதிபலிக்கின்றனவா என்ற பெருத்த ஐயத்தை இவர்களின் கருத்துக்களை அறிபவர்களிடையே எழுப்பிவிடும் அளவிற்கு இவர்களின் சிந்தனைகள் அழகாக வெளிப்படுகின்றன. இச் சிந்தனைகள் பற்றிய ஒரு சிறு அறிமுகமாகவும் தகவலின் முக்கியத்துவத்தை விளக்க முற்படுவதாகவும் இச் சிறு கட்டுரை அமைகிறது.

கைத்தொழில் புரட்சிக்குப் பின்னர் ஜனநாயகம் என்று சொல்லப்படுகிற மக்கள் ஆட்சி (Democracy) உருவாக்கம் கண்டது. இதன் காலம் முடிவுக்கு வருகிறது என்றும் அடுத்த நூற்றாண்டின் ஆட்சிமுறை மக்கள் ஆட்சியல்ல, அது தகவல் ஆட்சி (Cyberocracy) என்றும் இச் சிந்தனையாளர்கள் குறிப்பிடுகின்றனர். கார்ல் மார்க்ஸ் போன்ற சிந்தனையாளர்கள் தாம் வாழ்ந்த காலத்துச் சமுதாயக் கட்டமைப்பை அடிப்படையாக கொண்டு சிந்தித்தார்கள். ஆனால் தற்போது அக்காலத்திலிருந்த கட்டமைப்பு மாற்றம் காண்கிறது. இம் மாற்றம் எதிர் வரும் ஆண்டுகளில் மிக வேகமானதாக இருக்கும். எனவே பழைய சிந்தனையாளர்களின் சிந்தனை வீச்சுக்கு அப்பாற்பட்ட காலத்தை நாம் அண்மித்து விட்டோம் என்றும், பழைய சிந்தனைவாதிகளின் சிந்தனைகளைக் கிளறி, அவை மூலம் எதிர்காலத்தைப் பற்றிய எதிர்வுகூறல்களை மேற்கொள்வதென்பது இனிமேல் சிரமமானது என்றும் இவ்வாய்வாளர்கள் சிந்திக்கத் தலைப்படுகின்றனர்.

கைத்தொழிற்புரட்சிக்குப் பின்னர் தொழிலாளர் வகுப்புத் தோற்றம் கண்டது. இக் கைத்தொழிற் சமுதாயத்தினை விளக்க முயலும் போது பண முதலீடு, வேலை, தொழிற்சாலை, தொழில்வினைஞர் போன்ற சொற்பதங்கள் முக்கியமானவையாகின்றன. ஆனால் எதிர்காலத்துத் தகவற் சமுதாயத்தில் பணத்தை விடவும் தகவலே (information) முக்கியமானதாக அமையும். அங்கே தொழிற்சாலைகளின் முக்கியத்துவம் மிகவும் குறைவடையும், பதிலாக தகவல் வலைப்பின்னலே (network) தற்காலத் தொழிற்சாலைகளுக்கு ஈடான முக்கியத்துவத்தைப் பெறும். பணமுதலீட்டுக்குப் பதிலாக அறிவு முதலீடும் (intellectual capital), கைத்தொழிலாளருக்குப் பதிலாக அறிவுத்தொழிலாளரும் (knowledge workers) எதிர்காலச் சமுதாய அமைப்பில் முக்கியத்துவம் வகிப்பர். தொழில்களில் பெரும்பாலானவை குறைவான உடலுழைப்பை வேண்டுவனவாக அமையும்; அதேவேளை தொழில்கள் எல்லாம் மனித அறிவைக் கூடுதலாக வேண்டி நிற்பனவாக அமையும். முதலாளித்துவ வர்க்கம் என்ற தற்போதைய அதிகார மையத்தைப்போல எதிர்கால சமுதாயத்தின் அதிகார மையம் அறிவு வர்க்கத்தினரிடம் (knowledge elites) போய்ச் சேர்ந்து விடும். ஏழை பணக்காரன் என்ற வேறுபாட்டை விட தகவல் உள்ளோர், தகவல் அற்றோர் என்ற வேறுபாடே அச்சமுதாய அமைப்பில் அதிக அர்த்தம் கொண்டதாக அமையும். அப்படியானால் அடக்குமுறை வடிவங்களான காலனித்துவம், நவகாலனித்

## தகவல் முனையில் தமிழீழ விடுதலைப் போராட்ட முன்னெடுப்பு

பல் தேசிய நாடுகளாக பிற சக்திகளின் தலைமீட்டால் பலவந்தமாக உருவாக்கப்பட்டு, இன்று சுதந்திரத்திற்காகப் போராடிக் கொண்டிருக்கும் தேசங்கள் (nations) நான்காம் உலக நாடுகள் (fourth world) என்று வர்ணிக்கப் படுகின்றன.

இத் தேசங்களின் கையில் ஒரே ஒரு துருப்புச்சீட்டே உள்ளது. அது தேசங்களின் தன்னாட்சி உரிமை எனப்படுகிற சுயநிர்ணய உரிமை எனும் அடிப்படை உரிமைச் சாசனமாகும். இந்த உரிமைக்கு உரித்துடையவர்கள் என்பதை பல்நாட்டு அரசியல் அரங்கில் எடுத்துக்கூறி விடுதலைப் போராட்டத்திற்கு உறுதிசேர்க்கும் கடமை விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் தேசத்தினர் மத்தியில் உள்ள முக்கிய கடமையாகும். தன்னாட்சி உரிமைக்கான அங்கீகாரம் பெறப்படுவதற்காக ஆயுத முனையில் மட்டுமன்றி தகவல் முனையிலும் போராட்டத்தை நடாத்தவேண்டிய தேவை உள்ளது. தகவல் முனைப் போராட்டத்திற்கான வாய்ப்புக்களும் வசதிகளும் பல நான்காம் உலக தேசங்களுக்கு இல்லை. ஆனால் இத்தேசங்களில் பலவற்றுக்கு விதிவிலக்காக தமிழீழ தேசம் அமைகிறது. ஏனெனில் தமி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

துவம் போன்றவையை விட முக்கியத்துவம் பெறக்கூடிய அடக்குமுறை வடிவங்கள் எவை என்ற கேள்வி எழலாம். தகவல் மேலாதிக்கம் அல்லது தகவற்காலனித்துவம் (information imperialism or electronic colonialism) என்பது போன்ற அடக்குமுறைக்கான அணுகுமுறைகளே முக்கியத்துவம் பெறுபவையாக அமையலாம். இச் சமுதாயத்தில் அரசதிகாரம் அல்லது இறையாண்மை என்பது தகவல் இறையாண்மை (information sovereignty) என்ற வடிவிலேயே பெரும்பாலும் வெளிப்படும். இவ்வாறான கட்டமைப்புக்களைக் கொண்டதான சைபரோகிரசி (Cyberocracy) எனப்படும் தகவலாட்சி *21-ம்* ஆண்டின் ஆட்சி முறையாக அமையும் என்பதே இந்த ஆய்வாளர்களின் வாதமாகும்.

“தகவல் ஆட்சி வருகிறது” என்ற தனது நீண்ட ஆய்வுக்கட்டுரையில் (Cyberocracy is coming, Taylor and Francis, *1992)* David Ronfeldt என்ற ஆய்வாளர் தற்போதைய தொழில் வளர்ச்சியில் தகவலை மையமாகக் கொண்ட தொழில்களே எண்ணிக்கையில் அதிகரித்து வருவதாகவும் உடலுழைப்பை வேண்டி நிற்கும் தொழில்கள் பெரிய அளவில் எண்ணிக்கையில் அதிகரிக்கவில்லை என்றும், அவை அருகி வருவதாகவே உள்ளதாகவும் சுட்டிக்காட்டுகிறார். இன்றைய உலகிலேயே வர்த்தகம் பணத்தை வைத்து நடைபெறவில்லை; பணத்தைப் பற்றிய தகவலை வைத்தே நடைபெறுகிறது என்பதையும் சுட்டிக்காட்டுகிறார். பலம் என்றால் இனிமேல் பணம் அல்ல, அது தகவலே என்கிறார் அவர். ‘தகவலே பலம்’ என்பதே எதிர்வரும் நூற்றாண்டிற்கான அதிகார வாசகம் என்றே அனுமானிக்க முடிகிறது. பணத்தை விடவும் பணத்தைப் பற்றிய தகவலே பெறுமதியானது என்று சாதாரண மக்களே சிந்திக்கும் நிலை இன்று காணப்படுகிறது. தகவற்புரட்சியின் ஒரு அறிகுறியே இச் சிந்தனைப் போக்கு என்பதை இவரது கூற்றின் உட்கிடக்கையாகக் கொள்ளலாம்.

மேலே குறிப்பிட்டவற்றை வைத்து மேலோட்டமாகப் பார்க்கும் போது வைப்புக்களும் வங்கிகளும் காணப்படாத சமுதாயமாக எதிர்காலச் சமூகம் மாறி விடுமா என்ற கேள்வி எம்மில் சிலருக்கு எழலாம். தகவற் சமுதாயம் என்பதை “தகவலைக் கொடுத்து கடையில் பொருள் வாங்கும் சமுதாயம்” என்பதாகத் தவறாக விளங்கிக்கொள்ளும் போதே இவ்வாறான கேள்வி எழுகிறது. பணம் வகிக்கும் முக்கியத்துவத்தை விட தகவல் எதிர்காலத்தில் முக்கியத்துவமானதாக விளங்கும் என்பதே உண்மை; பணம் இல்லாது போய் விடும் என்பதல்ல. தற்போதைய சமுதாயத்தில் பண வங்கிகள் வகிக்கும் முக்கியத்துவத்தைப் போல எதிர்காலத்தில் முக்கியத்துவம் மிக்கவையாக தகவல் வங்கிகளே விளங்கும் எனலாம்.

இவ்வளவு சமுதாய மாற்றத்திற்கு காரணமாகி வரும் ‘தகவல்’ என்பது என்ன?

தகவல் என்னும் தமிழ்ப் பதம் ‘information’ எனும் ஆங்கிலப் பதத்திற்கு நிகராகப் பயன்படுத்தப்படுகின்றது. அறிவு என்பது மனித மூளைக்குள் தகவல் பெறும் அதி உயர்வடிவம் எனலாம். ஆனால் வெறும் தகவலானது எழுத்துக்களால், இலக்கங்களால், சொற்களால், வசனங்களினால் கட்டமைக்கப்பட்ட தொகுதி என்று விளக்கமளிக்க முற்படலாம். கணணிகளில் தகவலானது data ஆக காணப்படுகிறது. கணணிக்குள் தகவலானது தகவலாகப் பேணப்படுவதில்லை; அது 0, 1 அல்லது அழுத்தம், அழுத்தம் இல்லை என்ற இரு நிலைகளின் ஊடாக மாத்திரமே கையாளப்படுகிறது. இதுவே data எனப்படுகிறது.

இவ் வடிவம் தகவலின் அதி தாழ்ந்த வடிவம் எனலாம். மொழிக்கு எழுத்துப்போல தகவலுக்கு data ஒரு வடிவம். ஒரு கணணியில் இருந்து இன்னொரு கணணிக்கு data எனும்

## அகதியுமென ஆகி

**ஆண்டவர்கள் இங்கே**
**அகதியுமென ஆகி அலைகின்றார் ஐயோ!**
**ஈழ மண்ணில் பிறந்ததன்றி**
**ஏது குற்றம் இவர் செய்தார்.**
**ஏடுகள் சுமக்கும்**
**அரும்புகள் கையில்**
**அன்போடு அவர் வளர்த்த ஆடுகளோடு**
**அகதியுமென ஆகி....**
**தங்கையே உன்**
**தலைவிதியோ பெரும் சுமையோ**
**ஈன்றவர்கள் என்னவானார்**
**மேய்ப்பரையும் காணோம்**
**புனிதர் தம் ஆலயமும்**
**பொசிங்கிப் போச்சு**
**புன்னகை மறைந்திங்கே**
**பலவருடம் ஆச்சு**
**பாசமுள்ள அண்ணன்களும் அயலாரும்**
**பாரெல்லாம் அகதிகளாய்....**
**குவேனியின் கும்பலிடம்-நற்**
**குணம் பார்த்தல் மடமை தான்**
**பிணம் குவிக்கும்**
**புத்தபிரான் புதல்வரிடம்**
**படைவென்ற எம் இனத்தார்**
**ஏது கடன்பட்டார் கேள்**
**புலம் பெயர்ந்த வாழ்வை விட**
**புலியாகி புவியாழ்தல் மேல் - இந்த**
**பூக்களின் பயணம் பாசமுள்ளவரின்**
**படை அணிசேரும் பாசறைக்கே!**

**- புதுவை புஸ்பா**

ஈழத் தேசத்தவர்களான நாம் உலகெங்கும் பரந்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தகவல் முனையில் போராட்டத்தை முன்னெடுப்பதற்கான வாய்ப்புகளும் வசதிகளும் எமது கைகளில் உள்ளன. இவ் வாய்ப்பைத் திறமையாகப் பயன்படுத்தத் தவறினால் நாம் திறமை அற்றவர்கள் என்று எதிர்கால சமுதாயத்தினால் இகழப்படுவது மாத்திரமல்ல, புலம் பெயர் சூழலில் வெறும் பொருளாதாரப் பிண்டங்களாக வாழ்ந்தோம் என்ற வரலாற்றுப் பழிக்கு ஆளாகவும் நேரிடும்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் வேகத்துடனும் முழு வீச்சுடனும் முன்னேறிக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் புலம் பெயர் சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் சக்தி வாய்ந்த தகவலை ஆயுதமாக்கிக் கொண்டு எமது தேசத்தின் போராட்டத்திற்கு உறுதி சேர்க்க வேண்டும். இதற்காக நாம் எம்மிடையே உள்ள நியாயப்பாடுகளுக்கான தகவல்களை ஒருங்கு திரட்டி, சிறப்பாகக் கட்டமைக்க வேண்டும். இத்தகவல்கள் உலகளாவிய தகவல் வலைப்பின்னலில் உரிய முறையில் வைப்பாக்கம் செய்யப்படவேண்டும்.

எமது வரலாறு குறித்த ஆய்வேடுகள் பல எமது விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு சேர்க்கும் தகவல்களைச் சுமந்து நிற்கின்றன. எம் மீது திணிக்கப்பட்ட அடக்குமுறை பற்றிய தகவல்கள் எமது விடுதலைக்கான நியாயப்பாடுகளைக் கூறி நிற்கின்றன. எமது சுயநிர்ணய உரிமை பற்றிய ஆய்வேடுகள் நிறையவே உள்ளன. இத்தகவல்கள் உரிய முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டு உரிய இடங்களில் வைப்பிடப்படவேண்டும். உலகின் எந்த மூலையில் இருந்து கொண்டு தகவலைத்தேட விழையும் எவரின் கையிலும் எமது தகவல்கள் இலகுவாகக் கிடைத்திடும் வகையில் உலகளாவிய தகவல் வலைப்பின்னலை நாம் பயன்படுத்திட வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

வடிவில் தகவல் அனுப்பப்படுகிறது. மனிதனில் இருந்து மனிதனுக்கு தகவல் (information) அனுப்பப்படு கிறது. தகவலானது ஒரு மனிதனில் அறிவை ஏற்படுத்துகிறது. ஒரே விதமான தகவல் (information) வெவ் வேறு மனிதரில் வெவ்வேறு அறி வினை ஏற்படுத்தலாம்.

முதலில் நூறுவருட கால இடை வெளியில், பெறப்படும் தகவல்களின் அளவு இரட்டித்தது. பின்னர் இவ் இரட்டிப்பு ஐம்பதாண்டு இடை வெளியில் நிகழ்ந்தது. தற்போது பத்து வருட காலப் பகுதியினுள் இவ்விரட்டிப்பு நிகழ்வதாகக் கூறப் படுகிறது. தகவல் இரட்டிக்கும் கால இடைவெளி மேலும் குறைந்து செல்லும் என்று கணிக்கப்படுகிறது. தகவலின் அளவு மிகவும் அதிகரிப் பதால் தகவலைக் கையாளுவதில் பலத்த சிரமங்களை எதிர்நோக்க வேண்டிய நிலை விரைவில் வந்து விடலாம் என்று அஞ்சும் கருத்துக் களையும் சில ஆய்வாளர்கள் வெளி யிட்டுள்ளனர்.

தகவற் புரட்சியால் மிகவும் பாதிக் கப்படப் போகும் நாடுகள் மூன்றாம் உலக நாடுகளே. அவற்றிலும் மிக மோசமாகப் பாதிக்கப்படப் போகும் நாடுகள் நவீன இலத்திரனியல் வச திகளும் கல்வியறிவும் குறைந்த நாடு களே; ஏனைய வளங்களில் மாத் திரம் குறைவடைந்த மூன்றாம் உலக நாடுகளோ தேசங்களோ அல்ல.

தகவற் புரட்சியின் முக்கியத்து வத்தைப் பல மேலைத்தேச நாடுக ளின் அரசியற் தலைவர்களே இன்னும் உள்வாங்கிக்கொள்ள வில்லை என்று குற்றம் சாட்டப்படு கிறது. தகவற்புரட்சி மிக வேகமாக நடைபெறப்போவதென்பதால் வேகத்திற்கு ஈடுகொடுக்கத் தயா ராகும் மூன்றாம் உலக நாடுகளும் தேசங்களும் புரட்சியால் நன்மை பெற முடியும். வேகம் குறைந்தவர்க ளையும், இலத்திரனியற் தொழில் நுட்ப ஆற்றல் குறைந்தவர்களையும், கல்வியறிவு குறைந்தவர்களையும் கொண்ட மூன்றாம் உலக நாடுக ளும் தேசங்களும் புரட்சியின் வேகத்திற்கு ஈடு கொடுக்கமுடியாது ஈடாட்டம் காண நேரிடலாம். எனவே தகவற் புரட்சி பற்றி நாம் விழிப்புடன் இருக்கவேண்டியது அவசியமாகின்றது.

★★★

www.tamilarangam.net

# அஞ்சு



ஒரு மாலைப் பொழுது என்று நினைக்கிறேன்.

"இந்தக் கண்ணாடியை உடைத் துக் கொண்டு கீழே பாய்ந்தால் நான் செத்து விடுவேன். இந்த Hotel எத்தினையாவது மாடியில் இருக்கி றது? ஏழாவதோ அல்லது எட்டா வதோ? இதிலை இருந்து ஆக்கள் விழுந்தா... கட்டாயம் சாவினம் தானே! பாருங்கோவன், ஒரு நாளைக்கு சிதைஞ்சுபோன என் முகத்தோடை.... தலைப்புச் செய்தி யாய்... வெளிநாட்டுப் பத்திரிகை ஒண்டிலை என்ரை பேர் வரும்." என்றாள் அஞ்சு.

'மக்டோனால்ஸ்'க்குப் போவது தான் எங்கடை Plan ஆக இருந்தது. அங்கை போய் Parking Place தேடி....`Q' வில நிக்க விடிஞ்சுபோம்.

ரெண்டுபேரும் சேர்ந்துதான் இஞ்ச வருவம் எண்டு முடிவெடுத் தம். இஞ்ச வந்தது பிழைச்சுப் போச்சு.

இல்லை. உயரம் கூடிப் போச்சு.

***

அஞ்சு-

மெலிந்துபோயிருந்தாள்.

தலைமயிரைச் சுருட்டி விட்டுக் கொண்டிருந்தாள்.

எத்தனை வருடங்களாய்...

நான் அஞ்சுவைக் காணவில்லை.

'என் மீது ஒரு ஆண்டாளாய் மையல் கொண்ட அஞ்சு' என,

நான் பெருமைப்பட்டுக்கொண்ட அஞ்சுவின் வாயிலிருந்து-

இப்படி விரக்தியான வார்த்தை களா?

இரண்டு அல்லது மூன்று குழந் தைகளுக்கு அவள் தாயாகி இருக் கக்கூடும்.

ஏதோ ஒரு ஆண் மிருகம் அவ ளைச் சிதைத்திருக்கக் கூடும்.

எது அவளை இப்படி ஆக்கியது?

நான் Marlboro-வைப் புகைத்துக் கொண்டிருந்தேன்.

அவள் ஆபிரிக்காக் கோப்பியை உறிஞ்சிக் கொண்டிருந்தாள்.

லேசான காற்றுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

அது, அவளுடைய சுருண்ட முடியை மட்டுமல்ல அவளுடைய ஆக்ரோசத்தையும் வருடியது.

அவள்,

அடிக்கடி சொல்லும் சிவரமணி யின் கவிதை வரிகள்...

'பேய்களால் சிதைக்கப்படும் பிரதேசத்தைப் போன்று சிதைக்கப் பட்டேன்.'

அப்படித்தான் அஞ்சு காட்சிய ளித்தாள். உண்மையிலேயே அவள் செத்துவிடுவாளோ என்ற பயம், நெஞ்சுக்குள்ளே- ஒரு தீக் குமிழி போல் சுட்டுக் கொண்டிருந்தது.

அஞ்சு ஒரு நெருப்பு.

அவள் தன்னையும் தன்னைச் சார்ந்தோரையும் தர்மத்துக்கு எதி ராய் இருப்பின் பொசுக்கக் கூடிய... ஒரு சுவாலை.

புலம் பெயர் சூறாவளி அவளை இப்படி ஆக்கியிருக்கக் கூடுமோ?

***

"என்ன, நான் பகிடிக்குக் கதைக் கிறதெல்லாத்தையும் சீரியசாய் எடுத்து யோசிக்கிறியள்? நான் சாக மாட்டன். இதுக்கெல்லாம் சாகிற தெண்டால் எத்தினை பொம்பிளை யள் செத்திருப்பினம் தெரியுமே?" என்றாள்.

"என்ன, என்னையே பார்த்துக் கொண்டிருக்கிறியள்? இஞ்சை இப் பிடிப் பாத்தா, நீங்கள் என்னிலை வழியிறியள் எண்டு வெள்ளைக் காரர் சொல்லப் போறாங்கள்." என்றாள்.

"வடிவாய் இருக்கும் எண்டுதான் தலை மயிரைச் சுருட்டினனான்." என்றாள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

"ஆர் சொன்னது, நான் மெலிஞ்சிட்டன் எண்டு? முந்தநாளும் James, நான் வேலை செய்யிற Boss சொன்னார் You Become Very thin எண்டு" என்றாள்.

"அண்டைக்கு சுதாவின்ரை பிறந்தநாளில Mr. கந்தா என்னைக் கண்ட உடனை தன்ரை 'விஸ்கி கிளாசையும்' பின்னாலை மறைச்சுக் கொண்டு எனக்குக் கிட்ட வர, பிறகு Mrs. கந்தா வந்து அவரை தெரியாத மாதிரி இழுத்துக் கொண்டு போனவா. எல்லாம் இந்தச் சுருட்டை மயிரின்ர மகிமை தான்" என்றாள்.

"நான் ஆருக்குப் பயப்பிட வேணும்? என்ரை பிள்ளையள் படிக்குதுகள். நான் மாடு மாதிரி உழைக்கிறன். சேமிக்கிறன். ஆரிட்டையும் நான் கடன் படேல்லை. என்ரை தலை மயிரை நான் சுருட்டினா மற்றவைக்கேன் வலிக்குது?" என்றாள்.

"நான், என்ரை காசிலை, Free time-லை எனக்குப் பிடிச்சாக்களோடை கதைப்பன். இதைக் கேக்கிறதுக்கு இது ஆர்?" என்றாள்.

இவ்வளவு நேரமும் ஏதோ கதை கேட்டுக் கொண்டிருந்த நான் 'இது' என்றவுடன் விழித்துக்கொண்டேன்.

ஓகோ புருசனின் கொடுமையோ?

***

சில நாட்களின் பின்,

நானும் அவரும்,

விலாசமான ஒரு Park-ல்

ஆலமரமாய் விரிந்த ஒரு Berch Wood மரத்தின் கீழ் இருந்தோம்.

Beer கிளாசை அடிக்கடி அடித்துக் (முட்டிக்) குடித்தோம்.

"என்ரை Mrs. அஞ்சுவைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறியள்?" என்றார்.

'இதென்ன கோதாரி, இந்தாள், அவளைக் கொடுமைப்படுத்தினது காணாது எண்டு இனி, என்னையும் சேர்த்துக் கதை கட்டி... அவளுக்கிருக்கிற நல்ல நண்பனாகிய என்னையும் நண்பர்களையும் கெடுத்துப் பிரிக்கப் போகுதோ?'

"உங்களுக்கு அவாவைக் கனகாலம் தெரியும். From the school. அதுதான் கேக்கிறன்" என்றார்.

"நான் அவாவுக்கு நல்ல Free குடுத்திருக்கிறன். ஆனா அவா அதை Missuse பண்ணிறா" என்றார்.

``As a man, சிலநேரம் கை வைக்கத்தான் வேணும். இல்லாட்டி... You Know some horses are very strong" என்றார்.

www.tamilarangam.net

***

ஒரு நாள்-

அஞ்சு எனக்குப் Phone பண்ணினாள்.

"இனித் தாங்கேலாது" என்றாள்.

"அஞ்சு, நீங்கள் நாட்டிலை இருந்த மாதிரியே இருந்திருக்கலாம். இஞ்சை ஏன் வந்தனியள்? இந்த நாறிப்போன புலம்பெயர் சமூகத் துக்கை ஏன் விழுந்தனியள்?

ஏன்... உங்களுக்கு ஒவ்வாத கணவனையும் பத்தாக்குறைக்குப் பிள்ளையளையும் ஏற்றனியள்?" என்று கேட்டேன்.

"இந்தக் கேள்வியை நீங்களும் உங்களுக்குள்ளையே கேளுங்கோ?" என்றாள்.

"அப்ப நீங்கள் என்ன செய்யப் போறியள்?" என்றேன் நான்.

"என்னைப் பற்றி உங்களுக்குத் தெரியுந்தானே! என்ரை பிள்ளைகளுக்காகத்தான் பார்த்துக் கொண்டிருந்தனான். அதுகள் வளர்ந்திட்டுதுகள். இனிக் குதிக்க வேண்டியதுதான்."

"குதிக்கிறதோ?"

"ஓம், எட்டாவது மாடியிலை இருந்து. ஞாபகம் இருக்கோ?" என்றாள்.

"அஞ்சு எல்லாத்துக்கும் ஒரு அளவிருக்குது. சும்மா ஆக்களை வெருட்டாதையும்" என்றேன்.

Phone-ஐ வைத்துவிட்டாள்.

***

குதிரையை அடிச்சு அடக்க வேணும் எண்டு சொன்னவர், ஒரு நாள் ஓடி வந்தார். பதட்டப்பட்டார். கைலேஞ்சியை எடுத்துக் கண்ணாடிக்குக் கீழ் வழிந்த நீரைத் துடைத்தார். அவரது சொண்டுகள் துடித்தன. எனது கையைப் பற்றினார்.

"அஞ்சு போட்டா" என்று சொன்னார்.

``What?" துடிச்சுப் போனேன் நான்.

"எனக்கு ஒரு கடிதமும், உங்களுக்கு ஒரு கடிதமும் எழுதி வைச்சிட்டு, Bank-லை பிள்ளையளின்ரை Account-லை *10,000* டொலர்ஸ்சும் வைப்பிலை வைச்சிட்டு, அவா இலங்கைக்குப் போட்டா" என்றார் அந்தக் குதிரை ஓட்டி.

***

கடிதத்தைப் பிரித்தேன்.

"அன்புள்ள... அது இது எண்டெல்லாம் லொள்ளுப் பண்ண எனக்கு விருப்பமில்லை. எனக்குக் கிடைச்ச மிருகத்திலும் விட நீங்கள் நல்ல ஒரு மனிதன் என்பதால்தான் உங்களுக்கு இந்தக் கடிதம்.

தற்கொலை செய்ய பல முறை யோசிச்சன். எனது வாழ்வை அர்த்த முள்ளதாக்க வேணும் என்பது தான், அடிக்கடி வந்து என்னைக் குழப்பியது. அங்கயற்கண்ணியும், இன்னும் பல பெண் மனிதக் குண்டுகளையும் நான் அறிவேன்.

இங்கிருந்தபடியே இந்த மிருகத்தைப் பழிவாங்கியிருக்க முடியும். எனது உடலும் உயிரும் எங்கு முக்கியமாய் தேவைப்படுகிறதோ? அங்குதான் போக வேண்டும் என நினைத்தேன்.

என்னை மன்னியுங்கள். நீங்கள் விரும்பியோ, விரும்பாமலோ நாங்கள் நட்பும், பாசமும் உடையோராய் வாழ்ந்திருக்கிறோம்."

– அஞ்சு

***

எனக்குத் தெரியும்.

எனக்குத் தெரியும்.

இது இப்பிடித்தான் முடியுமெண்டு.

அஞ்சு இனி உன்னை நான் எங்கை தேட.

உன்ரை இயக்கப் பெயரும் தெரியாது.

உடல் சிதறி... சுருட்டிய முடி கூடச் சிதறி...

வாழ்வை அர்த்தமுடையதாய் ஆக்கி ஏற்கெனவே இறந்துவிட்டாயா?

செய்தியாய் வரும் ஒவ்வொரு பெண்புலி இறப்பிலும் உன்னை நினைத்துப் பதைத்துப் பரிதவிக்கும் என்னை, கோழை என்றே பலர் சொல்வர்.

உண்மையும் அதுதானே!

***

அஞ்சு நீ வாழவேண்டும்.

Atleast என்னை ஒரு வீரனாக்குவதற்குத்தன்னும் நீ வாழ வேண்டும்.

***

சூரியன் மறைந்து வெகுநேரமாய் விட்டிருந்தது.

**க. ஆதவன்**
**(டென்மார்க்)**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இந்தத் தாய் எங்கள் தாய்!

"அம்மா குரூஸ் எங்கே? தங்கவேலை வரச் சொல்லுங்கம்மா, சுந்தர் இருக்கின்றாரா...?"

இக் கேள்விக்கு, "வாருங்க, நீங்கள் வாங்கோ, சாப்பிட்டு விட்டுப் போகலாம்." அடைக்கலம் தந்து அமுதூட்டிய அந்தத் தாயின் அன்பான பதிலிது.

அந்த வீடு செல்லும் போராளிகள், கூடவரும் புதியவர்களுக்கு - போராளிகளுக்கு - அறிமுகம் செய்வது இப்படித்தான்: "இந்தத் தாயின் மடியில் இருந்து பாய்ந்து சென்று கல்முனை யாட்றோட்டில், 03-02-86-ல், லெப்ரினன்ற் உமாராமுடன் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய வீரவேங்கை சுந்தரின் தாய்..."

சுந்தரத்தைத் தெரியாத போராளிகள் இலர். கப்டன் குரூஸ், தேசத் துரோகி கங்காவின் துப்பாக்கிச் சூட்டிற்கு 11-09-1989-ல் இலக்காகி வீரச்சாவைத் தழுவிக் கொண்டார், அம்பாறையில்.

கப்டன் குரூசையும் தெரியாதவர்கள், "இவர்தான் எமது போராளியான தங்கவேல் அண்ணனின் தாய்" என அறிமுகப்படுத்துவர். இந்த வீரத்தாயிடம் 16-12-1987 அன்று, லெப்ரினன்ற் விக்ரம், கப்டன் குரூஸ், லெப்ரினன்ற் சரத், கப்டன் தாசன் ஆகிய போராளிகளும், நெருங்கிய உதவியாளர்களும் ஆயுதங்களுடன் சென்று, இரவு உணவை அருந்திவிட்டு, காடுகளிலும் உப்பாற்று நீரிலும் பட்ட ஆயுதங்களைச் சுத்தம் செய்கின்றனர்.

"குரூஸ், உங்கள் ஆயுதங்களைச் சுத்தம் செய்து முடிந்ததும் பொலித்தீனிட்டு கிடங்கில் வைத்து மூடிவிடு" எனக் கட்டளையிட்டுவிட்டு, தனது துப்பாக்கியை மட்டும் கையில் எடுத்துக் கொண்டு, உதவியாளன் ஒருவனையும் அழைத்துக் கொண்டு, இயக்க வேலையொன்றிற்காகச் சென்று விடுகின்றான் லெப்ரினன்ற் விக்ரம்.

லெப்ரினன்ற் விக்ரம் சென்று சில நிமிடங்களின் பின், அதே பகுதியில் துப்பாக்கி வெடியோசை கேட்கிறது. இந்திய இராணுவத்தின் வாகன உறுமலும் கேட்கின்றது.

ஆம், கப்டன் குரூசின் வீடு இந்தியக் கூலிப் பட்டாளங்களினால் சுற்றிவளைக்கப்படுகின்றது. அந்த வீடு 'மறவர்களையீன்ற தாயின் இல்லம்.' இது ஊர் மக்கள் பேசும் பேச்சு.



"தப்பிக்கொள்ள வேண்டிய நிலை, ஆயுதங்களும் அதிகம். மகன், எடுக்கக் கூடியதை எடுத்துவிட்டு நீங்கள் தப்பிவிடுங்கள். மற்றவைகளை நான் பார்த்துக் கொள்கிறேன்." என்கிறாள் அந்தத் தாய்.

லெப்ரினன்ற் விக்ரத்துடன் சென்ற உதவியாளன், கைகளிரண்டும் கட்டப்பட்ட நிலையில், இந்திய இராணுவத்தாலும், தேசத்துரோகிகளாலும் அடிக்கப்பட்டு, கப்டன் குரூசின் அம்மா வீட்டிற்கு வருகிறான்.

"அம்மா, விக்ரம் அண்ணன் செத்துப் போயிட்டான். என்னிட்ட எந்த ஆயுதமும் இல்லை. என்னால அடி தாங்க முடியல்ல. குரூஸ் அண்ணன் புதைத்து வைக்கும்படி கொடுத்த ஆயுதங்களைக் கொடுத்து விடுங்களம்மா." என்று கதறி அழுகின்றான் விக்ரத்துடன் சென்ற அந்த ஆதரவாளன்.

அவனை ஒரு கணம் நிமிர்ந்து பார்த்த அந்தத் தாய், அவனது முகம், கால், கைகளில் முகச்சவரம் செய்யும் 'பிளேட்'டினால் கீறிய காயங்களிலருந்து இரத்தம் சிந்திக் கொண்டிருக்கும் காட்சியைக் கண்டு, திகைத்து நிற்கிறாள். இவையனைத்தையும் மறைந்து நின்று பார்த்துக் கொண்டிருந்த கப்டன் குரூஸ் நண்பர்களை அழைத்துக் கொண்டு ஓடுவதை, இந்தியக் கூலிப் பட்டாளங்கள் கண்டு "குரூஸ்... குரூஸ்..." எனக் கூச்சலிட்ட வண்ணம், கப்டன் குரூசை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய ஆரம்பித்தனர். தேசத் துரோகக் கும்பல்கள் தகாத வார்த்தைகளால் வசைமாரி பொழிய ஆரம்பித்தன. ஆனால் அந்தத் தாய் அசையவில்லை.

இந்தியக் கூலிப்பட்டாளங்களாலும், தேசத் துரோகிகளினாலும் கப்டன் குரூசின் வளவு மண்வெட்டி கொண்டு வெட்டப்படுகின்றது! 'இங்குதான் இருக்கும், அங்குதான் இருக்கும்' என, அடி உதையினால் காட்டுகிறான் - கதறுகிறான் அந்த உதவியாளன். ஆயுதம் புதைக்கப்பட்ட இடத்தினைத் தாயைப் பார்த்துக் கேட்ட ஒரு தேசத் துரோகி, பக்கத்தில் கிடந்த அரிவாளை எடுத்து அந்தத் தாயின் கையை வெட்டுகிறான்.

இரத்தம் பீறிட்டுப் பாய்கின்றது. தாய் கதறுகிறாள். "நீங்கள் இங்கு வந்தது சம்பளத்திற்காகவா? இல்லை... இப்படி எங்களை வெட்டி அழிப்பதற்காகவா?" என்று கர்ச்சிக்கின்றாள். பதில் கூற முடியாத இந்தியன் வீட்டை விட்டு வெளியேறுகின்றான். மறுநாள் ஏனைய போராளிகள் வீடு வந்து, தங்கள் தாய் மறைத்து வைத்திருந்த ஆயுதங்கள் அனைத்தையும் எடுத்துச் செல்கின்றனர்.

ஆம், அத் தாயை இன்று இங்கு கண்டேன். பஞ்சு போன்ற தலை இருந்தும் அசையாத மன உறுதி; மெலிந்த உடல்.

"எப்போது அம்மா ஊருக்குப் போவது?" எனக் கேட்கிறேன்.

"எண்ட புலிப்படைப் பிள்ளைகள் என்று போகின்றார்களோ அன்றுதான் நானும் போவேன்" என்றாள் அந்த வீரத் தாய்.

தன் வீட்டுக் கிணற்றில், விடுதலைப் புலிப் போராளிகளான பல நூறு வேங்கைகள் குளித்து, உடை மாற்றி வந்தபோது, எண்ணெய் தடவி, அமுதூட்டித் தலைவாரி விட்ட கையைத் தேசத்துரோகி துண்டிக்கப் பார்த்தான். ஆனால் அவனால் அது முடியவில்லை. அந்தத் தாயின் கையில் வெட்டப்பட்ட தழும்பு இன்னும் இருந்து கொண்டே இருக்கின்றது. பல நூறு வேங்கைகளை வாரி அணைத்து அமுதூட்டிய கை அது. அந்தக் கையினால் வளர்த்துவிட்ட வேங்கைகளின் கையில் துடிக்கும் துப்பாக்கிகள் இருக்கும்போது, எந்தத் துரோகி நெருங்க முடியும்?

**சா. ஜெயா**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கூப்பாடு போடுவதால் மட்டும் கை கூடுவதோ?

**சோ. பத்மநாதன்**

"எங்கையடி பிள்ளை இவன்
செழியன் போயிட்டான்?"
"பொன்னம்பலம் கடைக்கு - பொச்சுமட்டை வாங்க
எணை!"
"பொச்சுமட்டை கூட கடைவழிய விக்கினமே?
ஏத்திவர வண்டில், இவன் பிடிச்சுப் போடுவனே?"
"ஆச்சி, உனக்கிதெல்லாம் சொல்லி விளங்காது;
போட்டுக் குடையிறாய்!
பொச்சுமட்டை நாலோடை வாறான் செழியன்!...
மரவள்ளி அவியுதெணை!"
(தாய் உள்ளே போக, 'பொடி'யைத் தனியவைத்து)
"நீ எவ்வளவுக்கு வாங்கினனி?"
"நாலு மட்டை பத்துரூபா ஆச்சி!"
"பாழ்படுவார்!
வாயில மண் இப்பிடியே போடுறது!"
"ஏன் ஆச்சி திட்டுறநீ?"
"பின்னையென்ன, என்ரை பெரிய வளவில் எண்டா
தென்னைமட்டும் நாப்பதடா!
பாளை, உரிமட்டை எங்கும் கிடக்குமெடா!
ஏழை எளியதுகள் வந்து பொறுக்கும்;
நான் வாயே திறப்பதில்லை!
சித்திரைக் கஞ்சிக்கும்
திருவெம்பாப் பூசைக்கும்
எத்தினை குலையள் இறக்கிக் குடுப்பன்!
இப்ப பொச்சுமட்டை வாங்க
புதுநாணயமாய்த்தான் பிச்சை எடுக்கிறியள்!"
(பெத்தாச்சி சொல்லுகிற பன்னாலைக் காணி பரப்பு
பதினாறும் பொன்னாய் விளைகின்ற பொக்கணை
நெல்வயலும்
ஏழுதலை முறைக்குப் போதுமென்பது
உண்மைதான்!)

ஆலடியில் கூட்டுறவுக் கடையின் முன் கூட்டம்
ஆடவர்கள், அரிவையர்கள், சிறுவர், முதியோர்கள்;
காலையிலே, கைப்பைகள், முத்திரைகள், 'காட்டு',
கைத்தடிகள், குடை, செருப்பு, புடைசூழ நின்றார்.

"இந்தமுறை நிவாரணத்துக்கு என்ன குடுக்கினமாம்?"
"இரண்டு கிலோ சீனியெணை; அஞ்சு கிலோ
மாவாம்!"
(கந்தையரும் கண்மணியும் உரையாடலானார்)
"கார்த்திகை மாதத்தரிசி புழுக்கூடு - கல்லு!"

பூநகரி நெல்லரிசி சாப்பிட்ட சுவையும்
பொன்னாலை வயலிலே புதிரெடுத்துப் பொங்கும்
'நாநயமும்' அசைபோட்டபடி இவர்கள் நின்றார்
நடுவெயிலில் நிவாரணத்தை எதிர்பார்த்த தவத்தில்!

"சூசை துலைக்கே?"
"தொட்டிலடி வரைக்கும்!
மேரி - இளையவள் - பிள்ளைபெத்து அஞ்சுநாள்!
ஏதும் நகரை, திரளி அகப்படுதோ
பாப்பமெண்டு போறன்!"
- பதிலளிக்கிறான் சூசை.

ஆழக் கடலை அளந்த தொழிலாளி
தாழையடி, நாகர்கோயில், மணற்காடு,
வெற்றிலைக் கேணிவரை தோணி செலுத்தித்தன்
வெற்றிக் கொடிநட்ட வீரன் - இவன் சூசை!
நாறல் கருவாட்டைத் தேடி நடக்கின்றான்!

ஏனிவ் வலைச்சல்? எதனால் அவலங்கள்?
ஏன் நிலமும் கடலும் எமதில்லை?
வீடெல்லாம் ஏனிவ் வெறுமை? - அடர்ந்த
காடெல்லாம் ஏன் ஆரவாரம்?
செழியன்ரை ஆச்சி
விறகுக்கு ஆரைப்போய் நோகிறது?
பொன்னாய் விளைகின்ற பூமி எங்கு போனதுவோ?
சூசை செலுத்திய தோணி தொலைந்ததுமேன்?
வீசி விரித்த வலைநாசம் ஆனதுமேன்?

மணம்புரிந்த நாலாம் மாதமே,
காங்கேசு பறந்து விட்டான்!
செழியன் தகப்பன் முகமறியான்!
பன்னாலைக் காணி பராமரிக்க ஆளில்லை!
பொன்னாலை பூநகரி எங்கும் புகுந்தவெள்ளம்
வயலை அழிக்காமல் வரம்புகட்ட ஆளில்லை!
அயல் நாட்டு வாழ்க்கை அதுவே சுகமென்று
போனார் இளைஞர்! - புலம்பியென்ன ஆகிறது?

சுற்றிவர நெருப்பு; துலாவிழுந்து கிடக்கிறது!
பட்டை, கயிறு இல்லை;
பாறிக் கிடக்கிறது ஆடுகால்!
சும்மா வயிற்றில் அடித்தென்ன?
"ஓடிவா!" என்றால் ஒருத்தன் வருவானே?
தந்தை தளர்கின்ற போது, அவனைத் தாங்குவதற்கு
மைந்தன் இங்கில்லாது 'மாறி' விட்டால்?....
தோணியினைக் காப்பாற்றுவது ஆராம்?
ஆழக் கடலோரம்
கூப்பாடு போட்டால்
விடியல் கை கூடுவதோ?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# பெயரிடாத நட்சத்திரங்கள்

www.tamilarangam.net



ஒரு வெடியதிர்வினோடு தகர்ந்து விட்ட
தடைக் கற்களுக்குப் பின்னால்
எமது தாயகம் தெரியும்.
யாரும் தெரிந்துகொள்ளாத அந்த
உயிர் முழக்கத்தின் இறுதி மூச்சை
தாங்கி வந்த காற்று
அவலமாய் அழுதுகொள்ளும்.
கடலலைகளுக்கும்
துயில் நிலத்துக்கும் கிடைக்காத சுமையோடு
எழுந்து வீசி ஆர்ப்பரிக்கும்.

உதிரப்பூச் சொரிந்து
தாய் நிலத்துக் காலைகளின் வரவு கொணர்ந்த
அவர்களுக்காக
சிவப்பு நிறப் பூக்கள் கண்களைத் திறந்தும்
சேதி தெரியாது சிரித்துக் கொண்டிருக்கும்.
எங்கள் விழிகள் தேடிய
அந்த விம்பங்கள் சூரியனை எரித்தன.
நடுநிசியில் பயணித்த எல்லைக்காவலர்களுக்காய்
துருவ உடுக்களாய் ஒளி தெறித்தன
பேரொளி .....!
இந்தப் பிரபஞ்சத்தையே விழுங்குகின்ற
அந்தப் பேரொளி சுமந்த
பெயர் தெரியாத எமது தோழர்கள்
கற்பூரம் போலக் கரைந்ததெப்படி?

உதைபட்ட காற்று உணர்ந்தெழுந்து அழுவதற்குள்
ஊமையாகிவிட்ட சேதியை யாரிடம் கேட்பது?
பாறைகளின் இருப்புக்கும்
வைரத்தின் உறுதிக்கும்
இரும்பின் வலுவுக்கும்
உவமைப் பொருள் இப்போது கிடைத்தபோதும்,
மருள் சுமந்த விழிகளுக்குள்
அனல் தெறிப்பு பரவியதையும்
தனி நடந்து தடையுடைத்த தற்கொடைக்கும்
பெயர் பொறிக்க முடியாமல்
பெருமூச்சு கிளம்பும்.

காலம் உருப் போட்டுக்கொண்ட
அந்தப் பெயர்களை,
கையசைப்புக் காணாத கடைசிக் கணங்களை,
இலக்கை மட்டும் நினைத்த
இலட்சியப்பற்றைப்
புரிந்து கொண்டு பேர் சொல்லியழ
இந்தத் தாய் நிலம் தவிக்கிறது;
இதயத்தை வருடிய தென்றலுக்கு
விடை கொடுத்துவிட்டு,
புயலின் மையத்தில் பிறப்பெடுத்த
சூறாவளிகளுக்கான வருடலுக்காய்
ஏங்கிக் கிடக்கிறது;
நெருப்பாற்றில் அடிநீச்சலிட்ட நெஞ்சுக்குள்
தெரியும் காட்சியைத் தரிசிக்கத்
தவங் கிடக்கிறது.

நீர்கோர்த்த இரவுக்குள்
தீச்சுடர் எரிகின்ற துயில் நிலத்தில்
நினைவுகள் மட்டும் நெஞ்சில் எரியும்.
நினைவாலயம் சுமந்த படங்களுக்குள்
தேடியுங் காணமுடியாத நிழற்படத்தை
தாயவள் எப்படி தரிசிப்பாள்?

தேச வெளிகளும் அடர்ந்த மரங்களும்
அருகிருந்து கதைத்த நினைவுகளும்
சலனமின்றிய குளத்துத் தண்ணீரும்
அப்படியே இருக்க
உங்கள் இருப்பைப் பற்றிய உண்மையை
யார் நம்புவது?

கண்மணிக்குள் நிழலொழிந்து
நிலவுக்குள் முகம் பார்த்து
சுவரெங்கும் காணமுடியாது
வரைந்துவிட்ட சித்திரங்களை,
புறம் எதிலும் காணமுடியாத
போர்க்குணத்தின் நெடிய நகர்வுகளில்
தூரம் குறுக்கிய துடிப்புக்களை,
தேசத்தில் விரிந்த மூன்றாவது பக்கத்தில்
வரிகளால் எழுதமுடியாத
வரலாற்றுக் கவிதைகளை
காலத்தில் பொறித்து
உணர்வுகளால் படித்த உள்ளங்களுக்குள்
கனன்றெழுந்த தீயினோடு
இரவு கலைக்கும் பயணம் தொடரும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நன்றி: சுதந்திரப்பறவைகள்



www.tamilarangam.net

## நாகர்கோயில்:

# பள்ளிச் சிறுவர் மீது குண்டுப் பொழிவு

நாகர்கோவில், யாழ். குடா நாட்டின் கிழக்குக் கரையில் அமைந்த அழகிய கிராமம். கடலும் பற்றைக் காடும் கலவிக்கொள்ளும் அமைதிப் பிரதேசம். அங்கு ஒரு சிறிய பள்ளிக்கூடம். கலவன் பாடசாலை. பட்டாம்பூச்சிகளைப் போல் பலவகைக் கனவுகளுடன் பள்ளிக்கு வரும் மாணவ மாணவியர். போரின் அழுத்தத்தை எதிர்த்துத் துளிர்த்த இளம் தளிர்கள்.

அன்று, வெள்ளிக்கிழமை, செப்டெம்பர் மாதம் 21-ம் திகதி. 750 மாணவர்கள் பள்ளிக்கு வந்திருந்தார்கள். போர்ச் சூழ்நிலையிலும் பள்ளிக்குத் தவறாத படிப்பார்வம். மத்தியான வேளை வந்தது. மாணவர்கள் பலர், மதிய உணவை உண்டு விட்டு, மர நிழல்களில் விளையாடிக்கொண்டிருந்தார்கள். விளையாட்டுக் கவனத்தில், விமானங்கள் வரும் இரைச்சல் சத்தத்தை தூரத்திலேயே உணரத் தவறிவிட்டனரோ தெரியவில்லை. வெள்ளைக் கொடி கட்டியிருந்த தங்கள் பாடசாலையின் மீது, வெண்தாமரை இயக்கத் தலைவி சந்திரிகா அம்மையார், சர்வதேச போர்ச்சட்டங்களை மீறி குண்டுகளை வீசப் பணிக்கமாட்டார் என்ற நம்பிக்கையோ? அல்லது, இரண்டு பிள்ளைக்குத் தாயான ஜனாதிபதி இளங் குழந்தைகளைப் பலிவாங்கும் அரக்கியாக இருக்கமாட்டார் என்ற அதீத கற்பனையோ? தெரியவில்லை. மதியம் 12.50 மணி. விமானங்கள் குண்டுகளைப் பொழியத் தொடங்கியபோதுதான், பதுங்குவதற்கான இடங்களைத் தேடினார்கள் பிள்ளைகள். காலம் கடந்த செய்கையாகவே அது இருந்தது. முகில்களுக்குள் மறைந்து புறப்பட்ட புக்காரா விமானங்கள் பொழிந்த குண்டுகள், விளையாடிக்கொண்டிருந்த மாணவர்கள் மத்தியிலேயே விழுந்து வெடித்தன. வெள்ளைச் சீருடைகள் அணிந்த மாணவர்கள் என்று தெரிந்தும் தானே விமானிகள் குண்டுகளை வீசினார்கள். பள்ளிக்கூடம் என்று தெரிந்துதானே பாழாய்ப் போகும்படி கொட்டித் தீர்த்தார்கள். பிஞ்சு உடல்கள் வெந்து பொசுங்கின. உடல்கள் சிதறுண்டு நாலாபுறமும் பறந்து சென்றன. எங்கும் பிணக்காடு. கால் வேறு, கை வேறு ஆயின. சின்னஞ் சிறுசுகளின் துண்டாடப்பட்ட உடல்களால் அப் பள்ளிக்கூட மைதானம் பிணக் காடாக மாறியது. சிதைவு உற்ற சடலங்களை அடையாளம் காணவே முதலில் கஷ்டமாகிவிட்டது. மரங்களில் எல்லாம் சதைத் துண்டங்கள். எங்கும் செந்நீரின் பாய்ச்சல். பிள்ளைகளோடு நின்ற உற்றார், உறவினர் பலரும் இறந்துபோயினர்.

ஆண்களும் பெண்களுமாக அவ்விடத்தில் மட்டும் 25 பிள்ளைகளும், 15 பெரியவர்களும் பலியாகிப் போயினர். அன்றைய தினம், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களிலும், நாகர்கோயில் பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட, ஆகாய விமான, எறிகணைக் குண்டு வீச்சுக்களால், 68 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 100-க்கு மேற்பட்டோர் காயம் அடைந்தனர். அவர்களில் படுகாயப்பட்ட 82 இளம் பள்ளிக்கூடப் பிள்ளைகள் மந்திகை வைத்தியசாலையில் சிகிச்சையளிக்கப்பட்டனர். கால், கைகள் அகற்றப்பட்டு, சிகிச்சை நடைபெற்றுக் கொண்டிருக்கையில் 16 பேர் மேலும் இறந்து போயினர். காயம் பட்ட மாணவர்களில், 12 மாணவர்கள், தங்கள் கால்கள் அகற்றப்பட்டு அங்கவீனர்களாயினர். பிரெஞ்சு வைத்திய நிறுவனமான M.S.F. வைத்தியர்கள் இது குறித்துத் தெரிவிக்கையில், அன்று தாம் கடமை புரிந்த வைத்தியசாலைக்கு 100 பேர் வரையில் காயம்பட்டவர்கள் கொண்டுவரப்பட்டதாகவும், அதில் அரைவாசிப் பேர் இறந்து போனதாகவும் தெரிவித்துள்ளனர். மறுநாள், மரங்களில் கிடந்த சதைத் துணுக்குகளைக் கொத்திக்கொண்டு காகங்கள் நின்றன. இரத்த நெடில் அப்பகுதியெங்கும் வீசிக்கொண்டிருந்தது. பிள்ளைகளின் சாப்பாத்துக்கள், செருப்புகள், கிழிந்துபோன சீருடைகளைப் பொதுமக்கள் பொறுக்கி நாசத்தின் ஞாபகச் சின்னமாக வைத்துக்கொண்டனர். அவ்விடத்தில் அழுதுகொண்டிருந்த இறந்த சின்னக் குஞ்சுகளின் பெற்றார், உற்றாரோடு சேர்ந்து ஊரே திரண்டு நின்றது. யூலை 9-ம் திகதி நவாலி தேவாலயம் விமானக் குண்டுவீச்சுக்கு இலக்காகி 120 பொதுமக்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். இப்போது செப்டெம்பர் 22-ம் திகதி பள்ளிக்கூடம் குண்டுவீச்சுக்கு இலக்காகியது. இனி அடுத்ததாக நடைபெற வேண்டியது யாழ்ப்பாணக் குடாநாடே சுடுகாடாக்கப்படவேண்டியதுதான். அதனைச் செய்வதற்காகவே, பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை விரைவில் செய்வதற்கு 40000 படைவீரர்களைக் குவித்து அரசாங்கம் தயாராகி வருகின்றது.

விடுதலைப் புலிகள் இளம் பிள்ளைகளைத் தமது படைப் பிரிவில் இணைத்து சண்டையில் ஈடுபடுத்துகிறார்கள் என்று சிலர் குற்றஞ்சாட்டுகிறார்கள். சிறீலங்கா அரசாங்கமும், மணலாற்றுச் சண்டையில், இளம் போராளிகளை விடுதலைப் புலிகள் பலி கொடுத்ததாக முதலைக் கண்ணீர் வடித்தது. அதனை உலகளாவிய பிரச்சாரமாகவே செய்து வந்தது. இளம் பிள்ளைகள் பள்ளிக்கூடங்களிலும், வீடுகளிலும் தத்தமது கடமைகளின் போது கொல்லப்பட்டால் அதைப் பார்த்துக்கொண்டிருக்கும் ஏனைய சிறுவர்கள் என்ன செய்வார்கள்? தம்மைக் கொல்ல வரும் எதிரியைக் கொன்று, தமக்கு ஒரு நிரந்தரமான பாதுகாப்பைத் தேடிக்கொள்ள சிறுபிள்ளைகளும் போராடத்தானே செய்வார்கள்?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மாணவர் படுகொலையைக் கண்டித்து தமிழீழத்தில் மாபெரும் எழுச்சிப் பேரணி

**"நாவாலியில் மனிதக் கொலை
நாகர்கோயிலில் மாணவர் கொலை"
"கோயில் இடிவதை குழந்தைகள் சாவதை சர்வதேசமே பார்"
"சர்வதேசமே ஊமையாய்ப் போனால் சாவு எங்களின் சந்ததி காணலாம்."
"மாணவர் என்ன பாதகத்தைச் செய்தார். பாதக அரசே குண்டை ஏன் எய்தாய்"**

உலக நாடுகளே உங்களைக் கேட்கிறோம் என வானம் அதிரும் வண்ணம் கோஷங்களை எழுப்பியபடி யாழ் நகரை நோக்கி மக்கள் கடல் வெள்ளம் போல் பெருகி வந்தனர். உணர்ச்சி பொங்கிய படியும் கண்ணீர் சிந்திய படியும் மக்கள் இந்த கோஷங்களை எழுப்பினர்.

வரலாறு காணாத மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணியில் திரண்ட மக்கள் சர்வதேசத்திடம் நீதிகேட்டு எழுப்பிய கோஷம் உலக முகட்டை உலுப்பியே தீரும். மனிதாபிமானம் உலகில் ஒரு போதும் செத்து விடாது.

பாடசாலை மாணவர்கள், வெகு ஜன அமைப்புக்களின் பிரதிநிதிகள், மதகுருமார்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தனியார் கல்வி நிறுவனங்கள், கூட்டுறவாளர்கள், வணிகக்கழகங்கள், வணிக ஊழியர்சங்கங்கள், தொழிற்சங்கங்கள், அரச கூட்டுத்தாபன உள்ளூராட்சி ஊழியர்கள், விளையாட்டுக் கழகங்கள், பொதுமக்கள் என அனைத்து தரப்பினரும் கலந்து கொண்டனர்.

*22-09-1995* அன்று நாகர்கோயில் மகாவித்தியாலயத்தில் குண்டு வீசிக் கொல்லப்பட்ட மாணவர்களின் இறந்த உடல் அவயங்களின் படங்களை ஏந்தியவாறு சென்ற காட்சி பார்ப்போர் மனதை உலுப்பியது.

ICRC, UNHCR அலுவலகங்களில் முன்னே திரிந்த பேரணி அவ்வமைப்புக்களின் பிரதிநிதிகளிடம் மகஜர்களைக் கையளித்தனர்.

பேரணி கச்சேரியடியில் கூடியது. அங்கு அமைக்கப்பட்ட மேடைகளில் இறந்த மாணவர்களின் படங்கள் வைக்கப்பட்டிருந்தன. நாகர்கோயில் மகாவித்தியாலய அதிபர் குண்டு வீச்சு நடந்த சம்பவத்தை ஏங்கி அழுதவாறு மக்கள் முன்னிலையில் கூறினார். மக்கள் அனைவரையும் அந் நிகழ்வு உலுக்கியது. கூட்டத்தின் முடிவில் வெகுஜன அமைப்புக்களின் மகஜர் அரச அதிபருக்கூடாக ஜனாதிபதிக்கும் மாணவர்களின் மகஜர் கல்வி பரிபாலன அதிபர் ஊடாக ஜனாதிபதிக்கும் கையளிக்கப்பட்டது. மக்களின் உளக்கொதிப்பு எரிமலைக் குழம்பாக மாறும் சக்தி படைத்தது என்பதை வரலாறு காணாத அப் பேரணி எடுத்தியம்பியது.

சின்னப் பள்ளிச் சிறார்களின் வெள்ளைச் சீருடையில் இரத்தம் தோயத்திட வெண்புறாவென வேஷமிட்டு வந்தவள் சந்திரிகா.

## மாணவர் சமூகம் ஒரு நாட்டின் அடித்தள சக்தி

**எந்த ஒரு நாட்டினதும் அடித்தளமான சக்தியாக விளங்குவது மாணவர்களே. இக்குழுமமே எதிர்காலத்தில் நாட்டினைக் கட்டி எழுப்பும் செயற்பாடுகளில் ஈடுபடுவது. இவ்வாறான மாணவ சமுதாயத்தின் மன உறுதியைச் சிதைத்து, அறிவு வளர்ச்சிக் கழகங்களின் வழிகளை மூடி நீண்ட காலத்தில் அப்பிரதேசத்தின், நாட்டின் இயங்கு திறமையை முற்றாக அழித்து விடமுடியும். தற்போது சிறிலங்கா அரசினால் மாணவர் சமுதாயத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் நடவடிக்கையை நாம் மேற் கூறிய கண்ணோட்டத்திலேயே நோக்க முடியும்.**

**- யாழ்பல்கலைக்கழக மறு மலர்ச்சிக்கழகம் விடுத்த அறிக்கையில் இருந்து.**

**"நாகர் கோயில் மகாவித்தியாலய சிறார்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சிறீலங்கா அரசின் இனவெறிப் போக்கு எத்தகையது என்பதைக் காட்டியுள்ளது. தனது சுதந்திரத்தை அடைவதான மனிதனின் அடிப்படை உரிமையை காலில் போட்டு மிதித்து வெறியாட்டம் ஆடுகின்றது. மனித உரிமை மீறல் குறித்தும், மனித நேயம் பற்றியும் குரல் கொடுக்கும் சர்வதேசம், சிறிலங்காவின் வெறித்தனத்தைக் கண்டிப்பது மட்டுமல்லாமல் சிறிலங்காவின் இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு தடைகளை இடவேண்டும், சர்வதேச சமூகத்தின் முன்பாக சிறிலங்கா அரசை அம்பலப் படுத்தவேண்டும்.**

**- கிராமிய உழைப்பாளர் சங்கம்**

**அன்று கை கட்டி வாய் பொத்தி நின்று அடி வாங்கிய தமிழினம் இன்று தனது உரிமைக்காக போராடுகின்றது. 1958, 1971, 1977, 1983-ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற தமிழ் மக்களுக்கெதிரான இனத்துவேசக் கலவரத்தினால் தான் சிவகுமாரன், தலைவர் பிரபாகரன் போன்ற தலைவர்கள் உருவானார்கள். அன்றைய கொடுமையே இவர்களின் உருவாக்கத்திற்குக் காரணமாக இருந்தது. கடற்புலிகளின் பலத்தினால் தான் சிறீலங்கா ராணுவத்துக்கு உணவுப்பொருளும், ஆயுததளபாடமும் கொண்டு வர முடியாது அரசு திணறுகின்றது. இதற்கு காரணம் உங்களினால் கொடுக்கப்பட்ட நிதியாகும். இந்த மண் விடுதலை பெற்றபின் நீங்கள் மற்றவர்களை சுரண்டாமல் கோடி கோடியாக உழையுங்கள். நீங்கள் கொடுக்கும் பணம் அந்நியருக்கல்ல; உங்கள் புதல்வர்கள், குழந்தைகளைக் காப்பாற்றுவதற்குத் தான் உதவுகின்றது. செல்வம் இருந்து என்ன பயன்? செல் அடித்து எமை அழிக்க முனைகின்றான். அதனைத் தடுக்க எமக்குப் பெறுமதியான ஆயுதங்கள் வரட்டும். போராட்டத்தில் எல்லோரும் இணைவதன் மூலம் எல்லோரும் விடுதலை அடைவோம். பின் வாங்க மாட்டோம்.**

**தமிழீழ நிதிப் பொறுப்பாளர்
தமிழேந்தி**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சொல்

- முருகையன் -



உலாவ என்று புறப்பட்டேன் -
ஒரு நாள் அந்தி வேளையிலே
ஊரின் கரையில் - புறம்போக்காய் -
உள்ள பரந்த திறந்த வெளி,
அலைகள் எறியும் மெல்லோசை,
ஆட்கள் 'பறையும்' கதை ஒலிகள்
ஆனால், அவையோ பெருங்காற்றில்
கலந்து, கரைந்து போய் மறையும்
பல வேறு நிறப் பூந்துகில்கள் -
பச்சை, சிவப்பு, மஞ்சள் என...
பார்த்த திசைகள் எவ்விடத்தும்
பளிச்சென் றடிக்கும் வெளிச்சங்கள்
மலரின் மணங்கள் இடையிடையே
வந்து மூக்கைத் தடவுகையில்
வார்த்தை கிளம்பித் தடுமாற
மனமோ பறவை ஆகிறது.

உள்ளே நிகழ்ந்த கிளுகிளுப்பில்
ஓராயிரம் பண் ஒருங்கெழுந்தே
ஒன்றோடொன்று குழைகையிலே
உச்சத் தொனியில்
பாட்டொன்று
தள்ளி உதடு திறந்துவிட,
தாங்கா உணர்வு மயக்கினிலே
சத்தம் இடவும் துணிகின்றேன்.
சனங்கள் கேட்டால்...
என்ன தான் சொல்ல மாட்டார்கள்!
மெள்ள அடங்கி, இசை எழுப்பும்
விருப்பை முடக்கி வைக்கிறேன்.
மிகவும் முரட்டுக் குரல் எனக்கு;
வீணை பயின்றும் அறியேனே!
தெள்ளு தமிழ்சொற் பேச்சோசை
தேடித் தெரிந்து விளையாடும்
சிறிய பழக்கம் மட்டுந்தான்
சில நாள் முயன்று வருகின்றேன்.

பாட்டாய்ப் பண்ணிற் கலந்து விடும்
பழைய பாணர் போலன்றி,
பச்சைப் பசிய தமிழ்ப் பேச்சின்
பண்புக் குழையற் கலை அமைத்தே
ஏட்டால் உலகு பயன் அடைய
எடுக்கலாமே சில பணிகள்!
எண்ணப் பின்னல் இழைவுகளாய்
யானே மாறி விடலாமே!
கூட்டாய் என்னுள் பிறப்பெடுத்துக்
குமிழி எழுப்பும் உணர்வுகளைக்
குழைத்துப் புதிய வடிவுடைய
குளிர்மை உருவம் தரலாமே
நீட்டாய் எனது நினைப்புகளோ
நெஞ்சில் வளர...
வாய் அசைய...
நிகழ்ந்த பேச்சின் ஓசைகளோ
நேராய் வெளியில் வருவனவாம்.
வந்த ஓசை
தனிமையிலே வளர்ந்து பரவ
நடக்கின்றேன்.
மற்றும் சில பேர் எனைக் கண்டு
மனத்துட் சிரித்துப் போகின்றார்.
ஐந்து நண்பர் மாத்திரமே
ஆசையோடு பாராட்டி
அருகே துணையாய் நடக்கின்றார்.
அவரும் என் போல் பேசுகிறார்,
பிந்தி வானம் கறுப்பாக,
பேசினோரும் பிரிகின்றார்.
பிற சோலிகளைப் பார்ப்பதற்காய்ப்
பிரிந்த அவர்கள் திரிகின்றார்.

சொந்த வழியில் நடக்கின்றேன்
தொடர்ந்து வருவார் புது நண்பர்.

சூழல் மேலும் கறுத்தாலும்
சொற்கள் மின்னும்;
சுடர் விரியும்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஐக்கிய நாடுகள் சபையின் 50-வது ஆண்டு நிறைவை முன்னிட்டு இத்தாலி, பெருசா நகரில் மூன்றுநாட்கள் மாநாடும் இறுதி நாளான ஞாயிற்றுக்கிழமை மாபெரும் ஊர்வலமும் நடைபெற்றது. இவ் ஊர்வலத்தில் நூற்றிமுப்பதினாயிரம் இத்தாலி மக்களும் ஆயிரத்துக்கும் அதிகமான தமிழ் மக்களும், மாநாட்டிற்கு வந்திருந்த அனைத்துலக பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். விசேடமாக இத்தாலி, தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. மாநாட்டிலும் ஊர்வலத்திலும் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுப் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தார்கள். இதன் போது இத்தாலி, பலெர்மோ நகரிலும் **24-09-95** ஞாயிற்றுக்கிழமை அன்று தமிழர் நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.




www.tamilarangam.net

இத்தாலி, பலெர்மோ மாநகர முதல்வரும் ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினருமாகிய திரு. ஓர்லாந்தோ அவர்களின் ஏற்பாட்டில் இத்தாலி வாழ் தமிழ் மக்களின் மாபெரும் ஒன்றுகூடல் நடைபெற்றது. இதில் 800-க்கும் அதிகமான தமிழீழ மக்களுடன் இத்தாலிய மக்களும் கலந்து கொண்டனர். இவ் ஒன்றுகூடலை திரு. ஓர்லாந்தோ அவர்கள் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். அவர் தமிழீழ சிறுமியினால் மலர் மாலை அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். இவ் ஒன்றுகூடலில் மாலதி கலைப்பள்ளி மாணவிகளின் நடனங்களை கண்டுகளித்த திரு. ஓர்லாந்தோ அவர்கள், பொதுமக்கள் மத்தியில் உரையாற்றுகையில், தமிழீழ மக்கள் தமக்கென்று மொழி, பண்பாடு, தாயகத்தையுடைய தனித்துவமான ஓர் தேசிய இனம் என்றும் அவர்களின் சுயநிர்ணய உரிமைபற்றி ஐரோப்பிய பாராளுமன்றத்தில் உரையாற்ற இருப்பதாகவும் கூறினார். மேலும் ஏனைய ஐரோப்பிய நாடுகளைப் போல் இத்தாலி நாட்டிலும் தமிழீழ மக்களுக்கு வதிவிட உரிமை பெற்றுக் கொடுப்பதற்காக பாடுபடுவேன் என்றும் தெரிவித்தார். தொடர்ந்து அவர், மாலதி கலைப்பள்ளி மாணவிகளையும் நடன ஆசிரியையும் பாராட்டியதுடன் இவ் ஒன்று கூடலை ஒழுங்கு செய்த இத்தாலி ஒருங்கிணைப்புக்குழுவிற்கு பலர்மோ நகரத்தின் பெருமையை விளக்கும் வெள்ளிப்பதக்கத்தினை அளித்து கௌரவித்தார்.



இவ் ஒன்று கூடலில், தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீரிக்க கோரியும், சிறீலங்கா அரசின் தமிழ் மக்கள் மீதான தொடர்ச்சியான தாக்குதலை நிறுத்த சிறீலங்கா அரசின் மேல் அழுத்தத்தை பிரயோகிக்கும் படியும், இத்தாலி நாட்டில் தமிழீழ மக்களுக்கு வதிவிட உரிமை அளிக்கக் கோரியும் மகஜர் ஒன்று திரு. ஓர்லாந்தோ அவர்களிடம் கையளிக்கப்பட்டது. அத்துடன் அண்மையில் சிறீலங்கா அரசினால் 'முன்னோக்கிப் பாய்தல்' இராணுவ நடவடிக்கையின் போது தமிழ்மக்களின் மேல் நடாத்தப்பட்ட நவாலிப் படுகொலைகள் பற்றிய வீடியோ காட்சியை அவர் பார்வையிட்டு, தனது வருத்தத்தினை தெரிவித்தார். மற்றும் பலெர்மோ பாராளுமன்றத்தினுள் சென்று பார்வையிட கூடியிருந்த தமிழீழ மக்களுக்கு விசேடமாக அனுமதி வழங்கினார். தொடர்ந்து, இளைய தாரகை இசைக்குழுவினரின் புரட்சிப் பாடல்கள் முழங்கிய இசை நிகழ்ச்சியுடன் இவ் ஒன்று கூடல் இனிதே நிறைவு பெற்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




www.tamilarangam.net

# விடுதலை வேண்டி ஒன்றிணையும் கரங்கள்

ஆடி மாதம் 15-ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.00மணி. அவுஸ்திரேலியா நாட்டின் விக்ரோறியா மாநிலத்திலே மெல் பேர்ண் நகரிலே அமைந்துள்ள நகர சதுக்கத் திற்கு நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் வந்து சேர்கிறார்கள்.

குளிர்காலத்தின் உச்சக்காலம். ஆனால் என்ன ஆச்சரியம். சூரிய பகவான் தாராள மாக ஒளியை அள்ளி வழங்க வழி சமைத்து, முகில்கள் எல்லாம் எங்கோ தொலைந்து விட்டன. சதுக்கத்திற்கு வந்து சேர்ந்து விட்ட வர்களினதும். சதுக்கத்தை நோக்கி மோட் டார் வண்டிகளிலும் புகையிரத வண்டிகளி லும் வந்து கொண்டிருந்த தமிழ் மக்களின் மனதிலும் சூரிய பகவானின் கருணையை நினைத்து அளப்பரிய ஆனந்தம்.

வினாடிகள் ஏற ஏற ஈழத்தமிழ் மக்க ளின் தொகையும் ஏறுகிறது. எதிர்பாராத அளவிற்கு வேற்றுமைகள் மறந்து, கருத்து வேறுபாடுகள் மறந்து, நான் என்பதை மறந்து, அவ்விடத்திலே நாம் ஆகின்றனர். எல்லோர் மனத்திலும் ஏகோபித்த எண்ணம் ஓங்கார நாதமாய் ஒலிக்கின்றது. தமிழ் ஈழம், என்மண், என்நாடு, என் மக்கள்.

ஈழ மண்ணை அபகரிக்கும் முயற்சியில், அநீதியான செயற்பாட்டில் இறங்கியுள்ள, எதிரியான சிறிலங்கா அரசாங்கத்தைக் கண்டித்து, மெல்பேர்ண் தமிழ் சங்கங்களின் பிரதிநிதிகள், மத்திய மாநில பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச சார்பற்ற நிறுவனங் களின் பிரதிநிதிகள், வேறு நாட்டு விடுதலை அமைப்புக்களின் பிரதிநிதிகள் மேடையிலே கண்டிப்புக் கணைகளைத் தொடுக்கின்ற னர். கண்டனங்கள் தொடுக்கப் பங்கு பற் றிய சங்கங்கங்கள் ஒன்றா? இரண்டா? பத்தா? அதற்கும் மேலே.

விடுதலை வேண்டி ஒன்றிணைந்த கைக ளைக் கண்டதும் மனதிலே தோன்றியது, மெல்பேர்ண் வானொலிகளிலே அடிக்கடி கேட்ட கவிதை வரிகள்,

"எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டு"

இன்னுமொன்றைக் குறிப்பிட்டேயாக வேண்டும். மெல்பேர்ண் மூத்த பிரஜைகள் சங்கத்தின் பிரதிநிதி பாடிய பாடலில், அழகான, ஆழமான இரு வரிகள்,

"நாம் இங்கு ஒன்று பட்டால்
தமிழீழம் அங்கு மலராதோ"

இவ்விரு வரிகளும் பாரெங்கும் பரந்

தமிழீழத்தையும், தமிழர்களின் சுய நிர்ணய உரிமையையும் சர்வதேச நாடு களும், அவுஸ்திரேலியாவும் அங்கீகரிக்க வேண்டும் என்று கோரி, சிட்னியிலுள்ள இருபது தமிழ் அமைப்புக்கள் ஒன்று சேர்ந்து 19-08-95 அன்று மாபெரும் ஆர்ப் பாட்ட ஊர்வலம் ஒன்றை நடாத்தின. மூவாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் இவ் ஊர்வலத்தில் கலந்து கொண்டிருந்தனர். தமிழர்களின் பாரம்பரிய மங்கள இசை நிகழ்ச்சியோடு ஊர்வலம் ஆரம்பமானது.

திருச்சபைகளின் கூட்டமைப்பைச் சேர்ந்த வணக்கத்துக்குரிய அன்ட்ரூ வில் லியம், புரட்டஸ்தாந்து மதகுருவான வணக்கத்துக்குரிய பார்ண்ஸ், கத்தோ லிக்க மதகுருவான வணக்கத்துக்குரிய பங்கிராஸ், சைவசமயத்தின் சார்பில் திரு. நா. மகேசன் ஆகியோர் உரையாற் றினர்.

இவர்களைத் தொடர்ந்து மனித உரிமைகள் அமைப்பைச் சார்ந்தோரும், பெண் விடுதலை அமைப்பைச் சேர்ந்தோ ரும் உரையாற்றினர். அதனையடுத்து நியூ சவுத்-வேல்ஸ் மாநில அரசாங்க பாராளு மன்ற உறுப்பினர் திரு. போல் சமிற் அவர்களும், அவுஸ்திரேலிய சமஸ்டி அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர் திரு. லொறி பேகசன் அவர்களும் உரையாற் றினார்கள். செல்வி பிரியங்கா தேவ ராசா "காகங்களே காகங்களே" என்னும் பாடலைப் பாடினார். அதன் பின்பு சிறுவர், சிறுமியர் "போரம்மா" என்ற பாடலுக்கு நடனம் ஆடினார்கள்.

கூட்டம் இரண்டு மணிக்கு முடிவுற் றதைத் தொடர்ந்து நிகழ்ந்த ஊர்வலத்தில் தமிழீழத் தேசியத் தலைவரின் உருவப் படத்தை தாங்கியவண்ணம் மக்கள் அணிவகுத்துச் சென்றனர்.

"தமிழீழத்தைச் சர்வதேச நாடுகள் அங்கீகரிக்க வேண்டும்", "தமிழீழத்தை அவுஸ்திரேலியா அங்கீகரிக்க வேண் டும்", "ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை சர்வதேச நாடுகள் அங்கீக ரிக்க வேண்டும்",




"எங்கள் தலைவர் பிரபாகரன்",

"சிறீலங்காவே பொருளாதாரத் தடையை அகற்று"

"சிறீலங்காவே மருந்துத் தடையை நீக்கு"

"ஈழத்தமிழர்களுக்குத் தேவையானது நீதியான சமாதானம்"

போன்ற சுலோகங்கள் அடங்கிய அட் டைகளையும், பதாகைளையும் தாங்கிய வண்ணம் மூவாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் அணிவகுத்துச் சென்றனர். ஆயு தப் படையினரின் முற்றுகையினுள் தமிழீ ழம் இருக்கும் நிலையை எடுத்துக்காட்டும் ஊர்தியும், குண்டு வீச்சினால் சேத மாக்கப்பட்ட தேவாலயத்தின் மாதிரி வடிவமைப்பைக் கொண்ட ஊர்தியும் ஊர்வலத்தின் நடுவில் சென்று கொண் டிருந்தன.

"எங்களுக்குத் தேவை தமிழீழம்",

"எங்கள் தலைவர் பிரபாகரன்",

"சிறிலங்காவே தமிழர்களைப் படுகொலை செய்வதை நிறுத்து",

"எங்களுக்குத் தேவை சமாதானம்"

எனப் பல கோஷங்கள் எழுப்பப்பட் டன. ஊர்வலம் அவுஸ்திரேலிய நியூ சவுத் வேல்ஸ் மாநிலப் பாராளுமன்றத் தின் முன்பு முடிவுற்றது.

அவுஸ்திரேலிய பிரதம மந்திரி போல் கீட்டிங் அவர்களுக்கும், எதிர்கட்சித தலைவர் ஜோன் ஹவார்ட் அவர்களுக் கும் சிட்னிவாழ் தமிழ் மக்களின் மனு சமர்ப்பிக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் 10-வது ஆண்டு சேவை நிறைவு விழா

www.tamilarangam.net



10-09-95 ஞாயிற்றுக்கிழமை, சூரிச் மாநகரில் மாபெரும் முத்தமிழ் விழாவே நடந்தேறியது.

இசை நிகழ்ச்சிப் போட்டிகள், சிறுவர் பேச்சுப் போட்டிகள், நாடகங்கள் என நிகழ்வுகளின் பவனி.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனைத்துலக ஒருங்கிணைப்பாளர் கலாநிதி மகேஸ்வரன் புலம்பெயர்ந்த மக்கள் முன் உள்ள வரலாற்றுக் கடமைகள் குறித்தும் இன்னும் அதிகமாக ஆற்ற வேண்டியுள்ள தேவைகள் குறித்தும் எடுத்துக் கூறியிருந்தார்.

பிரதம விருந்தினராக கலந்துகொண்ட விடுதலைப் புலிகளின் மத்தியகுழு உறுப்பினர் திரு. லோறன்ஸ் திலகர் அவர்கள் சமகால அரசியல் நிலைப் பாட்டை எடுத்துக்கூறினார்.

சிறப்பு விருந்தினராக வருகை தந்திருந்த விடுதலைப் புலிகளின் சுவிஸ் பணியகப் பிரதிநிதி முரளிதரன் வெளிநாடுகளில் வாழும் நாம் போராட்டத்திற்கு எமது பங்களிப்பை எல்லா வகையிலும் ஆற்ற வேண்டும். போராட்டத்திற்கு சர்வதேச அங்கீகாரம் பெற்றுக் கொடுப்பது, நிதி உதவி செய்வது ஆகியவை மிக முக்கியமானவை எனக் குறிப்பிட்டிருந்தார். நிகழ்ச்சிகளின் இறுதியில் போட்டிகளில் வெற்றி பெற்ற கலைஞர்களுக்கு, தமிழர் புனர்வாழ்வுக் கழக வெளிநாட்டு கிளைப் பிரதிநிதிகளும் பரிசில்களைக் வழங்கி கௌரவித்தனர்.




புலம் பெயர் மண்ணில் இது போன்ற ஆரோக்கியமான நிகழ்வுகள் வரவேற்கப்பட வேண்டியனவும் வளர்க்கப்பட வேண்டியனவும் ஆகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

துள்ள ஈழத்தமிழருக்கு ஒரு திருக்குறள், ஒரு வேதம், ஒரு பைபிள், ஒரு குர்ஆன்.

பிற்பகல் 3.00 மணியளவில் விக்ரோறிய தமிழ்மக்கள் என்றுமே கண்டிராத மாபெரும் எழுச்சிப் பேரணி விக்ரோறிய பாராளுமன் றத்தை நோக்கிப் புறப்படுகிறது. தமிழீழ, அவுஸ்திரேலியா தேசியக் கொடிகள் காற் றில் அசைந்தாட, தவில் நாதஸ்வர இசை யுடன் பேரணி தொடர்கிறது.

பேரணியில் ஓர் ஊர்தி ஈழத்தமிழர் களின் சரித்திரத்தை எல்லாள மன்னனின் ஆட்சி முதல் இன்றைய கால கட்டம் வரை சித்தரித்து நிற்கின்றது.

எல்லாள மன்னனின் காலத்தில் ஈழத் தமிழர் தம்மைத் தாமே ஆட்சி செய்த உயர் நிலை.

ஐரோப்பியரின் ஆட்சியிலே ஈழத்தமிழர் தாழ்ந்த நிலை.

சிறீலங்காவின் ஆட்சியிலே தமிழர் அடி, உதை வாங்கும் கடை நிலை.

கரும்புலிகளின் தியாகத்தை, விடுதலையின் வரவை இன்னொரு ஊர்தி கூறிச்சென்றது.

மக்கள் வெள்ளம் பின் தொடர தேசியத் தலைவன் வழிகாட்டிச் சென்றார்.

உலகத்தமிழனுக்கு ஓர் எடுத்துக்காட் டாய், தமிழனின் அடிமைச் சாசனத்தை மாற்றி எழுதும் மாவீரனின் மாபெரும் உருவப்படம் எடுத்து வரப்பட ஈழத்தமிழரின் பேரணி நடக்கின்றது. ஆயிரம்...! இரண்டா யிரம்...! மூவாயிரத்தையும் தாண்டிவிட்ட ஓர் நீண்ட வரிசை. எத்தனை சுலோகங்கள்! "தமிழீழம் எங்கள் தாயகம்" "சர்வதேசமே தமிழீழத்தை அங்கீகரி", "சிறிலங்கா இராணு வமே தமிழீழத்தை விட்டு வெளியேறு" கன்னத்தில் அறைந்தாற் போன்ற சுலோகங் கள். ஈழத்தமிழர்கள் இப்போ மாறிவிட்டார் கள். அவர்கள் இப்பொழுதெல்லாம் உரிமை களை கெஞ்சிக் கேட்பதில்லை. அறைந்து தான் கேட்கிறார்கள்.

பேரணியின் இரு மருங்கிலும், கழுத் திலே சிகப்பு - மஞ்சள் வர்ணங்களிலான கழுத்துச் சால்வைகள் கட்டிய மேற்பார்வை யாளர்கள் அணிவகுத்துச் செல்ல பேரணி நகருகின்றது. பேரணியில் சென்ற ஒவ்வொ ருவர் முகத்திலும் ஈழம் விரைந்தே வர வேண்டும் என்கின்ற உறுதியான ஆவேச உணர்ச்சி ஒளிர்கின்றது.

ஈழத் தமிழனின் பேரணிக்காக மழை முகில்களையெல்லாம் துரத்தி விட்டு ஒளிர்ந் தான் சூரியபகவான். மழை முகில்கள் அவ சர அவசரமாக ஈழத்தை நோக்கி ஓடுகின் றன சேதி சொல்ல.

விக்ரோறியா மாநில பாராளுமன்றத் தைச் சென்றடைந்த பேரணியைத் தேசியத் தலைவர் பார்ப்பதான போருவகையில் மஞ்சள் கூட்டம்.

பாராளுமன்றின் முன் அவுஸ்திரேலிய பிரதம மந்திரியின் சார்பில் வந்த பிரதிநிதி யிடம் பேரணியின் கோரிக்கைகளை கைய ளிக்கிறார் பேராசிரியர் எலியேசர்.

"ஈழம் அங்கு மலர நாம் இங்கு ஒன்று படுவோம்"

ஜேர்மனியில் திலீபனின் எட்டாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் நடைபெற்றன. அந்நிகழ்வுகளின் சில காட்சிகள்







www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அபத்தமும் அர்த்தமும்

## பிரம்மஞானி

மனித இருப்பு நிலையின் தவிர்க்க முடியாத நிர்ப்பந்தமாக, தேவைகள் மனிதர்களை ஆட்கொண்டு நிற்கின்றன. சீவியத்திற்கு ஆதாரமான தேவைகளை நிறைவு செய்யும் எத்தனிப்பாகவே மனிதர்கள் செயற்படுகிறார்கள். உழைக்கிறார்கள். உழைப்பால் மனித குலம் வளர்ச்சி பெற்று முன்னேற, தேவைகளின் நிர்ப்பந்தமும் விரிவு பெற்று வளர்கிறது. என்றுமே நிறைவுகாண முடியாத ஒன்றாக, தணிக்கத் தணிக்க பற்றி எரியும் தீயாக, தேவைகளின் பரிமாணம் விரிந்து செல்கிறது. தேவைகள் பெருகி நிறைவு பெறாத நிலையில் பற்றாமை (Scarcity) பூதாகரப் பிரச்சினையாக உருப்பெறுகிறது. பற்றாமை என்ற வாழ்நிலை உண்மையை அடிப்படையாகக்கொண்டு சமூக உலகத்து முரண்பாடுகளை விளக்க முனைகிறார் சாத்தர்.

இந்தப் பூமியால் சுமக்க முடியாத அளவிற்கு மானிடத்தின் தேவைப் பளு பல்கிப் பெருகி வருகிறது. வாழ்வோர் தொகை பெருகிவர, வாழும் வசதிகள் அருகிப் போகிறது. எல்லோருக்கும் எல்லாம் போதுமானதாகக் கிடைப்பதில்லை. இருப்பதையெல்லாம் ஒரு சிலர் பிடுங்கிக் கொள்ள இல்லாமை மற்றவர்களைத் தீண்டுகிறது. பற்றாமையின் அழுத்தத்தால் மனித உலகத்தில் அநீதியும் அராஜகமும் புகுந்து கொள்கிறது. மனித உறவுகளில் முரண்பாடும் மோதலும் தோன்றுகிறது. போதாமையின் கோரப்பிடிக்குள் சிக்குண்டு கிடக்கும் இந்த உலகத்தில் மனிதனே மனிதனுக்கு விரோதியாக மாறிவிடுகிறான் என்கிறார் சாத்தர்.

எல்லோரும் வாழவேண்டும் எப்படியோ வாழ வேண்டும். மாளாது வாழவேண்டும். ஆனால் எல்லோரும் நிறைவோடு, நிம்மதியாக வாழ்வதற்கு இடையூறாக பற்றாக்குறை நிலவுகிறது. போதாமை என்ற கொடுமை மனித வாழ்வை ஒரு போராட்ட களமாக மாற்றி விடுகிறது. நாளாந்த சீவியத்திற்காக மனிதர்களிடையே கடும் போட்டி எழுகிறது. பிணக்குகள் தோன்றுகின்றன. வன்முறை வெடிக்கிறது. மனிதனின் பிரதான எதிரியாக மனிதன் மாறுகிறான். தான் வாழ்ந்தால் போதும் என்ற சுயநலத்துடன் மனிதன் மனிதனுக்கு எதிராகப் போர் தொடுக்கிறான். போதாமை, மனிதாபிமானத்திற்கும் மனுநீதிக்கும் சமாதிகட்டி விடுகிறது. உலகில் அதர்மம் தலை தூக்குகிறது. ஒடுக்குமுறையும், சுரண்டல் முறையும் தாண்டவமாடுகிறது. பசி, பட்டினி, பஞ்சம், போர், புரட்சி, இனக் கொலை என்ற கொடுமைகள் தலைவிரித்தாடும் நரக உலகமாக மனித உலகம் மாறிவிடுகிறது. இவ்விதம், போதாமை என்ற பிரச்சினையை முதன்மைப்படுத்தி, மனித வாழ்வை அவலங்கள் நிறைந்த துன்பியல் வரலாறாக சித்தரிக்க முனைகிறார் சாத்தர்.

சாத்தரின் ஆய்வில் பற்றாமை என்ற மனித இருப்புநிலை இயங்கியல் இயக்கத்திற்கும் களம் அமைத்துக் கொடுக்கிறது. பற்றாக்குறையை நிவர்த்தி செய்யவே மனிதர்கள் உழைக்கிறார்கள்; செயற்படுகிறார்கள். எனவே, மனித செயற்பாட்டு சக்தியாக சாத்தர் கற்பிக்கும் இயங்கியல் இயக்கத்திற்குப் போதாமை அடித்தளமாக இருக்கிறது. இந்த வகையில் மனித வரலாற்று இயக்கத்தின் எதிர்மறை விதியாக (Principle of negativity) போதாமை அமையப்பெறுகிறது என்பது சாத்தரின் வாதம்.

பற்றாமை என்ற வாழ்நிலைப் பிரச்சினையை மையமாகக்கொண்டு மனித உலகத்தின் சகல முரண்பாடுகளையும் விளக்க முனைகிறார் சாத்தர். இன்றைய உலகத்தின் அநீதிகளுக்கு எல்லாம் பற்றாமையே மூலக் காரணி என்ற ரீதியில் அவரது விளக்கம் அமைகிறது. இந்தப் பார்வை எந்தளவிற்குச் சரியானது? இது மார்க்சிய வரலாற்று பொருளிய நோக்கிற்கு ஒத்திசைவாக அமைகிறதா? என்பது பற்றிப் பார்ப்போம்.

பற்றாமை என்பது மனிதர்கள் எதிர்கொள்ளும் ஒரு ஜீவாதார பிரச்சினை என்பதை எவரும் மறுக்க முடியாது. இந்தப் பிரச்சினை பூவுலகின் புறநிலைகளால் பிறக்கவில்லை. இயற்கையின் வளங்கள் வரண்டுபோனதால் தோன்றவில்லை. இது மனிதர்களால் உருவாக்கப்படும் பிரச்சினை. மனிதர்கள் படைத்த பொருளுலகில், மனிதர்கள் வகுத்துக் கொண்ட பொருளுற்பத்தி உறவுகளிலிருந்து எழுந்த பிரச்சினை. வாழ்நிலைத் தேவைகளை நிவர்த்தி செய்ய மனிதர்கள் அமைத்துக் கொள்ளும் அநீதியான உற்பத்தி உறவுகளிலிருந்தே பற்றாமை தோன்றுகிறது. எனவே, பற்றாமையிலிருந்து சமூக அநீதிகள் தோன்றுவதாக வாதிப்பது தவறு. மாறாக, சமூக அநீதிகளிலிருந்தும் சமத்துவமற்ற மனித உறவுகளிலிருந்தும், பற்றாமை தோன்றுகிறது எனக் கொள்வதே சரியானதாகும்.

அநீதியான, சமத்துவமற்ற சமூக உறவுகளுக்கு தனியார் சொத்துடமையே காரணம் என்பதை மார்க்சிய வரலாற்றுப் பொருளியம் விளக்குகிறது. சாத்தருக்கு இது தெரியாததல்ல. உற்பத்தி சாதனங்களுக்கு உரிமையாளர், உரிமையற்றோர் என்ற ரீதியில், அதாவது பொருளுடையார், பொருளற்றார் என்ற அடிப்படையில் அமையப் பெறும் உற்பத்தி உறவுகள் மனிதர்களை முரண்பட்ட வர்க்கங்களாகப் பிளவுபடுத்திவிடுகிறது. சொத்துடமையின் அடிப்படையில் எழும் அநீதியான பொருளுற்பத்தி உலகில், உழைப்பவனுக்கு உழைப்பின் பயன் கிட்டுவதில்லை. அவனது உழைப்புச் சக்தியானது பொருள்களில் பொதிந்து, பொருள்மயமாகி, பண்டமாகி, பணமாகி, இலாபமாகி, உழைக்காத வேறொருவனுக்கு, அதாவது சொத்துடமையாளனுக்குச் சென்றடைகின்றது. இதனால், தான் படைத்த பொருளுலகிலிருந்து உழைக்கும் மனிதன் அந்நியமாகி நிற்கிறான். தனியார் சொத்துடமை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிலவும் வர்க்க முரண்பாட்டு உலகில் பொருளுடையவனைப் போதாமை தீண்டுவதில்லை. தேவைக்கு மிஞ்சிய செல்வமும் பொருளும் சொத்துடமை வர்க்கத்திடம் குவிகிறது. இதனால், சொத்துடமையற்ற உழைக்கும் வர்க்கம் வாழ்வின் தேவைகளை நிறைவு செய்ய முடியாது இன்னல் படுகிறது. எனவே, பற்றாமை என்பது பாட்டாளிவர்க்கத்தை மட்டுமே பீடிக்கும் பிணி. மார்க்சிய வரலாற்றுப் பொருளியம் இந்த உண்மையை புலப்படுத்திக் காட்டுகிறது. சாத்தரின் ஆய்வு பற்றாமை என்ற பிரச்சினையை பொருளுற்பத்தி உலகிற்கு எடுத்துச் செல்லவில்லை. வர்க்க முரண்பாட்டுக் களத்திலும் நிறுத்திப் பார்க்கவில்லை. மாறாக, பற்றாமையை வர்க்க வேறுபாட்டிற்கு அப்பாலான மானிடத்தின் பொதுப் பிரச்சினையாக சாத்தர் பார்க்கிறார். மனித வாழ்வின் அவலங்களுக்கு எல்லாம் அதனை அடிப்படையாகக் காண்கிறார். இந்தப் பார்வை மார்க்சிய வரலாற்றுப் பொருளியத்தைத் தொட்டு நிற்கவில்லை.

மார்க்சிய வரலாற்றியல், சமூக உலகத்தை முரணியங்கள் நிறைந்த போராட்டகளமாகக் காண்கிறது. இங்கு வர்க்க முரண்பாடும், அதன் அடிப்படையில் எழும் வர்க்கப் போராட்டமும் வரலாற்று அசைவியக்கத்தின் உந்து சக்தியாக அமைகிறது. ஆனால் சாத்தரின் ஆய்வு சமூக உலகத்து முரணியங்களுக்குப் புறம்பாக, பற்றாமை என்ற இருப்பு நிலையில் இயங்கியலைப் புகுத்த முனைகிறது. அத்துடன் பற்றாமையை மனித வரலாற்று இயக்கத்தின் எதிர்மறை விதியாகவும் காண்கிறது. இது மார்க்சிய இயங்கியல் நோக்கிற்கு முரணானதாகும்.

சாத்தரின் Critique of Dialectical Reason என்ற நூல், மார்க்சிய வரலாற்றியலின் கருத்துப் பரப்பிற்குள் நின்று மனித மெய்யுண்மையைத் தேடவில்லை. மாறாக அவரது ஆய்வு மார்க்சியத்தின் மையக் கருத்துக்களுக்குப் புறம்பாக நின்று மனித வாழ்வையும் வரலாற்றையும் ஒரு துன்பியல் நாடகமாக சித்தரிக்க முனைகிறது. சாத்தரின் இயங்கியற் பார்வையும் சமூக வாழ்வின் எதிர்மறைகளையே முதன்மைப்படுத்த முனைகிறது. பற்றாமை என்ற கருத்துருவமும் இந்தக் கைங்கரியத்தையே செய்கிறது. இந்த நூலில் அவர் கையாளும் இன்னொரு பூடகமான கருத்தும் மானிடத்தின் அவல நிலையையே எடுத்துரைக்கின்றது. செயற் - பொருண்மம் (Practico - Inert) என்ற இந்தக் கருத்துருவம் பற்றி இங்கு சுருக்கமாகப் பார்ப்போம்.

பற்றாமையின் இரும்புப் பிடிக்குள் சிக்குப் பட்டிருக்கும் மனிதர்கள் தமது வாழ்நிலைத் தேவைகளை நிறைவு செய்ய உழைக்கிறார்கள். தனித்தும் கூட்டாகவும் செயற்பாடுகளில் ஈடுபடுகிறார்கள். காலம் காலமாக நிகழ்ந்துவரும் இந்த மனித உழைப்பால், மனித செயற்பாடுகளால், உலகின் பொருளியப் புறநிலை மாறுகிறது. இந்த மாற்றத்தின் விளைவாக ஒரு புதிய பொருளுலகம் தோன்றுகிறது. மனிதனால் சிருஷ்டிக்கப்பட்ட, மனித படைப்புக்களைக் கொண்ட இந்தப் பொருளுலகை செயற் - பொருண்ம உலகம் என வர்ணிக்கிறார் சாத்தர். ஆக்க நோக்கத்துடன், மனிதர்கள் இந்தப் பொருண்ம உலகத்தைப் படைத்தபோதும் அது மனிதர்களுக்கு விரோதமான எதிர்மறைச் சக்தியாக உருவாக்கம் பெறுகிறது. மனித கட்டுப்பாடுகளிலிருந்து விடுபட்டு, தனித்துவம் பெற்ற ஒரு ராட்சத சக்தியாக மனிதர்கள் மீது ஆதிக்கம் செலுத்துகிறது. இதனால், தான் படைத்த பொருளுலகத்திற்கே மனிதன் அடிமைப்பட நேர்ந்துவிடுகிறது என்கிறார் சாத்தர். மனிதர்கள் இயந்திரங்களைப் படைக்கிறார்கள். தொழிற்துறை இயந்திர மயமாகிறது. இந்த இயந்திர உலகம் மனித கட்டுப்பாட்டிற்கு மிஞ்சிய பொருளிய சக்தியாக வளர்ந்து மனித வாழ்வையே நிர்ணயிக்கும் அளவிற்கு விஸ்வரூபப் பரிமாணம் பெற்றுவிடுகிறது. இவ்விதம் உதாரணங்களைக் காட்டி, மனிதன் படைத்த பொருளுலகம் மனிதனையே ஆட்டிப்படைக்கும் நாசகார சக்தியாக உருப்பெற்றுள்ளதாக சாத்தர் கூறுகிறார்.

தேவைகளை நிறைவு செய்ய மனிதன் படைக்கும் உற்பத்திச் சாதனங்களும், கருவிகளும், உற்பத்திப் பண்டங்களும், ஒட்டுமொத்தத்தில் மனித உற்பத்தி உலகம் அனைத்துமே அழிவு சக்தியாக, மனிதர்களை நசுக்கும் ஆதிக்க சக்தியாக உருவகம் பெறுகிறது என்ற சாத்தரின் சித்தரிப்பு மிகைப்படுத்தப்பட்டது என்றே சொல்ல வேண்டும். மனித உற்பத்தி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

போராளிக் கவிஞர் "பொன்னிலா" ஆடும் கடலலைகளிலே ஓர் அழியாத காவியம் எழுதியிருக்கிறார்.

தமிழீழக் கடலலைகளைக் காணும் எவர் கண் முன்னாலும் நிச்சயம் இந்தக் கரும்புலிகள் முகம் சிரித்து வருவார்கள்.

'இலக்கியம் போற்றிடும் எம்மவர் போர்த்திறன்' - வ. ஆ. அதிரூபசிங்கம், தமிழனின் வீரவரலாறுகள் வெறும் புகழுரைகள் அல்ல என்கிறது. ஆசிரியரின் ஆளுமை கண்டு பாராட்டுகிறேன். தமிழன் கண்ட வீரவரலாறுகளையும் வீர வாழ்வியல்களையும் எரிமலையில் தொடர்ந்து எழுதுமாறு தாபக அன்புடன் வேண்டுகிறேன்.

"அபத்தமும் அர்த்தமும்" - பிரம்மஞானி. எரிமலைக்கு இது ஒரு புதிய அம்சம். கனமான விடயங்களை எளிமையாக்கி தருகிறார். Albert Camus அல்பேர்ட கம்யூ என்னும் இருப்பியவாதி எழுதிய நூல்கள் பற்றிய விமர்சனக்குறிப்புக்கள் பயனுள்ளவையாகும்.

'மாங்கிளியும்...' கவிஞர் காசி ஆனந்தன். அறிமுகம் வேண்டாத கவிஞர். அந்த வற்றாத நதியைப் பார்த்து இந்த ஊற்றுப்பேனா வாழ்த்துக் கூறுவதா?

'... ஊர்க் கடிதம் படிக்கையிலே
விம்மி நெஞ்சு வெடிக்குது
போர்ப்புலிகள் பக்கத்திலே
போக மனம் துடிக்குது......'

ஈழத்தமிழனின் இன்றைய வாழ்வுகளை இந்த வரிகளுக்குள் சிறைப்பிடிக்கின்றார். கவிஞரின் ஆற்றல் நாம் அறிந்தவாறே!

தமிழீழ எல்லைகள், வெண்புறாவிலிருந்து, ஊருக்கு திரும்புதல், தோழர்கள் சிறுகதை ஆகிய ஆக்கங்கள் இதழை மேலும் அலங்கரிக்கின்றன.

எரிமலை என்றால் போதும் எல்லோரும் இரு கைகள் கொண்டு ஏந்துகிறார்கள். காரணம் இலக்கிய ஈடுபாடா? அரசியல் ஆர்வமா? இல்லை ஈழத்தமிழனின் இதயம் அதில் துடிக்கின்றது என்பதாலாகும். வாழ்க பல்லாண்டு! வளரட்டும் உன் தொண்டு!

**என்றும் இனிய அன்புடன்**
**துறையூரான்**

விடுதலைப்புலிகளின் குரலாக வரும் தங்கள் சஞ்சிகை மேலும் வளர வாழ்த்துகிறேன். விடுதலைப்புலிகள் இயக்கத்தில் நானும் இணைய எண்ணுகிறேன். என் ஆர்வம், ஈடுபாடு ஆகியவற்றை ஒரு கவிதை மூலம் வெளிப்படுத்தியுள்ளேன்

தமிழீழத்திற்காக நான் என் உயிரை தியாகம் செய்ய கடமைப்பட்டுள்ளேன்.

## விடியல்

பார்க்கத் தானே போகிறோம்
சுதந்திர தமிழீழத்தை
கேட்கத் தானே போகிறோம்
விடுதலை கீதப் பாடலை
புலிகளே புலிகளே
நெஞ்சுயர்த்துவீர் என்றும்
வீரம், துணிவு, எமதென
பெருமை கொள்வீர்
சோம்பி நிற்கும் இளைஞர்களே!
திரும்பிப் பாருங்கள்
புலிகளின் தியாகத்தை
எண்ணிப் பாருங்கள்
எதிர்த்து விட்டு ஓடிடும்
எதிரிகளே கொஞ்சம்
நில்லுங்கள் - புலிகளின் முழக்கத்தை
கேட்டுச்செல்லுங்கள்

**ச. வேல்முருகன்**
**தமிழ்நாடு**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உலகத்தை இவ்விதம் எதிர்மறையாகக் காண்பது தவறு. முதலாளியத்தின் கண்மூடித்தனமான உற்பத்திப் போக்கு, பூமியின் வளங்களை அழித்தும், இயற்கையின் சூழலை மாசுபடுத்தியும், மனித வாழ்விற்குப் பங்கம் விளைவிப்பதாக அவர் கூறியிருந்தால் அதனை ஏற்றுக் கொள்ளலாம். அன்றி, மனிதனால் உற்பத்தி செய்யப்படும் நவீன ஆயுதங்கள், மானிடத்திற்கு அழிவை விளைவிக்கும் நாசகாரச் சக்தியாக உருப்பெற்றுவிட்டது என்றால் அதனையும் மறுக்க முடியாது. ஆனால், மனிதர்களின் உழைப்பு சக்தியால், படைப்பாற்றலால், ஆக்கபூர்வ நோக்கில் கட்டியெழுப்பப்படும் சமூக உற்பத்தி உலகத்தை மனிதர்களுக்கு அந்நியமான ஆதிக்க சக்தியாகக் காண்பது அபத்தமானது.

இந்த நூலில், சாத்தர் நடத்தியுள்ள சமூக விசாரணை, முதலாளிய சமூக உலகத்தின் முரண்பாட்டு முடிச்சுகளை கட்டவிழ்த்துக் காட்டவில்லை. திண்ணியமான சமூக மெய்யுண்மைகளை ஆழமாகப் பார்க்கவில்லை. அவரது ஆய்வு, சமூக அறிவியல் தளத்தில் நிலைகொள்ளாது, மனித வாழ்நிலை அவலங்களை மட்டும் சித்தரிக்கும் இருப்பிய விவரணங்களாகவே அமைகிறது. பற்றாமையின் கோரத் தாண்டவமும், அதனால் எழுந்துள்ள அநீதியும், அராஜகமும், பண்ட உலகத்தின் ஆதிக்க அழுத்தமும், அதன் அழிவுப் போக்குமாக சாத்தர் வரைந்து காட்டும் மனித உலகம் கொடுமையும் துன்பமும் நிறைந்தது. இந்த உலகத்தில், மனித முனைப்புகளுக்கு அப்பால், பொருளிய எதிர்மறை சக்திகளின் ஆதிக்கமே மேலோங்கி நிற்கிறது. இந்த இருண்ட உலகிலிருந்து மானிடத்திற்கு விடிவு இருப்பதாகவும் தெரியவில்லை. மனித விமோசனத்திற்கான நம்பிக்கைகளையும் சாத்தரின் எழுத்து தகர்த்துவிடுகிறது.

சமூக உலகத்தில், தனிமனிதனின் இருப்புநிலைக்கு இடம் தேடும் இந்தப் பரிசோதனை முயற்சி தோல்வியில் முடிகிறது. இதுபற்றி இனிப் பார்ப்போம்.

சாத்தரின் நூல், பற்றாமை என்ற இருப்புநிலையை வரலாற்று இயக்கத்தின் புறநிலைத் தளமாகக் கொண்டு சமூக உலகத்தை ஆய்வு செய்ய முனைகிறது. எல்லா ஆய்வுகளும் 'வேரிலிருந்து' தொடங்கவேண்டும் என்பது சாத்தரின் நிலைப்பாடு. சமூகம் என்ற விருட்சத்தை தாங்கிநிற்கும் வேர்களாக தனிமனிதர்களை அவர் கருதினார் போலும். ஆகவேதான் சாத்தரின் சமூக விசாரணை தனிமனிதர்களிலிருந்து தொடங்கி சமூக உலகத்தினுள் பிரவேசிக்கிறது. 'மனித செயற்பாடு' என்ற சாத்தரின் கோட்பாடு, தனிமனிதனையும் சமூகத்தையும் இணைக்கிறது. தனிமனிதச் செயற்பாடு மற்றவர்களது செயற்பாடுகளுடன் சங்கமிக்கும்பொழுது, அது கூட்டு மனித உறவாகப் பரிணமிக்கிறது. இந்தக் கூட்டுறவிலிருந்து சமூகக் குழுக்கள் தோன்றுகின்றன. இந்த சமூகக் குழுக்கள் பல்வேறு வடிவங்களில், சிறிதும் பெரிதுமான பல்வேறு அமைப்புக்களாக இயங்குகின்றன. இவ்விதம் தனிமனிதர்களது செயற்பாடுகள் அனைத்தும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையதாகப் பின்னப்பட்டு ஒட்டுமொத்த முழுமை பெறும் பொழுது அது சமூகம் என்ற வடிவத்தைப் பெறுகிறது. இந்த வகையில், தனிமனிதர்களைக் கொண்ட கூட்டமாகவே சமூகத்தைக் காண்கிறார் சாத்தர்.

சமூகம் பற்றிய வரையறையில் சமூகத்திற்கு மேலாக தனிமனிதனுக்கே முதன்மை கொடுக்கப்படுகிறது. தனிமனிதனை சமூகத்தின் அச்சாணியாக நிறுவிவிட வேண்டும் என்ற முனைப்பில் சமூக உலகத்

# இயற்கையும் புலம்பெயர் வாழ்வும்

**கே. எஸ். துரை**

"ஆயிரம் வருடங்களுக்கு ஒரு தடவையே ஒரு மகாகவி தோன்றுகிறான்!" என்று கூறுவார்கள். இதுவரை உலகம் எத்தனையோ பேரை மகாகவிகளாக அடையாளம் கண்டுவிட்டது. இவர்கள் தமது வாழ்வில் ஆற்றியிருக்கும் காரியங்களைத் தொகுத்துப் பார்ப்போமேயானால் அவர்கள் எல்லோரும் நேசித்த அடிப்படை விஷயம் சுதந்திரம் என்பதை இலகுவாக அறிந்துகொள்ளலாம்.

சுதந்திரத்தை நேசிக்கும் ஒவ்வொரு மானிடனும் இயற்கையை ஆழ்ந்து நோக்கி, தன் வாழ்க்கையானது இயற்கையோடு கொண்டுள்ள பொருத்தப்பாட்டை அடையாளங் காணத் தவறுவதில்லை. இயற்கை என்பது அழகான ஓவியம் போல. நாம் பார்த்தும், கேட்டும் படித்துக் கொள்ள வேண்டிய சகல போதனைகளையும் தன்னகத்தே கொண்டுள்ள இயற்கை புலம் பெயர் மக்களுக்காகவும் சில செய்திகளைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறது போலும்.

சுதந்திரத்தோடு சம்பந்தப்பட்ட நமது வாழ்வுக்கும், பறவைகளுக்கும் எப்போதுமே வலிமையான தொடர்புள்ளது. பறவைகள் என்னும் உயிரினம் மனிதனைவிட பல மில்லியன் வருடங்கள் அதிகப்படியான வரலாற்றைக் கொண்டவையாகும். சுதந்திரத்தின் மறு வடிவமான பறவைகளின் வாழ்வில் நாம் படிக்க வேண்டிய பாடங்கள் நிறையவே உண்டு. ஆயிரம் பறவைகள் வானத்தில் ஒன்றாகப் பறந்தாலும்; அவை மீன்களைக் கண்டதும் முண்டியடித்துக்கொண்டு கூட்டமாகக் கடலில் விழுந்துவிடுவதில்லை. இலட்சக்கணக்கான மீன்கள் போனாலும், ஒவ்வொரு பறவையாக விழுந்து, ஒவ்வொரு மீனைத்தான் பிடிக்கும். தூக்கணாங் குருவிகள் அன்றிலிருந்து இன்று வரை தமது கூடுகளில் எந்த வித மாறுதல்களையும் செய்யவில்லையே ஏன்? இதுவே வளங்களைத் திட்டமிட்டுப் பயன்படுத்தும் பறவைகளின் வாழ்வியல் தொழில்நுட்பமாகும். உயிரின வரலாற்றில் இளையவனான மனிதன் இந்த நுட்பத்தை இதுவரை பூரணமாகப் படித்து முடிக்கவில்லை.

நமது தாய்நாடான தமிழீழம் நாம் வாழ்ந்த அழகிய சிறு கூடு. அந்தக் கூடு ஆதிக்க சக்தி கொண்ட மிருகங்களாலும், இரும்புப் பறவைகளான விமானங்களாலும் சிதிலப் படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தின் தனித்துவமான மெய்நிலையை சாத்தர் மறுத்துவிடுகிறார். அத்துடன் தனிமனிதச் செயற்பாடுகளின் கூட்டுவடிவமாகவோ, அல்லது தனிமனிதர்கள் கூடிவாழும் கூட்டுக் குடும்பமாகவோ, அன்றி தனிமனிதர்கள் அணிசேர்ந்துகொள்ளும் மக்கள் திரளாகவோ சமூகத்தைச் சித்தரித்துக்காட்ட முனைவதும் தவறானதாகும். சமூகமானது தனிமனிதர்களின் சேர்க்கையால் உருவாக்கம் பெறுவதல்ல. தனிமனிதர்களை உள்ளடக்கியதாக சமூகம் அமையப்பெற்ற பொழுதும், அது தனிமனிதர்களுக்குப் புறம்பான, தனித்துவமான மெய்நிலையைக் கொண்டது. சிக்கலான சமூக உறவுகளால் பின்னப்பட்ட கட்டமைவாக, வரையறுக்கக்கூடிய சில பண்புகளைக் கொண்ட ஒழுங்கமைவாக, சமூக உலகம் அமையப்பெற்றிருக்கிறது. இந்த சமூக மெய்யுலகை தனிமனிதனிலிருந்து, தனிமனிதச் செயற்பாடுகளிலிருந்து தரிசித்துக்கொள்ள முடியாது.

சாத்தரின் சமூக தத்துவம், மார்க்சிய வரலாற்றுப் பொருளியத்தின் அறிவியற் தளத்திலிருந்து எழுதப்படவில்லை. அவரது சமூகப்பார்வை மார்க்சிய சமூகவியலின் அடிப்படைகளுக்கு முரணானதாகவே அமைகிறது. கார்ள் மார்க்ஸ் சமூக உலகத்தை தனிமனிதர்களின் ஒன்றியமாகக் காணவில்லை. மனிதர்களின் பொருளிய வாழ்விலிருந்தும், உறவுகளிலிருந்தும் சமூக உலகத்தை கட்டியெழுப்புகிறார் மார்க்ஸ். மனிதர்களின் பொருளிய வாழ்விற்கு பொருளுற்பத்தியே ஆதாரமானது. பொருளுற்பத்தியின் மையமாக பொருண்மிய அமைப்பு அமைகிறது. எனவே, பொருண்மிய அமைப்பையே சமூகத்தின் திண்ணியமான அடித்தளமாகக் கொள்கிறார் மார்க்ஸ். அவரது ஆய்வில், சமூகமானது, பொருண்மிய அடித்தளத்தையும், அந்த அடித்தளத்தின் மீது நிலைகொண்டு நிற்கும் பல்வேறு சமூக அலகுகளையும் கொண்ட கட்டமைப்பாக உருவாக்கம் கொள்கிறது. இந்தக் கட்டமைப்பை முழுமையுடையதாக, இயங்குநிலையுடையதாக அவர் காண்கிறார். பொருளுற்பத்தித் தளத்தில் எழும் முரணியங்கள் சமூக அசைவியக்கத்தின் உந்துசக்தியாக இயங்கி, சமூக மாற்றத்தை நிகழ்த்தி, மனித வரலாற்றை நகர்த்துகிறது. மார்க்சிய தரிசனமானது, மனித வரலாற்றிற்கு விளக்கமளிக்கும் ஆழமான சமூகப் பார்வையைக் கொண்டது. மார்க்சிய சமூகவியல் மனிதர்களைத் தனிமனிதர்களாகக் கொள்ளாமல் சமூக உறவுகளைத் தாங்கி நிற்கும் சமூகப் பிறவிகளாகவே காண்கிறது. “தனிமனிதர்களைக் கொண்டதல்ல சமூகம். சமூக உறவுகளின் ஒட்டுமொத்த முழுமையாகவே சமூகம் அமையப்பெறுகிறது. இந்த உறவுகளையே தனிமனிதர்கள் வெளிப்படுத்தி நிற்கிறார்கள்” என்கிறார் மார்க்ஸ்.

தனிமனிதனையோ, அகமனிதனையோ (HUMAN SUBJECTIVITY) ஆய்வுப் பொருளாக கார்ள் மார்க்ஸ் எடுத்துக்கொள்ளவில்லை. சமூக வாழ்வும், வரலாற்றுப் பொருளியத்தின் ஆய்வுப் பொருளாகும். எனவே, மார்க்சிய சமூகவியல் புலப்படுத்தும் மனிதன், சமூக சக்திகளால் நிர்ணயிக்கப்படும் சமூக மனிதன். முதலாளிய உற்பத்தி உலகை ஆய்வு செய்யும் மார்க்சின் ‘மூலதனம்’, தனிமனிதர்களின் இருப்பு நிலையை சமூகக் கட்டமைப்பின் உறவுநிலைகளில் நிறுத்திவிடுவதைக் காணலாம். இங்கு பொருளிய உறவுகளைத் தாங்கி நிற்கும் மனிதர்களையே நாம் சந்திக்க முடிகிறது. பொருண்மிய கருத்துக்களின் மனிதவுருவங்களாகவே (PERSONIFICATIONS OF ECONOMIC CATEGORIES) ‘மூலதனத்தில்’ மனிதர்கள் சித்தரிக்கப்படுகிறார்கள். இந்த மனிதர்கள்

---

இதனால் அந்தக் கூட்டில் வாழப் பயந்து, பல பறவைகள் மேலைத் தேய இரவல் கூடுகளில் குடி புகுந்தன. இதுவே புலம்பெயர் வாழ்க்கை. ஆனால் மறுபக்கமோ நம்மில் வீரம் செறிந்த பறவைகள் தாயகக் கூட்டைப் பாதுகாக்க தமது இன்னுயிரைத் தந்து போராடின.

காலம் வேகமாக ஓடியது.

இப்பொழுது இரவல் கூடுகளில் வாழும் புலம் பெயர் பறவைகள் பல புதிய குஞ்சுகளைப் பெற்றுவிட்டன. இவைகளுக்குத் தாய் பிறந்த கூடு எதுவென்றே தெரியாது. இரவல் கூடுகளையே தாய்வீடாகக் காண்கின்றன. இந்த இழி நிலையில் நாம் என்ன செய்யலாமென்று இப்போது பலர் அங்கலாய்க்கிறார்கள். இந்தக் கவலைகளுக்கு விடை வேண்டுமானால் நாம் மறுபடியும் பறவைகளையே பார்க்க வேண்டியுள்ளது.

கூட்டைவிட்டு வெளியே போன பறவைகள் இரையோடு, அல்லது சிறு சுள்ளிகளோடுதான் மறுபடியும் கூடு திரும்பும். ஆம்! கூட்டைவிட்டு எவ்வளவு தூரம் விலகிப் போனாலும், இந்தப் பறவைகள் எப்பொழுதும் தமது கூட்டைப் புனரமைப்புச் செய்வதிலேயே கண்ணும் கருத்துமாக வாழும்; வாழ்கின்றன.

இதைப் புரிந்துகொண்டால், புலம் பெயர்ந்து வாழும் ஒவ்வொரு தமிழ்ப் பறவையும் தமது தாயகமாம் சிறு கூட்டை மறுபடியும் அழகாக அமைப்பதற்கு தாம் ஆற்றவேண்டியுள்ள பணிவிடைகளைப் புரிந்துகொள்ளும்.

குயிலின் குஞ்சுகள் காகத்தின் இரவல் கூட்டில்தான் பிறக்கின்றன. இருந்தாலும் அவை எப்போதும் காகங்கள் போலக் கரைவதில்லை. குயில்கள் போலவே கூவுகின்றன. ஆனால் இரவல் கூடுகளில் பிறக்கும் புலம் பெயர் தமிழ்க் குழந்தைகளில் பல காகங்கள் போலவே கரைகின்றன. ஏன்? அவைகளுக்குத் தாய் மொழி தெரியாதாம்!

குயில்கள் காகங்கள் போலக் கரைவதைப் போன்ற கொடுமை உலகில் வேறேதாவது இருக்குமா? இதுவே புலம் பெயர் வாழ்வின் பிரதான அவலம்.

உண்மையில் நாம் இயற்கையிடமிருந்து நிறையவே படிக்கவேண்டியிருக்கிறது. படிப்பு என்ற நினைவு வந்ததும் நமது கனவுகளில் சர்வகலாசாலைக் கட்டிடங்களே பெரிதாக வலம்வரும். இங்கெல்லாம் போனால் நிச்சயமாகப் படிக்கலாம். படிப்பு வேறு; படிக்க வேண்டும் என்பதைப் படிப்பது வேறு. படித்துப் பட்டம் பெற்றவர்கள் உலகில் நிறையவே உண்டு. ஆனால் படிக்க வேண்டும் என்பதைப் படித்துப் பட்டம் பெற்றவர்கள் இதுவரை உலகில் இல்லை. இதற்கான பல்கலைக் கழகங்களை உலகம் இதுவரை கட்டி முடித்ததாகத் தெரியவில்லை.

இயற்கை அந்தப் பள்ளிக் கூடங்களையே அழகாகக் கட்டி வைத்திருக்கிறது. படிப்பதற்குத்தான் மாணவர்கள் இல்லை.

(இன்னும் வரும்....)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொருண்மியக் குறியீடுகளாக, வர்க்க உறவுகளையும் பிரதிபலித்து நிற்கிறார்கள். முதலாளிய உற்பத்தி உறவுகளும், அதன் முரணியக் கோலங்களும், மனிதர்களை அவ் விதமே நிர்ணயித்துவிடுகிறது என்பது மார்க்சின் வாதம்.

பொருளுற்பத்தி உறவுகளின் சங் கிலிப் பிணைப்பால் கட்டுண்டு கிடக்கும் சமூக மனிதனை, பொரு ளாதார மனிதனையே மார்க்சியம் புலப்படுத்திக் காட்டுகிறது என்பது உண்மை. இந்தப் பார்வை, மனி தனை, அவனது அகநிலையின் ஆழத்தில் கண்டுகொள்ளவில்லை என்பதும் உண்மை. சாத்தர் கூறு வது போல, முழு மனிதனை தரி சித்து நிற்கவில்லை என்பதும் சரியா னது. ஆயினும் இதனை வரலாற்றுப் பொருளியத்தின் குறைபாடாகக் கொள்ளமுடியாது. ஏனென்றால், வரலாற்றுப் பொருளியத்தின் ஆய் வுப் பொருள் தனி மனிதனுமல்ல, அகமனிதனுமல்ல. மார்க்சிய வர லாற்றியலின் கருத்துருவக் கட்ட மைப்பு (Conceptual Structure) இவ்வித ஆய்வுக்கு இடமளிக்காது. இந்தக்கட் டமைப்பு சமூக உறவுகளையும் அந்த சமூக உறவுகளில் நிறுத்தப்பட் டிருக்கும் சமூக மனிதர்களையும் மட்டுமே புலப்படுத்திக் காட்டும். அதற்கு அப்பால் சென்று தனிமனி தர்களின் அகவாழ்வை விசாரணை செய்ய முயல்வது மார்க்சீய கோட் பாட்டு வரையறைகளை மீறுவதாக அமையும். ஆயினும், மார்க்சீய கோட்பாட்டு வரம்பிற்குள் நின்று அந்தக் கோட்பாட்டுக் கட்டமை வுக்கு ஒத்திசைவாக புதிய கருத்துரு வங்களை அறிமுகப்படுத்தி, சமூக சூழலில் தனிமனித உருவாக்கம் பற்றிய விசாரணையை மேற்கொள் வது சாத்தியமானதே. ஆனால் சாத் தரின் ஆய்வு இதனைச் செய்ய வில்லை. மாறாக, அவரது சமூக தத்துவம், மார்க்சீய வரலாற்றியலின் அடிப்படைக் கோட்பாடுகளையே திரிபுபடுத்திவிடுகிறது.

மார்க்சிய சமூகவியல் தளத்தில் நின்று கொண்டு, காலம், இடம், சூழல் என்ற புறநிலைகள், எவ்வி தம், தனிமனித சுயத்தின் உருவாக் கத்திற்கு ஏதுவாக அமைகின்றன என்பது பற்றி சாத்தர் விசாரணை செய்யவில்லை. மாறாக, சமூகப் புறநிலை நிர்ப்பந்தங்களுக்கு அகப்ப டாத, சுயாதீனமுடைய தனிமனி தனை, சமூக உலகில் நிறுத்திக் காட்டுவதே சாத்தரின் நோக்கம். இந்த நோக்கில் அவர் வெற்றிபெற வில்லை. தனிமனிதச் செயற்பாட் டையும் அதிலிருந்து பிரவாகம் எடுக்கும் இயங்கியல் இயக்கத்தை யும் அவரது தத்துவம் வலியுறுத்தி நிற்கிறது. அவர் விபரித்துக் கூறும் தனிமனித செயற்பாடும், சாராம்சத் தில், சமூக செயற்பாடுதான் என்ப தையும், அதுவும் ஒரு குறிப்பிட்ட சமூக, வரலாற்றுச் சூழலில் நிகழ் கிறது என்பதையும் அவர் கண்டு கொள்ளவில்லை. ஒட்டுமொத்தத் தில், சாத்தர் சித்தரிக்கும் மனிதன் சமூக மனிதன் அல்ல. சமூகக் குழு வில் ஒருவனாக, சமூகத் திரளில் ஒருவனாக, தனி மனிதனை, சமூக உலகத்தில் அவர் சஞ்சரிக்கவிட்ட போதும், சமூகப் பொருளிய வாழ் வில் காலூன்றி நிற்காதவனாக, சமூக உறவுகளில் சிக்குப்படாதவ னாக, சமூகத்திற்கு அந்நியனாக, தனியனாகவே அவர் மனிதனை சித்தரிக்கிறார். ஆகவே, மார்க்சிய மும் இருப்பியமும் இணைந்து, அக நிலையும் புறநிலையும் புணர்ந்து, உருவாக்கம் பெறும் சாத்தரின் இலட்சிய மனிதனை, முழு மனி தனை, வரலாற்று மனிதனை இந்தத் தத்துவார்த்த நூலில் நாம் காண முடியாது.

சாத்தரின் பிந்திய படைப்புக்கள் தனிமனித சுயாதீனத்தை பிரகடனம் செய்து நிற்கவில்லை. காலத்தை விஞ்சி எழும் விழிப்புணர்வையும் விடுதலையையும் வலியுறுத்தவில்லை. எல்லா மனிதர்களுமே காலத்தின் கைதிகள் என்ற உண்மையை இறுதி யில் சாத்தரால் மறுதலிக்க முடிய வில்லை.

மூவாயிரம் பக்கங்களைக்கொண்ட ஒரு நீண்ட வாழ்க்கைச் சித்திரமாக, குஸ்ராவ் புளோபேர்ட் (GUSTAVE FLAUBERT) என்ற நாவலாசிரியரின் வாழ்க்கை வரலாற்றை எழுதினார் சாத்தர். 'குடும்பத்தின் முட்டாள்' (IDIOT OF THE FAMILY) என்ற தலைப்பில் *1966-ம்* ஆண்டு இந்தப் படைப்பு வெளியாகியது. "இது ஒரு தனி மனிதனின் முழுமையான வாழ்க்கைச் சித்திரம்" என்று முகவு ரையில் குறிப்பிடும் சாத்தர், இருப் பிய, மார்க்சிய கருத்துக்களை மட்டு மன்றி பிரைய்டின் மனப்பகுப்பிய லையும் தனது ஆய்வுக்குத் துணை சேர்க்கிறார். காலம், இடம், சூழல் என்ற புற நிலைகள் ஒரு எழுத்தா ளனின் உணர்வு நிலையிலும், உல கப் பார்வையிலும் விழுத்தும் தாக் கங்களை இந்தப் படைப்பில் மிக வும் ஆழமாக எடுத்து விளக்குகிறார் சாத்தர். இந்த வாழ்க்கை வரலாற் றுச் சித்திரத்தில், பிறைய்டின் கருத் தாக்கமே மேலோங்கி நிற்கிறது. சமூக உறவுநிலைகளில், குடும்ப சூழ் நிலையையும், சிறுபராய வாழ்வை யும் முதன்மைப்படுத்தும் சாத்தர், குடும்ப உறவுநிலைகளில் பதியும் அனுபவ வடுக்கள், புளோபேர்டின் அகவுணர்வுகளையும் ஆளுமையை யும் மட்டுமன்றி அவரது புறவுலகப் பார்வையையும் நிர்ணயித்திருப்ப தாக விளக்குகிறார்.

இந்த நூலின் பெரும் பகுதி புளோ பேர்ட்டின் சிறுபராய வாழ்க்கை வரலாற்றையே ஆழமாகப் பார்க்கி றது. *468* பக்கங்களைக் கொண்ட முதலிரண்டு அத்தியாயங்களும் அவரது சிறுபராய குடும்ப அனு பவங்களையே மிகவும் நுணுக்கமாக விசாரணை செய்கிறது. வயது வந் தோரின் போக்கையும், பார்வையை யும், உணர்வு நிலையையும் சிறுப ராய அனுபவச் சிக்கல்களில் கண்டு கொள்ளும் பிராய்டின் ஆய்வுமுறை மையைத் தழுவி இந்த உள்ளாந்த தேடுதலை நடாத்துகிறார் சாத்தர். சிறுபராய அனுபவ வேர்களிலி ருந்தே புளோபேர்ட்டின் இலக்கியப் படைப்புலகத்திற்கும், படைப்பாற் றல் ஆளுமைக்கும் விளக்கங்கள் கொடுக்கப்படுகிறது.

புறவுலக அனுபவங்களை மனித மனம் உள்வாங்கிக்கொள்கிறது, அக வயப்படுத்திக்கொள்கிறது. குடும்ப சூழலாலும், தனிப்பட்ட உறவுகளா லும் அகவயப்படுத்தப்படும் அனுப வத் திரட்சியாகவே ஒருவனது சுய மும் ஆளுமையும் உருவாக்கம் பெறு கிறது. ஒருவனது படைப்பாற்றலும் சுயானுபவத்திலிருந்தே ஊற்றெடுக் கிறது. புளோபேர்ட்டும், சமூக உல கத்திலிருந்து புறவுலகச் சூழலிலிருந்து தான் உள்வாங்கியதை எல்லாம் சுயானுபவப் பட்டறையில் புடம் போட்டு எடுத்து, அந்த உள்ளார்ந்த அனுபவத்திற்கு எழுத்துவடிவில் புறவடிவம் கொடுத்திருக்கிறான் என்கிறார் சாத்தர்.

ஒட்டுமொத்தத்தில், இந்த வாழ்க்கை வரலாற்றுச் சித்திரம் ஒரு செய்தியைச் சொல்லுகிறது. அதா வது, காலமும் சூழலும் மனிதனை உருவாக்கம் செய்கிறது என்ற உண் மையைச் சொல்லுகிறது.

(முற்றும்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இறந்த தாயிடம் பால் குடித்த குழந்தை

எல்லைப்புறத்தில், கறுப்பளை என்ற பெயர் உள்ள தமிழ்க் கிராமம், சிங்களவர்களாலும் முஸ்லீம் களாலும் முற்றுகையிடப்பட்டது போல் அமைந்திருந்தது. இக்கிராமத்தில் வாழ் பவர்கள் ஏழை விவசாயிகள். இவர் கள் அன்றாடம் கூலிவேலை செய்து தான், தங்கள் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டு வந்தார்கள். ஆரம்பத்தில் இருந்து சிங்கள இராணுவத்தால் இக் கிராமம் ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப் பட்டு வந்தது.



இப்படி கஸ்ட நிலைமைக்குள் வாழ்ந்து வரும் போது ஒரு நாள், நள்ளிரவை நெருங்கிக் கொண்டு இருக்கும் போது, வழமையை விட அதிகமாக வெடிச்சத்தங்களும் செல் சத்தங்களும் அழுஞ்சிப்பொத்தானை எனும் முஸ்லீம் கிராமப் பக்கம் கேட் டன. அந்த அப்பாவி மக்களுக்குத் தெரியாது என்ன நடக்கின்றது என்று. அந்த முஸ்லீம் கிராமத்துக்குள் இருந்த பொலிஸ்நிலையம் மீது, 02-05-92 அன்று சிறப்புத்தளபதி கருணா அம்மான் தலைமையின் கீழ், வானு அண்ணனு டன் 150 பேர் கொண்ட எமது அணி ஒன்று, இரவு 12.10 மணிக்கு தாக்கு தலைத் தொடுத்தது. 12.25 இற்குள் முகாம் எம்மவர்கள் கையில் வீழ்ச்சி அடைந்தது. 11 இராணுவத்தினர் கொல் லப்பட்டதுடன், 11 ரைபிள்களும் எம் மவர்களால் கைப்பற்றப்பட்டன. வீரச்சாவைத் தழுவிய எமது போரா ளியைத் தூக்கிக் கொண்டு முகாமுக்கு நடந்து கொண்டு இருக்கும் போது, கங்கை ஓரம் மருதமர நிழலில் எல் லோரும் அமர்ந்தோம். வானு அண் ணன் "வீரமரணம் அடைந்த போரா ளியை இந்த இடத்தில் எரித்து விட்டு முகாமுக்கு செல்வோம்" என்றார். அதன்படியே லெப்ரினன்ற் யோகரா சாவை எரித்து விட்டு, அந்த இடத் தில் இருந்து மாலை 4.30 இற்குப் புறப் பட்டு முகாமை நோக்கி நடந்து கொண்டிருக்கும் போது, குடிப்பதற்கு நீர் இல்லை போராளிகள் களைத்து விட்டார்கள். அப்போது ஒரு போராளி, "இன்னும் இரண்டு மைல்கள் நடந் தால் கிணறு ஒன்று இருக்குது. அதில் நீர் குடித்து விட்டு களைப்பாறிய பின் முகாமுக்குச் செல்வோம்" என்றார்.

தண்ணீர் குடிக்கும் ஆவலுடன் ஓட்டமும் நடையுமாகச் சென்று கிணறு இருக்கும் இடத்தை அடைந் தோம். தண்ணீர் குடித்து விட்டு களைப்பாறும் நேரம், இரவு 7.00 மணி.

வானு அண்ணன், "முகாமுக்குப் போவதென்றால் இன்னும் 15 மைல் நடக்க வேண்டும். இந்த இடத்தில் தங்கி விட்டு நாளை காலை 5மணிக்கு முகாமுக்குச் செல்வோம்" என்றார். எல்லோரும் அந்த இடத்தில் தங்கி னோம்.

வானு அண்ணன் இருந்த பக்கம் வானொலிச் சத்தம் கேட்டது. நான் அந்த இடத்துக்குச் சென்றேன். புலி கள் தாக்கிய பொலிஸ் நிலையத்துக்கு அருகாமையில் உள்ள 'கறுப்பளை' கிராமம் தாக்கப்பட்டதாகவும், இதில் 65 பொதுமக்கள் கொல்லப்பட்டதாக வும், இதை முஸ்லீம் காடையர்கள் தான் செய்ததாகவும் 'வெரித்தாஸ்' வானொலி அறிவித்தது. எல்லோரும் திகைத்து நின்றனர். வானு அண்ணன் சொன்னார், காலையில் முகாமுக்குச் சென்று 15 போராளிகளை தாக்கப் பட்ட இடத்துக்கு அனுப்புவதாக. யார் யாருக்கு 'சாண்ஸ்' கிடைக் குதோ என்று சொல்லிவிட்டு உறங்கத் தொடங்கினோம்.

மறுநாள் காலையில் 5-மணிக்கு எழும்பி நடக்க ஆரம்பித்தோம். வெயி லுக்கு முந்திப் போகவேண்டுமென்று ஓட்டமும் நடையுமாகச் சென்று பகல் 12 மணிக்கு முகாமை சென்ற டைந்தோம். எல்லோரும் சாப்பிட்ட பின் வானு அண்ணன் சொன்னார் 'லயின்' பண்ணச் சொல்லி. எல்லோ ரும், லயினாக இருந்தோம். மட்டு - அம்பாறைச் சிறப்புத் தளபதி கருணா அம்மான் வந்து, "கறுப்பளை கிராமம், முத்துக்கல் கிராமம் என்ற இரண்டு கிராமங்களும் தாக்கப்பட்டுள்ளன. சிங்கள சிப்பாய்களும் முஸ்லீம் காடை யர்களும் தான் இதைச் செய்திருக்க வேண்டும்." என்று சொல்லி விட்டு 15 போராளிகளைத் தெரிந்தெடுத்தார். அதில் நானும் ஒருவன். பிறகு சொன் னார், "நீங்கள் போய் அந்த இரண்டு கிராமங்களும் என்ன நிலைமையில் இருக்கின்றன என்று அறிந்து வர வேண்டும்."

மறு நாள் காலையில் நாங்கள் புறப்பட்டு நடக்க ஆரம்பித்தோம். எங்கள் முகாமுக்கும் தாக்கப்பட்ட இடத்துக்கும் 56 மைல்கள் தூரத்தை பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. 'போய்சேர்ந்தால் சரி' என்று விட்டு, இரவு பகல் என்று பார்க்காமல் நடந்தோம். இரண்டு நாட்கள் கடந்து விட்டன. மூன்றாம் நாள், தாக்கப் பட்ட இடத்தை நெருங்கும் போது, நாலு ஐந்து பேர் எங்களைக் கண்டு ஓடினார்கள். அவர்களைத் துரத்திப் பிடித்தோம். அவர்கள் தாக்கப்பட்ட கிராமத்தில் இருந்து இராணுவத்துக் குப் பயந்து காட்டில் மறைவதற்கு வந்ததாகச் சொன்னார்கள். அவர் களை ஒரு மர நிழலுக்கு கூட்டிச் சென்று ஊர் நிலைமையைக் கேட் டோம். அவர்களின் கண்களில் இருந்து நீர் வழிந்தது. மனதைத் தேற்றி விட்டு, நடந்த சம்பவத்தைச் சொன் னார்கள். தாக்குதலில் தப்பிய சிங்க ளச் சிப்பாய்களும் முஸ்லீம் காடை யர்களும்தான் இந்தக் கொடூரச் செய லைச் செய்ததாகச் சொன்னார்கள்.

இந்தச் சம்பவத்தின் போது சின்னத் தங்கம் என்றொரு பெண், தன் இரண்டு மாதக் குழந்தையை சிங்களச் சிப்பாய்களிடம் இருந்து காப்பாற்ற வேண்டும் என்று, குழந்தையைத் தூக்கிக் கொண்டு காட்டை நோக்கி ஓடும் போது, ஓடுவதைக் கண்ட சிங்க ளச் சிப்பாய் காட்டுக்குள் மறைவ தற்கு முன் அந்தத் தாயை வெட்டிக் கொலை செய்து விட்டான். அந்தத் தாயின் உடம்பில் இருந்து ஓடிய இரத் தம் அந்தக் குழந்தையைக் குளித்தது போல் நனைத்து விட்டது. சிப்பாய், குழந்தை இறந்து விட்டது என்று நினைத்து விட்டு, போய்விட்டான். தன் மனைவியையும் குழந்தையையும் காணாது தேடிச் சென்ற கந்தசாமி, இறந்த தாயிடம் அந்தச் சின்ன குழந்தை இரத்தத்துக்குள் படுத்துக் கொண்டு பால் குடிப்பதைக் கண் டார். மனைவியையும் குழந்தையை யும் அணைத்து சத்தம் போட்டு அழுதார். சத்தங் கேட்டு வந்தவர்கள் அவர்களைத் தூக்கிச் சென்று அடக் கம் செய்து விட்டு, அந்தக் குழந் தையை மிக அன்பாக வளர்க்கின் றார்கள். குழந்தையின் பெயர் தெரி யாது என்று சொல்லி முடித்தார்கள். தென் தமிழீழத்தில் நடந்த உண்மைச் சம்பவம் இது!

**சோ. நேசன்**

**தமிழ்மாறன்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஜூன் 6
# தமிழீழ மாணவர் எழுச்சி நாள்





தமிழீழத்தில் தமிழீழ மாணவர் எழுச்சி நாள் நிகழ்வுகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்